Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 16 திங்கட்கிழமை (31.12.2012) பக்கங்கள் 20 ஓசை – 092

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு



இல. 187, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

0212219510 (C/1675)



ஓய்வு (08)



மொழியின் சிறப்பு (10)



சோதனை! (11)



தகனம்! (17)



பாய்ந்தது வீதிக்கு! (18)

அச்சுவேலி – பருத்தித்துறை சேவையிலீடுபம்

## தனியார் பேருந்துச் சேவையினர் மூன்று இடங்களில் கைகலப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை தனியார் பேருந்து சேவையினருக்கும் அச்சுவேலி தனியார் பேருந்து சேவையினருக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில் நான்கு பேர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக் கைகலப்புச் சம்பவங்கள், நீர்வேலி அத்தியாயர் இந்துக் கல்லூரியடிப் பகுதியிலும், நல்லூர் சட்டநாதர் கோயிலடியிலும், ஆவரங்கால் பகுதியிலும் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் இக் கைகலப்பு இடம்பெற்றதோடு இரண்டு பேருந்துகளும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. அச்சுவேலி மற்றும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையங்களில் இது சம்பந்தமாக முறையிடப்பட்டுள்ளது. இச் சம்பவத்தில் தமிழ்நாதன் . கார்த்தீபன்

(19) ஆம் பக்கம் பார்க்க

## முரண்பாடுகளைத் தீர்க்கக்கோரி யாழில் தனியார் பஸ்சேவை புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

தனியார் பேருந்துச் சங்கங்களிடையே நிலவும் முரண்பாடுகளைச் சீர்செய்து தரும் வரையில் இன்றிலிருந்து யாழ். மாவட்ட தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கங்கள் அனைத்தும் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபடவுடுள்ளதாக யாழ். பிராநதிய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இணையத்தின் தலைவர் கெங்காதரன் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

பருத்தித்துறை யாழ்ப்பாணம் சாலையில் கடந்த காலங்களில் இணையத்தில் நேரக்கணிப்பாளர்களை ஆவரங்கால், கோப்பாய், முத்திரைச் சந்தி ஆகிய இடங்களில் கடமைக்கு அமர்த்தி பருத்தித் துறையிலிருந்து யாழ்ப்பாணம் (750,751) சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகளுக்கும், அச்சுவேலி, யாழ்ப்பாணம் (759/1)

(19) ஆம் பக்கம் பார்க்க

# இரணைமடு நீர்மட்டம் அதிகரித்தும் விமானப்படைத்தளம் அழியாதது ஏன்?

## வதந்திகளைப் பரப்பவேண்டாம் என்கிறார் பொறியியலாளர் விகிர்தன்

கிளிநொச்சி இரணைமடுக்குளம் வற்றிவிட்டதால் கடந்தமுறை சிறுபோக விவசாயிகள் பலர் பாதிக்கப்பட்டிருந்தனர். இது தொடர்பாக வெளியான சில செய்திகளில், குளம் வற்றியமைக்கு இராணுவத்தினரே காரணம் என்று சில தமிழ் பததிரிகைகள், இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டிருந்த நிலையில் நேற்று 34 அடிக்கு மேல் தண்ணீர் வந்து வான்பாயும் நிலையில் ஏன் இன்னும் இந்த இணையத்தளங்களும் பத்திரிகைகளும் விமானப் படைத்தளம் அழிந்துவிட்டது என செய்திகளாகவோ அல்லது கட்டுரைகளாகவே பிரசுரிக்கவில்லை என கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ்.விகிர்தன் கேள்வியெழுப்பியுள்ளார். வன்னியைப் பொறுத்தளவில் ஒவ்வொரு வருடமும் காலபோகம், சிறுபோகம் என இரண்டு போகங்களாக நெற்செய்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது. காலபோகம், பருவகால மழையை நம்பிச் செய்யப்படுவது. சிறுபோகம் குளத்திலிருந்து கிடைக்கும நீரை நம்பியே செய்யப்படுகிறது. ஒவ்வொரு சிறுபோகத்தின் போதும், குளத்தின நீர்

(19) ஆம் பக்கம் பார்க்க



## குற்றத்தடுப்புப் பொலிஸாரினால் ஆவரங்காலில் நான்கு இளைஞர் கைது

(அச்சுவேலி)

குற்றத்தடுப்புப் பொலிஸாரினால் ஆவரங்கால் பகுதியில் 4 இளைஞர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் கிழக்குப் பல்கலைக்கழ கலைப்பீட முதலாம் வருட மாணவனான ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்த பத்மகரன் (வயது-21) மற்றும் திருமகன் (வயது-21), நபீசன் (வயது-21), புத்தூர் பகுதியைச் சேர்ந்த ஜயனன் (வயது-21) ஆகயி நான்கு பேர் கைது செய்யப்பட்ட விபரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

அண்மையில் கோண்டாவில் பகுதியில் சிங்கள நபர் ஒருவர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த 6 பேரும் கொழும்புக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

## காணிப் பிரச்சினை காரணமாக வர்த்தகர் மீது வாள்வெட்டு

(வடமராட்சி)

காணிப்பிரச்சினை காரணமாக வர்த்தகர் ஒருவர் வாள் வெட்டிற்கு இலக்கான சம்பவம் ஒன்று நேற்று நண்பகல் இடம் பெற்றுள்ளது.

துன்னாலை தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த நவரட்ணம் ராஜ்குமார் (வயது-31) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு வாள் வெட்டிற்கு இலக்காகி மந்திகை ஆதார வைத்திய சாலையில் அனுதிக்கப்பட்டுள்ளார். நெல்லியடி வர்த்தகரான இவர் தனது சக நண்பருடன் வீட்டில் மது அருந்திக்கொண்டிருந்த வேளையில் காணித்தகராறில் ஈடுபட்ட உறவினர் ஒருவரால் இவர் தாக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் தொடர்புடைய சந்தேகநபர் நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகின்றது. (116)

## கடலில் குளித்த மாணவன் சுழியில் சிக்கி உயிரிழப்பு

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் உள்ள மணற்காட்டு கிராமத்தில் கடலில் நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்த 16 வயதுச் சிறுவன் ஒருவன் சுழியில் சிக்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான். இப்பரிதாபகரமான சம்பவம் நேற்று முற்பகல் 11:00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. க.பொ.த சாதாரண தர பரீட்சை முடிவடைந்த பின்னர் நண்பர்கள் மூவருடன் சேர்ந்து இம் மாணவனும் கடலில் குளிப்பதற்காக வீட்டில் இருந்து சென்றதாகத் தெரியவருகின்றது. வடமராட்சி கிழக்கு குடத்தனைப்

(19) ஆம் பக்கம் பார்க்க

இன்றைய நாளிதழுடன் 2013 ஆம் ஆண்டுக்கான தினமுரசின் வர்ண நாட்காட்டி இணைக்கப்பட்டுள்ளது கேட்டுவாங்குங்கள்.

## புலிகள் மீள ஒருங்கிணைவதென்ற அரசின் குற்றச்சாட்டு பொய்

### கூட்டமைப்பு தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் நாட்டில் மீள ஒருங்கிணைவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையுமில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. புலிகள் மீள ஒருங்கிணைவதாக அரசாங்கம் செய்துவரும் பிரசாரம் அடிப்படையற்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். சமூகங்களுக்கு இடையில் முரண்பாட்டை

(19) ஆம் பக்கம் பார்க்க

## மருத்துவர் திருமாறன் கொழும்பிற்கு இடமாற்றம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றிய காது, மூக்கு மற்றும் தொண்டை சத்திரசிகிச்சை நிபுணர் திருமாறன் தற்காலிக இடமாற்றம் பெற்று கொழும்பிற்கு சென்றுள்ளதாக அரச வைத்திய சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் எஸ்.நிமலன் தெரிவித்தார். மேற்படி வைத்தியர் கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 9.45 மணியளவில் கந்தர்மடம் சந்தியில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் தாக்குதலுக்கு உள்ளானர். இந்நிலையில் வைத்தியரின் மீது தாக்குதல்

(19) ஆம் பக்கம் பார்க்க

# மக்களை நோக்கி மருத்துவ சேவை மூன்றாண்டுக்குள் கணிசமான வெற்றி

### - நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் பெருமிதம் -



(கிளிநொச்சி)

மக்களுக்கு சிறந்த நிறைவான சேவையினை வழங்கும் துறையாக மருத்துவத் துறையினை மாற்றுவோம். மூன்றாண்டுக்குள் நாம் அதில் கணிசமான வெற்றியினையும் சந்தித்துள்ளோம் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி பரந்தன் பகுதியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித்திட்டத்தின் மூலம் 76 இலட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார சேவைநிலையத்தினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மருத்துவ தேவைகளுக்காக மக்கள் மருத்துவ சேவையினை நாடிச் சென்ற காலம் படிப்படியாக மாறி தற்போது மக்களை நோக்கி மருத்துவ சேவையினை கொண்டு செல்லும் நிலைக்கு வந்துள்ளோம்.

மருத்துவத் துறையில் காணப்படுகின்ற வளப்பற்றாக்குறைகளை நீக்குவதில் நாம் முன்னுரிமை அளித்து செயற்பட்ட நிலையில் இன்று மருத்துவத் துறையில் காணப்படுகின்ற பெருமளவு பிரச்சினைகள் கடந்த காலத்தோடு ஒப்பிடுகையில் தீர்க்கப்பட்டுள்ளது.

மேலும் காணப்படுகின்ற தேவைகளையும் நிவர்த்தி செய்கின்ற போது இந்த மாவட்டத்தில் நிறைவான மருத்துவத் துறையினை ஏற்படுத்த முடியும் குறிப்பாக மருத்துவர்களின் பற்றாக்குறையும் தீர்க்கப்பட்டு வருகிறது.

எமது பிரதேசத்தைச் சேர்ந்த பல மருத்துவர்கள் எங்களுடைய பிரதேசங்களுக்கு விரும்பி சேவையாற்ற வருகின்றமையும் தென்னிலங்கையைச் சேர்ந்த மருத்துவர்களின் வருகையும் மருத்துவர்களின் பற்றாக்குறையினை தீர்ப்பதற்கு உதவியிருக்கிறது.

இன்னும் வெளியில் இருக்கின்ற எமது பிரதேசங்களைச் சேர்ந்த மருத்துவர்கள் இந்தப் பிரதேசங்களுக்கு சேவையாற்ற வருகின்ற போது எமது மக்களுக்கு நிறைவான மருத்துவ சேவையினை வழங்கமுடியும்.

மேலும் மருத்துவத் துறையினை பொறுத்தவரை அவற்றில் இருக்கின்ற பௌதீக ரீதியான வளப்பற்றாக்குறையினை நீக்குவது என்பது இலகுவான காரியம். ஆனால் ஆளணி வளங்களை நிவர்த்தி செய்வதில் இருக்கின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அந்தத் துறைசார்ந்தவர்களும் கைகொடுக்க வேண்டும்.

தற்போது பிரதேசங்கள் ரீதியாகப் பல ஆரம்ப சுகாதார சேவைகள் நிலையங்கள் பெருமளவு நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டு வருகிறது. மருத்துவ சேவையினை இலகுவாக மக்களுக்கு வழங்கும் வகையில் எம்மாலான எல்லா நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொள்வோம் எனவும் தெரிவித்தார்.

உமையாள்புரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் சிறிகாந்ததாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் கார்த்திகேயன், மீள் எழுச்சித்திட்டம், வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் பிரதிப்பணிப்பாளர் விஜயகிருஸ்ணன், கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி சுரேந்திரன், கிளிநொச்சி மாவட்ட தாய்சேய் நல மருத்துவ அதிகாரி திலீபன், கண்டாவளை பிரதேச சுகாதார பரிசோதகர் குடும்பநல உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# பட்ஜெட் நிறைவேற்றம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் அடுத்த வருடத்திற்கான உத்தேச வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் சபையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரதேச அபிவிருத்தி தொடர்பாக உறுப்பினர்களால் முன் வைக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் உட்பட பல்வேறு செயற்திட்டங்கள் சபையில் இரு தினங்களாக விவாதிக்கப்பட்டு கடந்த வாரம் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் சபை உறுப்பினர்களது ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டதாக நகரசபைத் தவிசாளர் தெரிவித்தார். (11)

# நடைமுறைப்படுத்தப்படவுள்ள 2013 இற்கான வரி மதிப்பீடு

சாவகச்சேரி நகர சபையின் கீழுள்ள ஆதனங்களுக்கான புதிய வரி மதிப்பீடு 2013 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு வரிமதிப்பீட்டு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆதன மீள்மதிப்பீடு சரிபார்க்கப்பட்டு நகர சபை உத்தியோகத்தர்களால் யாழ். விலைமதிப்பீட்டு திணைக்களத்தில் வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறு தயாரிக்கப்பட்டு மீள்மதிப்பீடு செய்யப்பட்ட அனைத்து ஆதனங்களுக்குமான அறிவித்தல்கள் தயாரிக்கும் பணிகள் தற்போது நகர சபை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன் ஆதனங்களுக்கான அறிவித்தல்கள் குடியிருப்பாளர்களுக்கும் ஆதனங்களின் உரிமையாளர்களுக்கும் விநியோகிக்கப்படவுள்ளது.

மேலும் மதிப்பீடுகளை பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் சாவகச்சேரி நகர சபை அலுவலகத்தில் பார்வையிட முடியும் என நகர சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

# சோடா வாங்கச் சென்றவர் வாள்வெட்டில் படுகாயம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை மதவடிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் சோடா வாங்கச் சென்ற நபர் ஒருவர் வெட்டுக் காயங்களுக்கு இலக்காகிய நிலையில் வல்வெட்டித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய வீதியைச் சேர்ந்த ஆர்.ராஜேஸ்வரன் (வயது - 36) என்பவரே வெட்டுக்காயங்களுக்கு இலக்கானவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபர் வீட்டில் விசேட நிகழ்வு நடைபெற்ற நிலையில் சோடா வாங்குவதற்காக வர்த்தக நிலையமொன்றுக்குச் சென்றுகொண்டிருந்த சமயம் அங்கு செயற்பட்டுவரும் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த 4 பேர் குறித்த நபரை வழிமறித்து சினிமா பாணியில் சரமாரியாக வாளால் வெட்டிவிட்டு தப்பியோடியுள்ளனர்.

வெட்டுக்காயங்களுக்கு இலக்காகிய நிலையில் அந்நபர் வல்வெட்டித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் குறித்த நபர்களை கைதுசெய்யச் சென்ற வேளை அவர்கள் ஓடிமறைந்துள்ளதாகவும் இவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும் விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (116)

# திம்பிலி வீதிக்கு எப்போது விமோசனம் கிடைக்கும்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - கைவேலியில் இருந்து வடக்கு நோக்கி திம்பிலி வரைக்கும் செல்லும் வீதி இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் அவ்வீதியில் பயணம் செய்யும் பொதுமக்கள் அவலத்திற்குள்ளாவதாகத் தெரியவருகிறது.

குறிப்பிட்ட இவ்வீதியானது மக்கள் திம்பிலி பகுதியில் குடியேற்றப்பட்டதன் பின்னர் மக்களின் பயண சௌகரியத்தை முன்னிட்டு சல்லிக் கற்கள் பரவப்பட்ட நிலையில் பல மாதங்களுக்கு மேலாக கனரக உருளைகள் மூலம் நெரிக்கப்படாது காட்சியளிப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை இவ்வீதியால் பயணம் செய்யும் பொதுமக்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் பயணம் செய்வோர் பலத்த இடர்பாடுகளை எதிர்நோக்கிய நிலையில் தற்போது வீதியின் பல இடங்களில் சல்லிக்கற்கள் கரையொதுங்கிய நிலையில் காணப்படுவதாகவும் அறியமுடிகிறது.

கைவேலி - திம்பிலி மற்றும் கோம்பாவில் பகுதிகளுக்கு தங்கள் தேவைகள் கருதி பயணம் செய்யும் பொதுமக்களினதும் வாகனங்களினதும் நலனைக் கருத்திற்கொண்டு இவ்வீதிப் புனரமைப்போடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கவனம் எடுத்து இவ்வீதியை சீர்படுத்தித் தரவேண்டுமென பொதுமக்கள் பலரும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். (138)

# பாடநூல், சீருடைத்துணி சேதமானால் அறிவிக்கவும்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் ஏற்பட்ட கன மழையினாலும் வெள்ளப் பாதிப்பினாலும் வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் மாணவர்களின் இலவசப் பாடநூல் மற்றும் சீருடைத்துணி என்பன சேதத்திற்குள்ளாகியிருப்பின் அது தொடர்பான விபரங்களை பாடசாலை அதிபர்கள் வலயக் கல்வித்திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வலயக் கல்வித் திணைக்களம் வடமாகாண கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறும் இதன்மூலம் மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# விபரங்களை அனுப்பவும்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் அதிபர் நியமனம் கிடைத்த அதிபர்கள் தமது பாடசாலை தொடர்பான விபரங்களை வலயக் கல்வித் திணைக்களத்தினூடாக வடமாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

# சம்பள ஏற்றம், பிரயாணப் படிக்கு நிதி இல்லையென கைவிரிப்பு

### வலிகாமம் கல்வி வலயத்தில் இந்த நிலை

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர்களின் வருடாந்த சம்பள ஏற்றத்தினையும் கடமையின் பொருட்டு கல்வியமைச்சின் கருத்தரங்கிற்கு சென்று வந்த ஆசிரிய ஆலோசகர்களின் பிரயாணப்படி வழங்குவதற்கும் நிதியில்லை என வலிகாமம் கல்வி வலய நிதிக்கிளையினர் கைவிரித்துள்ளனர்.

வழமையாக வருட இறுதிக்குள் மேற்படி கொடுப்பனவுகளை வழங்கி முடிக்க வேண்டும் எனவும் அதற்கான கொடுப்பனவுப் பத்திரங்களை முற்கூட்டியே ஆசிரியர்கள் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் நிதிக்கிளை அறிவுறுத்தி வருவதுண்டு.

ஆனால் இம்முறை உரிய கொடுப்பனவுப் பத்திரங்களை பல மாதங்களுக்கு முன்னர் சமர்ப்பித்திருந்தும் டிசம்பர் மாதம் முடிவுறும் நிலையிலும் இக்கொடுப்பனவுகள் வழங்கப்படாமையையிட்டு ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இவ்வாறு இடருதவிக் கடன் பெறுவதற்கும் விண்ணப்பித்திருந்தும் பல ஆசிரியர்களுக்கு பல வருடங்களாக இக்கடன் இன்னும் வழங்கப்படவில்லை. இதுதொடர்பில் நிதிக்கிளையுடன் தொடர்புகொண்டால் நிதியில்லை என்ற ஒரே பதிலே பல வருடங்களாகக் கிடைப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (06)



வன்னியில் பெய்த அடை மழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் வவுனிக்குளம் வான்பாய்வதனைக் காணலாம். (140)

# மீள்குடியேறி 3 வருடங்களாகியும் வீட்டுத்திட்டம் வழங்கவில்லை

## - கரைச்சி பிரதேச மக்கள் -

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 42 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ள நிலையில் 16 பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு இதுவரை எவ்வித வீட்டுத்திட்ட வசதிகளும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் அரசாங்கத்தின் அனுமதியூடாக அரச சார்பற்ற நிறுவனங்களினால் வீட்டுத்திட்டங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் குறித்த கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு இத்தகைய வீட்டுத்திட்டங்கள் இதுவரை வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கிராம மக்கள் மீள் குடியேறி 3 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் தாம் இன்று வரை தற்காலிக வீடுகளில் பெரும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஏனைய கிராமங்களுக்கு வீட்டுத்திட்ட வசதிகள் வழங்கப்பட்டு அவை நிறைவடைந்தும் உள்ளன.

ஆனால் எமக்கு இந்த வீட்டுத்திட்ட வசதிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் பல்வேறு காரணங்களால் குறிப்பாக காணிப் பிரச்சினை போன்றவற்றால் எட்டாக் கனியாகவே தமக்கு இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக தொண்டமான் நகர், மலையாளபுரம், கிருஷ்ணபுரம், உதயபுரம்கிழக்கு, மேற்கு உள்ளிட்ட சில கிராம மக்களுக்கே வீட்டுத்திட்ட வசதிகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை எனவும், இதில் உதயபுரம் கிழக்கு பிரதேசத்தில் முதன் முதலாக மீள்குடியேறிய மக்களுக்கு வீட்டுத்திட்ட வசதிகள் வழங்கப்பட்ட நிலையில் பின்னர் மீள்குடியேறிய மக்களுக்கு இந்த வசதிகள் வழங்கப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இக்கிராம மக்களுக்கு மின்சார வசதி , உள்ளக வீதி, புனரமைப்பு உள்ளிட்ட அத்தியாவசிய அபிவிருத்தி நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என மக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

அடுத்த வருடத்திலாவது தமது கிராமத்தின் குறைபாடுகள் தமது தேவைகள், நிவர்த்தி செய்யப்படுமா என பாதிக்கப்பட்ட மக்கள் ஆதங்கத்துடன் தெரிவிக்கின்றனர். (77)

# சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2012

உறுப்புரை - 27

1 சமுதாயத்தின் பண்பாட்டு வாழ்க்கையில் சுதந்திரமாகப் பங்கு கொள்வதற்கும், கலைகளைத் துய்ப்பதற்கும் அறிவியல் முன்னேற்றத்திலும் அதன் நன்மைகளிலும் பங்கெடுப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.

2. அறிவியல், இலக்கிய கலைப்படைப்பினை ஆக்கிய கர்த்தா என்ற வகையில் அப்படைப்புக்கள் வழியாக வரும் ஒழுக்க நெறி, பருப்பொருள் நலன்களில் பாதுகாப்பிற்கு அத்தகையோர் ஒவ்வொருவரும் உரிமை உடையவராவர்.

# திரைக்கலைஞர் சங்க நிர்வாகசபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் திரைப்படக் கலையில் ஈடுபடுவோரின் நலன் கருதி வடமாகாணத் திரைக்கலைஞர் சங்கம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. அதற்காக நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் ஏஏஏ மூவிஸ் இன்ரநசனல் மண்டபத்தில் பிற்பகல் 4.30 மணிக்கு திரைப்பட இயக்குனர் ந.கேசவராஜன் தலைமையில் இடம்பெற்றது.

இத்தெரிவின்போது தலைவராக ந.கேசவராஜன், செயலாளராக 'துளிர்கள்' நிறுவனத் தலைவரும், திரைப்பட தயாரிப்பாளர் மற்றும் நடிகருமான கே.எஸ்.ரகுநாதன், பொருளாளராக அந்தோனிப்பிள்ளை ஜசிதரன், உபதலைவராக சிறிபுஸ்பநாதன் துசிகரன், உபசெயலாளராக சாளினி சாள்ஸ், பத்திராதிபராகத் தில்லைநடராஜா மயூரன், நிர்வாக உறுப்பினர்களாக ச.மென்டிஸ், த.சிவரூபன், எஸ்.ஜெறிஸ்ராலின், த.பிரபு, மா.ஏரம்பு ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்களாக க.செவ்வேள், ரில்கோ ஹோட்டல் நிறுவன முதல்வர் திலகராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் மன்ற கீதத்தை கருத்தாளமிக்க வகையில் மீள் பதிவு செய்தல் தொர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 07 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். மாநகரசபையின் முதல்வர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் இசைக்குழுக்கள் பங்கு பற்றி உயிரோட்டமான மன்ற கீதத்தை சிறந்த முறையில் மீள்பதிவு செய்து தரமான மாநகரசபைக் கீதத்தினை உருவாக்குவதற்கு ஒத்துழைக்குமாறு யாழ்.மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.

# இலச்சார்சனைப் பெருவிழா

(வலிகாமம்)

மருதனார்மடம் - இணுவில் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் இலச்சார்சனைப் பெருவிழா நடைபெறவுள்ளது.

இவ்விழா நேற்று முன்தினம் ஆரம்பமாகியதுடன் எதிர்வரும் மாதம் 10 ஆம் திகதிவரை தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறவுள்ளது.

இலச்சார்சனை நடைபெறவுள்ள பன்னிரண்டு நாட்களும் மகேஸ்வர பூசை நடைபெறவுள்ளது. இலச்சார்சனைப் பெருவிழாவைத் தொடர்ந்து மகா கும்பாபிசேகமும் இடம் பெறவுள்ளது. ஜனவரி 19 ஆம் திகதி எண்ணெய்க்காப்பும், 23 ஆம் திகதி மகா கும்பாபிசேகமும் நடைபெறவுள்ளது.

# ஆங்கில வகுப்பு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கடந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான இலவச ஆங்கில வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளனர்.

வகுப்புக்களில் கலந்து பயிற்சியை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு தகுந்த சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

# இரும்பு ஏற்றுமதி நிறுத்தம் தொழிலாளர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீள் குடியேறியுள்ள பழைய இரும்பு தொழிலாளர்கள் தொழிலின்றி கஷ்டங்களை எதிர் நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நான்கு வருடமாக இரும்பு சேகரித்து தொழில் நடத்தி வந்த நூற்றுக்கு மேற்பட்டவர்கள் சேகரித்த பழைய இரும்புகளை விற்பனை செய்ய முடியாமல் தவிக்கின்றனர்.

கொழும்பிலுள்ள இரும்பு, உருக்கு தொழிற்சாலைகளில் தற்போது இரும்பு கெள்வனவு செய்வதை நிறுத்தியுள்ளதாகவும் இதனால் இரும்பு கொழும்புக்கு ஏற்றுமதி செய்வதை நிறுத்தியுள்ளமையால் தொழிலாளர்களிடமிருந்து இரும்பு கொள்வனவு செய்வதை நிறுத்தியுள்ளதாக யாழில் உள்ள இரும்பு வியர்பாரிகள் கூறுகின்றனர்.

ஒருமாதமாக இந்நிலை நீடித்திருப்பதனால் இத்தொழிலை நம்பி வாழும் மக்கள் தமது ஜீவனோபாயத்தை சமாளிக்க முடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

இத்தொழிலில் மீள்குடியேறியுள்ள யாழ்.முஸ்லிம்களும் அதிகளவில் காணப்படுகின்றனர். இவர்களுடன் ஏனைய சமுக தொழிலாளர்களும் இணைந்து பழைய இரும்புகளை சேகரித்து வியாபாரிக்ளுக்கு விற்பனை செய்து தமது குடும்பங்களை சுயமாக பாதுகாத்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். (105)

# குடும்பங்களுக்கு உதவிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கான இலவச மூக்குக் கண்ணாடி மூன்று சில்லு சைக்கிள்கள், சக்கர நாற்காலி ஆகியவை வழங்குவதற்கான நடவடிக்கைகள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினால் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதில் வைத்திய நிபுணர்களின் மருத்துவச் சான்றிதழுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

# விவேகானந்தரின் ஜனன தினம் மாநாட்டிற்கு நிதி வசூலிப்பு

கொழும்பில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஜனனதின மாநாட்டிற்கான நிதி வசூலிப்பின் பொருட்டு விவேகானந்தரின் உருவப்பட ஸ்ரிக்கர் விற்பனை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மருதனார் மடம் ஸ்ரீ சுந்தரேச ஆஞ்சநேயர் ஆலயத்தில் ஆலயக்குருக்கள் சிவஸ்ரீ சுந்தரேசக்குருக்களால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் இந்துஸ்வயம் சேவா சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் துஷ்யந்தன், உடுவில் பிரதேச இணைப்பாளர் என்.பி.ஸ்ரீந்திரன், உடுவில் பிரதேச விழாக் குழுத்தலைவி செல்வி க.சிவயோகராணி, செயலாளர் திருமதி சோமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்களுடன் ஆலய வழிபாட்டிற்கு வந்த பக்தர்களும் கலந்து ஸ்ரிக்கர்களைப் பெற்றுக் கொண்டனர்.

ஸ்ரிக்கர் விற்பனையைத் தொடர்ந்து இச்சங்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் துஷ்யந்தன் ஸ்ரிக்கர் விற்பனையின் நோக்கம் விவேகானந்தரின் மாநாட்டை இந்துக்கள் எழுச்சியாகக் கொண்டாட வேண்டியதன் அவசியம், மதமாற்றத்திற்கு எதிராக இந்துக்கள் குரல் கொடுக்கவேண்டியதன் அவசியம் பற்றி கருத்துரை வழங்கினார். (06)





நெல்லியடி பொலிஸாரின் ஏற்பாட்டில் கரணவாய் வேதாரனீஸ்வரா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற இந்த வருடத்திற்கான இறுதி நடமாடும் சேவையில் உதவிப் பரிசோதகர் எஸ்.ஐ.ரம்பண்டா மங்கள விளக்கேற்றுவதையும், சுகாதாரம், மற்றும் டெங்கு நோய் பற்றி மக்களுக்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சுகாதார உத்தியோகத்தர்கள் விளக்கமளிப்பதையும், அருகில் பொலிஸ் உத்தியோகத் தர்கள் நிற்பதையும் காணலாம். (18)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## இனியும், அதே பழைய நாங்கள் தானா?

2012 விடைபெற்றுச் செல்கிறது. பழையன கழிய புதியன புகுவது காலவகையினது தான் என்றார்கள். நாங்கள் பழையனவற்றிலிருந்து விடுபட்டு புதிய வழிவகைகளைக் காண முயல்கிறோமா என்று கேட்டுப்பார்க்க வேண்டும். எங்கள் சிந்தனையில் ஏதாவது புதிய மாற்றம் வந்திருக்கிறதா? எங்களை நாம் மாற்றிக்கொள்ளக் கொஞ்சமாவது முயற்சித்திருக்கிறோமா?

∴பீற்லா என்ற அறிஞர் சொன்னார், “எங்கள் முக்கியமான பிரச்சினை மக்களிடமிருந்தே மக்களை எப்படிக் காப்பது என்பதுதான்”. அதற்குக் காரணம் மக்கள் தாம் விரும்புவதைக் கனவுகண்டு கொண்டிருப்பார்களே தவிர, யதார்த்தத்தில் நமக்கு எது கிடைக்கப்போகிறது என்பதைச் சிந்திக்க மாட்டார்கள்; அந்த எண்ணம் அவர்களுக்கு உவப்பானதல்ல.

தலைவர்கள்தான் நடைமுறைச் சாத்தியமானதை அவர்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டிய கடப்பாடு கொண்டவர்கள். அவர்கள் நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்த்துச் சொல்வது, மக்கள் விரும்பியதற்கு மாறான கசப்புத் தன்மையைக் கொண்டிருந்தாலும், அதுதான் மருந்து, அதுதான் மக்களது ஆரோக்கியத்திற்குத் தேவையானது என்பதை தலைவர்கள் எனப்படுவோர் தான் மக்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும்.

போர் நடந்துகொண்டிருந்த சமயத்தில் நம் தரப்புக்கே வெற்றி கிடைத்துவிட வேண்டும் என்பது மக்கள் விருப்பமாக இருந்தது. அந்த நேரத்தில் போராட்டமானது வெல்லும் திசை வழியில்தான் செல்கிறதா என்று கண்காணித்திருக்க வேண்டியதும், மக்கள் அழிவைத் தடுக்கக் கூடிய உச்சபட்சமான சமரசப புள்ளியைத் தக்கசமயத்தில் தேர்ந்திருக்க வேண்டியதும் தலைவர்கள், புத்திஜீவிகளினது கடப்பாடாகும். செய்தார்களா?

மக்களுக்கு யதார்த்தத்தை உணர்த்துவதும், அவர்களுக்கு உவப்பாக இல்லாதது ஆனாலும் நடைமுறைக்குச் சாத்தியமானதை அவர்களுக்குப் புரியவைக்க வேண்டியதும் மேற்குறித்தோரது கடமைகளில் தலையாயது. இப்போதும், தனி நாடு அமைய வேண்டும், சந்திரிகா தர இருந்ததையும் விட கூடுதலான அதிகாரங்கள் வேண்டும் என்பதெல்லாம் நம்மில் சிலரது விருப்பமாக இருக்கலாம். ஆனால் விஷயமறிந்த தலைவர்கள் புத்திஜீவிகள் என்போர் அவற்றை மாயமான் காட்டுவது போலக் காட்டி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கக் கூடாது.

அவ்வாறு நடக்காததைக் காட்டி ஏமாற்றும் போலி அரசியலையே நாம் சுயலாப அரசியல் என்கிறோம். அரசாங்கத்திடம் பேசி எந்தத் தீர்வும் எடுக்க முடியாது என்று சொல்பவர்கள், சர்வதேசத்திடம் பேசி எந்தத் தீர்வுக்கான இணக்கத்திற்கு வந்திருக்கிறார்கள் என்பதை வெளிப்படையாக மக்களுக்கு அறிவிக்க வேண்டும். அல்லது இவ்வளவு காலமும் சர்வதேசத்திடம் பேசுகிறோம் பேசுகிறோம் என்று சொல்லி வந்ததில், தமிழ் மக்களுக்கான எந்த மாதிரியான ஒரு தீர்வை சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வைத்திருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

அரசாங்கத்துடன் பேசியும் சரிவராது; தெரிவுக்குழுவும் சரிவராது என்றால் இத்தறுதிக்கு சர்வதேசத்தைக் கொண்டு செய்யலாம் என்று சொன்னதையாவது செய்திருக்க வேண்டும். குறைந்தபட்சம் அதற்கான நகர்வுகள் நடப்பதையாவது காட்ட வேண்டும். எதையும் செய்யாது மக்களையும் மாணவர்களையும் உசுப்பேத்தி விட்டுக் கொண்டிருப்பதானது, பழையபடி ஆயுதப்போராட்டம் தான் வழி என்று இளைஞர்களைத் தூண்டிவிட்டுப் பதுங்கிவிடும் பழைய வஞ்சக வரலாற்றை மறுபடியும் தொடங்குவதாகவே அர்த்தம்.

நாளை மற்றொரு புதுவருடம். கடந்து போன காலத்தை இப்போது திருத்திக்கொள்ள இயலாது. வரப்போகும் நாட்களை என்ன செய்யப் போகிறோம்? நம்மைத் திருத்திக் கொள்வோமா என்பதே, வரும் ஆண்டின் தொடக்கத்திலும் எம்முன்னால் நிறகின்ற கேள்வி.

- ஆசிரியர்

# தகுதியானவர்களை உருவாக்க கல்வித்துறை தவறிவிட்டது

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தொழில்வாய்ப்புக்கு பொருத்தமானவர்களை உருவாக்க எமது நாட்டின் கல்வித்துறை தவறிவிட்டதாக கல்வி அமைச்சர் பந்துலகுணவர்த்தன தெரிவித்துள்ளார். கல்வியமைச்சில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், சமகாலத்தில் வறிய நிலையில், கல்வியைப் பெறும் மாணவர்களுக்கு வளங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதில் பாரிய முரண்பாடுகள் இருப்பதாக தெரிவித்தார்.

இதன்காரணமாக, நாட்டின் மாணவர்கள் சராசரியில் 22 வீதமானவர்களே, உயர்தரத்தில், விஞ்ஞான, கணித, தொழில்நுட்ப, கல்வியைத் தொடர்கின்றனர்.

ஏனையவர்களில் பெரும்பாலானவர்கள் கலைத்துறையில் கல்வி பயில்கின்றனர்.

அவர்களுக்கு தகுதிக்கேற்ற தொழில்வாய்ப்புகள் கிடைப்பதில்லை.

நாளைய எதிர்காலம் அவர்களுக்கு கிடைக்காத நிலை ஏற்படுகிறது.

தொழில்வாய்ப்புகள் இருக்கின்றன, ஆனால் அதற்கான தகுதியுடையவர்களை இந்தக் கல்வித்துறை உருவாக்கவில்லை என்றும் கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு மரண தண்டனையை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன வலியுறுத்தியுள்ளார்.

மாத்தறை வெலிகம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அமைச்சர், குறிப்பாக சிறார்களும் பெண்களும் வன்முறைகளுக்கு உள்ளாகும் செய்திகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

# புகுமுக மாணவர்களுக்கு மார்ச் மாதம் கல்வி நடவடிக்கை

(கொழும்பு)

2013ஆம் ஆண்டு முதலாம் வருட பல்கலை மாணவர்களுக்காக கல்வி நடவடிக்கை மார்ச்சில்

2013ஆம் ஆண்டு பல்கலைக்கழக புகுமுக மாணவர்களிற்கான கல்வி நடவடிக்கைகள் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வருடங்களை விட புதிய ஆண்டில் 5,609 மாணவர்கள் மேலதிகமாக பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படவுள்ளனர்.இதேவேளை கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

# அரசுக்கெதிரான பிரசார யுத்தம் வடக்கில் களம் இறங்குகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

வடக்கில் ஐக்கிய தேசியக் கட்சி பிரசார யுத்தம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு தயாராகி வருகின்றது.

யாழ்ப்பாணம் உட்பட வட பகுதியின் அனைத்து மாவட்டங்களிலும் அரசுக்கெதிரான பிரசார நடவடிக்கைகளையும் பெரிய அளவில் நடாத்துவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகள் சிலவும் இணைந்து இந்தப் போராட்டத்தை நடாத்தவுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரையில் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

அரசாங்கத்தின் மக்கள் விரோத செயற்பாடுகளுக்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் இந்தப் போராட்டம் நடத்தப்பட உள்ளது.யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து கருத்தரங்குகள் மற்றும் விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

## சீரற்ற காலநிலை நீங்கியது வழமைக்கு திரும்புகிறது நிலைமை

(கொழும்பு)

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நிலவிய சீரற்ற காலநிலை படிப்படியாக சீரடைந்து வருகிறது. நேற்று முதல்மழை வீழ்ச்சி குறைவாக காணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. என்று காலநிலை அவதான நிலையம் தகவல் வெளியிட்டுள்ளது.

எனினும் நாட்டின் பல பாகங்களிலும் இடி மின்னல் அதிகமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பொது மக்கள் மின்னலால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர் என்றும் தகவல் வெளியிட்டுள்ளது.

# அரசுக்கு எதிராக செயற்பட்டால் இரட்டைப்பிரஜாவுரிமை கிடையாது

## கடும் நடவடிக்கையில் அரசு

(கொழும்பு)

அரசுக்கு எதிராக செயற்படும் எவருக்கும் இரட்டைப்பிரஜாவுரிமை வழங்கப்பட மாட்டாது என்று அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது அவற்றில் பாரியளவில் தாக்கம் செலுத்தும் நோக்கில் ஈழ ஆதரவுத் தமிழர்கள் இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றுக்கொள்ள தற்போது முயற்சிக்கின்றனர்.

அதேவேளை ஈழக் கோரிக்கைக்கு ஆதரவளிக்கும் தமிழர்களின் இரட்டை பிரஜாவுரிமையை இரத்து செய்யுமாறு அரசாங்கம், குடிவரவு குடியகழ்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் புலம்பெயர் தமிழர்கள் பத்து இலட்சம் பேருக்கு இரட்டை பிரஜாவுரிமையை பெற்றுக் கொள்ளுமாறு புலி ஆதரவு அமைப்புக்கள் ஏற்கனவே ஆலோசனை வழங்கியுள்ளன.

இந்தச் சூழ்ச்சித் திட்டத்தை அறிந்து கொண்ட அரசாங்கம், இவ்வாறான புலம்பெயர் தமிழர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்குவதில்லை எனத் தீர்மானித்துள்ளது.

பெரும்பான்மை கட்சியொன்று ஆட்சி அமைப்பதனைத் தடுக்கும் நோக்கில், இவ்வாறு வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமையை பெற்றுக்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கிலிருந்து இராணுவத்தை அகற்றும் நோக்கில் புலி ஆதரவு அமைப்புக்கள் செயற்பட்டு வருவதாகவும் திவயின என்ற சிங்கள நாளிதழ் குற்றம் சுமத்தியுள்ளது.

# தமிழ்ச் சங்க ஒழுங்கை சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி

கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள 57 ஆவது ஒழுங்கையை தமிழ்ச்சங்க ஒழுங்கை என்று பெயரிடுவதற்கான அனுமதி கிடைக்கவுள்ளது. கொழும்பு மாநகரசபை இதற்கான அனுமதியை விரைவில் வழங்கவுள்ளது.

இந்தப் பெயர் மாற்ற நிகழ்வு கடந்த நவம்பர் 25 ஆம் திகதி இடம்பெறவிருந்தபோதும் அது ஆட்சேபனை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. எனினும் கிடைத்த முறைப்பாடுகள் ஆதாரமற்றவை என்ற அடிப்படையில் விரைவில் இந்த ஒழுங்கை தமிழ்ச் சங்க ஒழுங்கை என்று பெயரிடப்படவுள்ளது.

வெள்ளவத்தை 57 ஆவது ஒழுங்கையை தமிழ்ச்சங்க ஒழுங்கை என்று பெயரிட வேண்டும் என்ற யோசனையை கலாநிதி வி.கங்கைவேணியன் முன்மொழிந்திருந்தார்.

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

16

புலிகளின் குரல்
Voice of Tigers

## வே.அர்ச்சுணன்

**வன்னிப் பகுதி மக்களை தங்களது ஊடகத்தின் வலுவால் உணர்ச்சிமயமூட்டி வந்ததில் புலிகளின் குரல் வானொலியே முதன்மையான இடத்தை வகித்து வந்தது. புலிகளின் குரல் வானொலி பல்வேறு நெருக்கடியான சூழ்நிலைகளிலும் தனது ஒலிபரப்புச் சேவையை முள்ளிவாய்க்கால் முடிவுகள் வரை நடத்தி முடித்தமை இங்கு குறிப்பிட்டுக் கூறவேண்டிய விடயமாகும். படையினர் முள்ளிவாய்க்கால், மாத்தளன் வரை தமிழ் மக்களை யுத்தத்தின் மூலம் ஒரு பகுதிக்கு ஒதுக்கிச் சென்றபோது புலிகளும் மக்களோடு மக்களாக அந்தப் பகுதிகளில் ஒதுங்கிக் கொண்டனர். இந்த நிலையில், அந்த சூழ்நிலையிலும் தலைவரிடம் திட்டம் இருக்கிறது, வீட்டுக்கொருவர் நாட்டைக் காக்க வாருங்கள் என்ற பிரச்சாரத்தை புலிகளின் குரல் வானொலி நிகழ்த்தத் தவறவில்லை.**

ஏற்கனவே விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் தொடர்பில் பார்த்து வருகின்ற நாம் யாழ்ப்பாணத்தின் ஊடகங்கள் தொடர்பிலும் ஊடகவியலாளர்கள் தொடர்பிலும் மேலோட்டமாக பார்த்துள்ள போதிலும் அந்த ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் தொடர்பில் விரிவாக பார்ப்பதற்கு முன்னர் வன்னிப் பகுதியில் இயங்கிய புலிகளின் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பற்றியும் பார்த்துவிட்டு பின்னர் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் தொடர்பில் விரிவான பார்வையை செலுத்துவதே பொருத்தமானதாக இருக்கும்.

விடுதலைப் புலிகளின் ஊடகங்களில் முதன்மையான இடத்தை வகித்தவை புலிகளின் குரல் வானொலியும், ஈழநாதம் பத்திரிகையும் ஆகும். இதைவிட விடுதலைப் புலிகளின் N.T.T தொலைக் காட்சி மற்றும் புதினம், சங்கதி உள்ளிட்ட இணையத்தளங்கள் மற்றும் தமிழ்நெற் இணையத்தளத்தின் செயற்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராயவேண்டிய அல்லது பார்க்கவேண்டிய பக்கங்கள் இருக்கின்ற போதிலும் குறிப்பாக வன்னிப் பகுதி மக்களை தங்களது ஊடகத்தின் வலுவால் உணர்ச்சிமயமூட்டி வந்ததில் புலிகளின் குரல் வானொலியே முதன்மையான இடத்தை வகித்து வந்தது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதான ஊதுகுழலாக இந்த புலிகளின் குரல் வானொலி செயற்பட்டு வந்தது. புலிகளின் குரல் வானொலி பல்வேறு நெருக்கடியான சூழ்நிலைகளிலும் தனது ஒலிபரப்புச் சேவையை முள்ளிவாய்க்கால் முடிவுகள் வரை நடத்தி முடித்தமை இங்கு குறிப்பிட்டுக் கூறவேண்டிய விடயமாகும்.

படையினர் முள்ளிவாய்க்கால், மாத்தளன் வரை தமிழ் மக்களை யுத்தத்தின் மூலம் ஒரு பகுதிக்கு ஒதுக்கிச் சென்றபோது புலிகளும் மக்களோடு மக்களாக அந்தப் பகுதிகளில் ஒதுங்கிக் கொண்டனர். இந்த நிலையில் அந்த சூழ்நிலையிலும் தலைவரிடம் திட்டம் இருக்கிறது, வீட்டுக்கொருவர் நாட்டைக் காக்க வாருங்கள் என்ற பிரச்சாரத்தை புலிகளின் குரல் வானொலி நிகழ்த்தத் தவறவில்லை. குறித்த புலிகளின் குரல் வானொலியின் பிரதான பொறுப்பாளராக ஜவான் என்பவர் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் அவர்களால் உத்தியோக பூர்வமாக நியமிக்கப்பட்டிருந்தார். குறித்த ஜவான் என்ற போராளிக்கு பின்னைய நாட்களில் தமிழ் அன்பன் என்ற பெயர் புலிகளால் சூட்டப்பட்ட போதிலும் வன்னிப் பகுதியில் தொடர்ச்சியாக மக்கள் ஜவான் என்ற பெயரையே பயன்படுத்தி வந்தனர்.

இந்திய இராணுவம் இலங்கையில் புலிகளுடன் யுத்தத்தில் ஈடுபட்ட காலப்பகுதியில் ஜவான் என்ற இந்தப் பொறுப்பாளர் யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுப் பகுதியில் பிரதான கதாநாயகனாக வலம்வந்தார். மாற்று இயக்கத்தினரைப் போடுவது இந்திய இராணுவத்துடன் தொடர்பு வைத்திருந்தவர்களை சுட்டுத்தள்ளுவது உட்பட பலரது மரணங்களுக்கு இந்த ஜவான் பொறுப்பாளராக இருந்தார். இதன்பின்னர் வன்னிப் பகுதிக்கு இவரை உள்வாங்கிய பிரபாகரன் தன்னுடன் காட்டுப் பகுதியில் தனது நம்பிக்கைக்கு உரிய ஒருவராக வைத்துக் கொண்டிருந்தார். புலிகளின் பிரச்சார விளம்பரங்கள் மற்றும் வெளிநாட்டு பிரச்சார நடவடிக்கைகள் என்பனவற்றிற்கு ஜவான் பொறுப்பாளியாக இந்திய இராணுவம் இலங்கையில் இருந்த காலப்பகுதியில் செயற்பட்டு வந்தார். இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னர் புலிகளின் குரல் வானொலி வெளிப்படையாக பிரபாகரனால் இயங்க வைக்கப்பட்டது. இதற்கு முழுமையான பொறுப்பையும் ஜவான் எடுத்துக் கொண்டார்.

இதன் பின்னர் இலங்கை அரச படைகளும், புலிகளும் மோதல் சம்பவங்களில் ஈடுபடத் தொடங்கிய பொழுது பல்வேறு சவால்களையும், நெருக்கடிகளையும் இந்தப் புலிகளின் குரல் வானொலி சந்தித்து வந்தது. தமிழ் மக்களை தொடர்ச்சியாக கூடுதலான உணர்வேற்றி உணர்ச்சி மயப்படுத்தும் செயற்பாட்டில் இந்த வானொலி பிரதான இடத்தை வகித்தமையால் பிரபாகரனும் இந்த வானொலிக்குரிய சகல வசதிகளையும் செய்து கொடுக்க தவறவில்லை. யாழ்ப்பாணம் வன்னிப் பகுதியின் பல பகுதிகளில் இந்த வானொலி செயற்பட்டு வந்த போதிலும் இறுதியாக கிளிநொச்சிப் பகுதியில் இந்த வானொலி சகல வசதிகளுடனும் இயங்கி வந்தது. இந்த நிலையில் இந்த வானொலி நிலையத்தின் மீது இலங்கை வான் படையினர் குண்டுவீச்சு தாக்குதலை நடத்திய போது வானொலியில் பணியாற்றிய ஊழியர்கள் சிலர் உட்பட புலிகளின் உறுப்பினர்களும் சிலர் பலியாகி இருந்தனர். இதன் பின்னர் பிரபாகரனின் உத்தரவிற்கு இணங்க மிகவும் கடுமையான பாதுகாப்புடன் கூடிய பதுங்கு குழிகள் உடனடியாக அமைக்கப்பட்டு இந்த வானொலி தொடர்ந்தும் அதே இடத்தில் இயங்க வைக்கப்பட்டிருந்தது. படையினர் கிளிநொச்சியைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இந்த வானொலி விசுவமடுப் பகுதியில் உள்ள மறைவிடம் ஒன்றில் இயங்கி வந்தது. பின்னர் வேறும் சில பகுதிகளில் இயங்கி, இறுதியில் முள்ளி வாய்க்காலில் இந்த வானொலி இயங்கிய வேளை தனது இறுதி மூச்சையும் முள்ளிவாய்க்காலுடன் நிறுத்திக் கொண்டது.



புலிகளின் குரல் வானொலியின் வளர்ச்சிப் பாதையில், ரணில் விக்கிரமசிங்கவிற்கும் பிரபாகரனிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் புலிகளால் நோர்வேயிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அதிநவீன கருவிகள் அதன் வியாபகமடைந்த செயற்பாட்டிற்கு பெரிய அளவில் உந்துதல் அளித்தது. குறிப்பாக முன்னர் இந்த வானொலியை வன்னிப் பகுதியிலும், யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளிலும் மட்டுமே கேட்கமுடிந்த போதிலும் நோர்வேயால் வழங்கப்பட்ட நவீன கருவிகள் பொருத்தப்பட்டதை தொடர்ந்து இதன் செயற்பாட்டை தமிழ்நாடு வரை புலிகள் விஸ்தரித்திருந்தனர். இவ்வாறு புலிகளிற்கும், அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் புலிகள் தங்களது வானொலி ஊடகச் செயற்பாட்டிற்கும் வளம் சேர்த்துக் கொண்டனர்.

ஒட்டு மொத்தத்தில் புலிகள் சமாதான ஒப்பந்தத்தை அடுத்த சண்டைக்குரிய ஆயத்தத்திற்கு பயன்படுத்த முற்பட்ட போதிலும் புலிகளிற்குரிய ஆயுத விநியோகங்கள் சீரற்றுப் போனமையால் புலிகள் தமது இலக்கினை இறுதிவரை எட்டமுடியாமல் போய்விட்டது. ஆனாலும் புலிகளின் ஊடகச் செயற்பாடுகள் இறுதி வரைக்கும் உறுதியாக தொடர்ந்த வண்ணமே இருந்தது. இறுதியாக முள்ளிவாய்க்காலில் தனது நெஞ்சுடன் பெரியளவிலான குண்டொன்றைக் கட்டியவாறு அதனை வெடிக்கச் செய்யும் வரைக்கும் ஜவான் என்ற இந்தப் புலிகளின் குரல் பொறுப்பாளர் தனது வானொலியின் செயற்பாட்டை ஒருநிமிடமும் நிறுத்தி வைக்கவில்லை. உணர்ச்சிமயமான வானொலிச் செய்திகள் உரைகள் மூலம் ஏனைய போராளிகளையும், பொதுமக்களையும் சூடேற்றி யுத்தமுனைக்கு அனுப்பிவைத்த இப் பொறுப்பாளர், ஒருவிடயத்தில் மட்டும் நிதானமாக நடந்துகொண்டார். அதாவது அரச படைகளிடம் சரணடையாமல் தன்னைத்தானே அழித்துக் கொண்டார்.

இது அவரின் துணிச்சல் மிகுந்த ஒரு செயற்பாடா? அல்லது படையினர் தான் சரணடைந்தாலும் தன்னை விட்டுவைக்கமாட்டார்கள் என்று எண்ணிக்கொண்டாரா? அல்லது புலிகளிற்கும், நோர்வே அரசிற்கும் இடையில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அரச படையினர் தன்னிடம் விசாரணைகளை மேற்கொண்டால் பல விடங்கள் வெளிச்சத்திற்கு வந்துவிடும் என்று அஞ்சிக் கொண்டாரா? அல்லது மக்கள்முன் புனர்வாழ்வு பெற்று எந்த முகத்துடன் நடமாடுவது என்று அஞ்சினாரா? அல்லது தனது கொள்கையில் இறுதி வரைக்கும் உறுதியாக இருந்தேன் என்பதை வெளிப்படுத்திக் கொண்டாரா? என்னும் பல கேள்விகள் உங்களிடம் எழலாம். இந்தக் கேள்விகளுக்கான விடைகளை தேடவேண்டிய தேவை இருக்கின்ற அதேவேளை விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் தொடர்பில் மேலும் பார்க்க வேண்டிய தேவைகள் உள்ளமையால் தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

# கொழும்பு மாநாட்டை பகிஷ்கரிக்க வேண்டும்

# பிரித்தானிய பிரதமருக்கு அதிகரிக்கிறது அழுத்தம்



(கொழும்பு)

கொழும்பில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை பிரித்தானிய பகிஷ்கரிக்க வேண்டும் என்று அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் வலுவான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள பொதுநலவாய தலைவர்களின் மாநாட்டை புறக்கணிக்குமாறு பிரித்தானிய பிரதமரை அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கோரியுள்ளார். Rochdale Simon Danczuk என்ற இந்த உறுப்பினர், பிரதமர் கெமருன், இலங்கை மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் மீண்டும் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். பிரித்தானிய சுற்றுலா பயணி ஒருவர் இலங்கையின் தென் பகுதியில் இந்த வருட ஆரம்பத்தில் ஆளும் கட்சியின் உள்ளூர் அரசியல்வாதி ஒருவரால் கொலை செய்யப்பட்டார். எனினும் இந்தக்கொலை தொடர்பில் காத்திரமான விசாரணைகள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை. இந்தநிலையில் அந்த நாட்டில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பது கெமரூனுக்கு உகந்த செயற்பாடாக இருக்காது என்றும் Rochdale Simon Danczuk குறிப்பிட்டுள்ளார்.

# நிவாரணம் வழங்க நிதி ஒதுக்கீடு முதற்கட்டமாக 243 மில்லியன் கிடைக்கும்

## - இடர் முகாமைத்துவ அமைச்சு அறிவிப்பு

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரண உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்காக அரசாங்கத்தினால் 143 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் திறைசேரியினால் 100 மில்லியன் ரூபா பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மேலதிகமாக வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்க தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற நிவாரண உதவிகளில் ஏதேனும் குறைபாடுகள் நிலவுகின்றனவா? என்பது தொடர்பில் தான் நேரில் சென்று கண்காணித்ததாக அவர் தெரிவித்துள்ளார். இதன்படி புத்தளம் மற்றும் மாத்தளை ஆகிய பகுதிகளுக்கு சென்று கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கொலன்னாவையில் அரசியல் செய்ய முடியாது துமிந்தவுக்கு எதிராக கிளம்பியது எதிர்ப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை கொலன்னாவை முல்லேரியாவில் அரசியல் நடவடிக்கைகளுக்காக அனுமதிக்கப் போவதில்லை என்று கொட்டிகாவத்த மற்றும் முல்லேரியா பிரதேச சபையின் தலைவர், பிரசன்ன சோலங்காராச்சி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொலன்னாவையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் கொலையின் போது காயமடைந்த துமிந்த சில்வா தற்போது சிங்கப்பூரில் சிகிச்சைப்பெற்று வருகிறார். அவர் அடுத்த வாரத்தில் இலங்கைக்கு திரும்பி நீதிமன்றத்தில் ஆஜராகவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில், கொலன்னாவையில் அமைதியை குலைத்து விட்டுள்ள துமிந்த சில்வாவை அங்கு அரசியல் செய்ய அனுமதிக்கப் போவதில்லை என்று சோலங்காராச்சி குறிப்பிட்டுள்ளார்.

# தனித்துவத்தை ஒருபோதும் இழக்காது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

அரசாங்கத்தில் இருந்து விலகும் எண்ணம் தங்களுக்கு இப்போதைக்கு இல்லை என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.


நேற்று முன்தினம் தெகிவளையில் இடம்பெற்ற கட்சியின் பேராளர் மாநாட்டில் உரையாற்றிய கட்சியின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் இணைந்திருப்பது தொடர்பில் கட்சியின் உறுப்பினர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

கிழக்கு மாகாண சபையில் அரசாங்கம் ஆட்சி அமைத்தத்துக்கு அரசாங்கம் கொடுத்த சலுகைகள் குறித்து அவர்கள் மனம் திருப்திஅடையவில்லை.

அடுத்த ஆண்டு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள சட்ட மூலங்களுக்கும் முஸ்லிம் காங்கிரஸின் வாக்குகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இதன் போதும் முஸ்லிம் காங்கிரஸ் கைகளை வீசிக் கொண்டுதான் இருக்குமா என்று முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள் கேள்வி எழுப்புகின்றனர் என்றும் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.



எனினும், சுயமான அரசியல் நடத்தும் கட்சி என்ற அடிப்படையில், முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கின்ற போதும், அதன் தனித்தன்மையை ஒருபோதும் இழக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தயக்கமின்றி அகதி அந்தஸ்து கோருவதில் இலங்கையர்கள் வல்லவர்கள்

வெளிநாடுகளில் அகதி அந்தஸ்து கோருவதில் 12 ஆவது நாடாக இலங்கை உள்ளது என்று ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ் தானிகரகம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் 2011 ஆம் ஆண்டைக்காட்டிலும் இலங்கையர்கள் அகதிநிலைக்கோரல் தரப்படுத்தல் குறைந்துள்ளது. 2011 ஆம் ஆண்டில் இலங்கை அகதி நிலைக் கோரலில் 10 ஆவது நாடாக தரப்படுத்தப்பட்டிருந்தது.

இலங்கை அகதிகள் கடந்த வருடத்தில் மாத்திரம் 44 கைத்தொழில் மய நாடுகளில் அகதி அந்தஸ்தை கோரியிருந்தனர். இலங்கையில் இருந்து கடந்த வருடத்தில் 8, 521 அகதி விண்ணப்பங்கள் இந்த நாடுகளுக்கு கிடைத்துள்ளன.

இதன்படி இலங்கையர் உட்பட 136, 605 அகதிகள் பிரான்ஸ், ஜேர்மனி, பிரித்தானியா, இந்தியா, சுவிட்ஸர்லாந்து, அவுஸ்ரேலியா, மலேசியா, அமெரிக்கா மற்றும் இத்தாலி ஆகிய நாடு களில் அகதி அந்தஸ்தை கோரியுள்ளனர்.

# சிவப்பு மழையின் மர்மம் என்ன? மழைநீர் மாதிரி இங்கிலாந்துக்கு

(கொழும்பு)

கடந்த சில தினங்களாக நாட்டில் பெய்த சிவப்பு மழையின் மாதிரிகள் மேலதிக ஆய்வுகளுக்காக இங்கிலாந்திலுள்ள காடிஸ் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வெலிகந்த பகுதியில் பெய்த சிவப்பு மழையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் டாக்டர் அனில் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த மாதிரிகள் கடந்த 28 ஆம் திகதி இங்கிலாந்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இதற்கு முன்னர் பெய்த சிவப்பு மழையுடன் ஒப்பிட்டு பார்ப்பதற்காகவே சிவப்பு மழையின் மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# "தான்தோன்றித்தனமாக நடக்ககூடாது" கூட்டமைப்புக்கு சங்கரி அறிவுரை



தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சியை சேர்ந்தவர்கள் தான்தோன்றித் தனமாக நடந்து கொள்ளக்கூடாது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வருடாந்த பொதுச்சபை கூட்டம் நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு யாழ். நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. கட்சியின் பொதுச் செயலாளர் இரா. சங்கையா தலைமையில் நடைபெற்ற இப்பொதுச் சபை கூட்டத்தில் கட்சியின் செயலாளர் நாயகத்தினால் 15 தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்தீர்மானங்களாவன -

கட்சி வலுவடைய வேண்டுமாயிருந்தால் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகள் தாம் எடுக்கும் முடிவுகள் தங்கள் கட்சியை சார்ந்ததா அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை சார்ந்தா என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் அங்கத்தவர்கள் தான்தோன்றித்தனமாக எடுக்கும் முடிவுகளை தவிர்த்துக்கொள்ளுமாறும் வலியுறுத்தியுள்ளது.

சிறுபான்மை இனத்தவர்கள் எதிர்நோக்கும் எத்தகைய பிரச்சினையாயினும், வன்முறையின்றி பேச்சுவார்த்தை மூலமும், இணக்கப்பாட்டுடனும், சமாதானமாகவும் தீர்த்துக் கொள்ளுமாறும் தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்துகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஏனைய இன மக்களுடனும், பல்வேறு இன, மத குழுக்களுடனும் நல்லுறவைப் பேணுவதுடன், இலங்கை வாழ் அனைத்து மக்களையும் சமாதானத்துடனும், ஜனநாயக மனிதாபிமான அடிப்படையில் உரிமைகளை அனுபவிக்க உத்தரவாதமளிக்க வேண்டுமென்றும் அரசை வலியுறுத்துகின்றது.

விடுதலைப் புலிகள் தலைதூக்குகிறார்கள் என்ற அரசின் குற்றச்சாட்டில் எந்தவித உண்மையும் இல்லையென்றும், அவ்வாறு தொந்தரவு செய்து தலைமறைவாவதற்குரிய வழிமுறைகளை ஏற்படுத்த வேண்டாமென்றும் அரசை தமிழர் விடுதலை கூட்டணி கேட்டுக்கொள்கின்றது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டிய அவசியமில்லை. மாணவர்கள் தம்மைத் தாமே கவனித்துக் கொள்ளக் கூடிய தகுதியுடையவர்கள். மாணவர்களுடன் சம்பந்தப்பட்ட எவரும் அரசு இராணுவத்தை தொடர்ந்து வைத்திருக்கவும், நியாயப்படுத்தவும், வாய்ப்பளிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறும் சம்பந்தப்பட்டவர்களை தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்டுக் கொள்கின்றது.

ஒற்றையாட்சியின் கீழ் ஒருபோதும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதில் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுதியாக உள்ளது என்றும மேற்படி தீர்மானங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வின் போது 2013 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவும் இதன்போது இடம் பெற்றதுடன் இக்கூட்டத்தில், கட்சியின் உறுப்பினர்கள் 50 மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

# படைகளை அகற்றுமாறு நாம் கோரவில்லை

## - சுருதியை மாற்றுகிறார் மனோகணேசன்



(கொழும்பு)

வடக்கில் படை முகாம்களை அகற்றுமாறு நாம் கோரவில்லை என்று மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் உள்ள நிரந்தரமான இராணுவ முகாம்களை அகற்றுமாறு தமிழ் அரசியல் கட்சிகள் அரசாங்கத்திடம் கோரவில்லை என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.


யுத்தம் இடம்பெற்ற காலத்தில் அமைக்கப்பட்ட புதிய இராணுவ முகாம்களை அகற்றுமாறு மட்டுமே கோரி நிற்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் மொத்தமாக இருபது இராணுவப் படைப் பிரிவுகள் காணப்படுவதாகவும், இதில் 10 வடக்கிலும், 5 கிழக்கிலும் காணப்டுவதாகத் தெரிவித்துள்ளார்.

# கூட்டமைப்பின் கண்களில் புலப்படாத

# கிராமிய மக்களின் அடிப்படைத் தேவைகள்

## விமோசனம் கிடைப்பது எப்போது?



கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தினால் பெரிதும் துன்பப்பட்ட மக்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளூடாக மேலும் கஸ்டங்களுக்கு உள்ளாகி வருகிறது. உள்ளூராட்சி மன்றங்களை கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக ஆட்சி செய்கின்றவர்கள் மக்களின் அடிப்படைத்தேவைகளை கூட இனங்காணவில்லை அல்லது இவற்றை தீர்த்துவைக்க முயற்சிக்கவில்லை. இதனால் பாதிக்கப்படுவது இவர்களது தேர்தல் விஞ்ஞாபனம், வாக்குறுதிகளை நம்பி வாக்களித்த மக்களே என ஈ.பி.டி.பி மானிப்பாய் பிரதேச அமைப்பாளரும் வலிதென்மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவருமாகிய அன்ரன் ஜோன்சன் (ஜீவா) தெரிவித்துள்ளார்.

வலிதென்மேற்கு பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் இரண்டாவது தடவையும் ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களால் தோற்கடிக்கப்பட்டமை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மக்களுடைய வாழ்க்கையை முன்னேற்றுவதாக கூறிகொண்டு வந்தவர்கள் இன்று தங்களுக்குள்ளேயே பிளவுபட்டு முரண்படுகின்றனர்.

இவர்கள் எவ்வாறு மக்கள் பிரச்சினைகளை தீர்க்கப் போகிறார்கள்? இது புதிதல்ல ஏனெனில் வெவ்வேறு கொள்கைகளை உடைய கட்சிகளினால் தேர்தலை இலக்கு வைத்து அவசரமாக உருவாக்கப்பட்ட கூட்டே இந்தக் கூட்டமைப்பு. மக்கள் நலன் கருதி நாம் பிரதேச சபைக்கு முன்மொழிகின்ற அபிவிருத்தி திட்டங்களை பிரதேச சபை அரசியல் நோக்குடன் செயற்பட்டு கவனத்தில் எடுப்பதில்லை.

ஆனால் பாதிக்கப்படுவது நாமல்ல மக்களே, இதனை புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த சபைகளுக்கு சேவை பெறுவதற்கு செல்லும் தாம் நாள், மாதகணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் இதனால் நேர, பொருள் விரயங்களை எதிர்கொள்ளவதாக மக்களே எம்மிடம் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த சபைகளுடன் ஒப்பிடும் போது ஈ.பி.டி.பியினால் ஆட்சிசெய்யப்படுகின்ற தீவகப் பிரதேசம் வெகுவாக அபிவிருத்தி கண்டுவருகின்றது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் தீவக போக்குவரத்துக்கென வடதாரகை என்னும் நவீனபடகு சேவைக்குவழங்கப்பட்டது. இதனால் மக்களின் போக்குவரத்து பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட்டது. இதுபோல அபிவிருத்தி பலதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் கூட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சினால் தீவக பிரதேசத்திற்கான முந்நூறு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு அபிவிருத்தி பணிகள் நடைபெறுகிறது.

எனவே அரசியல் நோக்கங்களை விடுத்து தமது பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்து மக்கள் வாழ்வில் ஒளியேற்ற கூட்டமைப்பினர் முன்வர வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (54)


## வடமராட்சி கல்வி வலயத்தின் ஒன்றுகூடல் பிற்போடப்பட்டது

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி அலுவலகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த நிலையில், பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி ச.ஸ்ரீராமச்சந்திரனின் தாயார் காலமானதை அடுத்து இந்நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

# மயானத்தின் குறைபாடுகளை சீர்செய்யுமாறு கோரிக்கை




(வேலணை)

வேலணை - துறையூர் தாளையம்பதி இந்து மயானத்தில் உடல்களை வைத்து எரியூட்டப்படும் கொட்டகையின் கூரையானது சீரழிந்த நிலையில் காணப்படுவதோடு, தகனக்கிரிகைகளுக்காக தமது உறவினர்களின் உடல்களை எடுத்துச் செல்வோர் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருவதை அவதானிக்க முடிகின்றது.

மேற்படி இந்த மயானத்தின் கொட்டகையில் உள்ள தகரங்கள் உக்கி விழுந்த நிலையில், மிகுதி அனைத்தும் காற்றில் பறந்து விட்டதனால் கொட்டகை வெறும் இரும்புக் கம்பிகளாகக் காட்சியளிக்கின்றது.

அத்தோடு இம்மயானத்துக்கான வீதி செப்பனிடாததால் பாடையில் உடல்களைச் சுமந்து செல்வோர் பல சிரமங்களை எதிர்நோக்குவதோடு தண்ணீர்க் கால்வாய் ஒன்றைக் கடந்து செல்ல வேண்டிய அவல நிலைக்கு ஆளாவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

எனவே மழை காலங்களில் இம்மயானத்தில் உடல்களை வைத்து எரியூட்டுவதில் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கவனத்தில் கொண்டு, மேற்படி கொட்டகையின் கூரைக்கு தகரங்கள் அமைத்துத் தருவதோடு, மயானத்துக்குச் செல்லும் வீதியையும் புனரமைப்பதற்கான செயற்பாடுகளை வேலணை பிரதேச சபை மேற்கொள்ள வேண்டுமெனப் பொது மக்கள் மற்றும் நலன்விரும்பிகள் கேட்டுக்கொள்கின்றனர். (138)

# கணக்கு வைப்புக்களுக்கு தனியான செயற்பாடு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 4 பிரதேச செயலகப் பிரிவுகளின் கணக்கு வைப்புக்களும் 2013 ஜனவரி மாதம் முதல் தனியாக இடம்பெறவுள்ளது. கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி ஆகிய 4 பிரிவுகளும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக இருந்து அண்மையில்தான் இவை பிரதேச செயலகப் பிரிவுகளாக தரம் உயர்த்தப்பட்டன.

ஆயினும் மாவட்டச் செயலகத்தின் ஊடாகவே கணக்கு வைப்பு நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இனி ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலுமுள்ள கணக்காளர்கள் மூலமாக தனியான வங்கிக் கணக்கு ஊடாக இடம்பெறவுள்ளது. இதன் மூலம் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் இலகுவாகவும் விரைவாகவும் இடம்பெற வழியேற்பட்டுள்ளது.

# நவிண்டில் கிராமத்தில் கட்டாக்காலி மாடுகள் அதிகம்

கரணவாய் வடக்கு நவிண்டில் கிராமத்தில் 100 இற்கு மேற்பட்ட மாடுகள் பராமரிப்பு இன்றி கட்டாக்காலிகளாக திரிவதால் அப்பகுதி மக்கள் இவற்றால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிவருவதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகள் பராமரிப்பு இல்லாமையால் கோயில் சூழல்களிலும், வீதிகளிலும் இரவு வேளைகளில் படுத்துறங்குகின்றன.

இதனால் இரவு வேளைகளில் வீதியால் செல்வோர் சிரமப்படுவதாகவும், சிலவேளைகளில் மாட்டுடன் மோதி விழும் நிலையும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கிராமத்தில் மாடுகளை வளர்ப்போர் உரியவகையில் கட்டி வளர்க்க வேண்டும் எனவும் இதன்மூலம் ஏனைய மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவது தவிர்க்கப்படும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (18)

# முரசின் இன்றைய பலன்

(31.12.2012 - திங்கட்கிழமை)

நந்தன வருஷம் மார்கழி மாதம் 16 ஆம் திகதி. நட்சத்திரம் பூசம் முற்பகல் 9.45 வரை. திதி திருதியை முன்னிரவு 08.06 வரை. சித்தம். இராகுகாலம் 7.59 - 9.29 வரை. சுபநேரம் 12.29 - 1.59 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உங்களுக்கு எதிராக செயல்பட்டவர்கள், மாறுவர். தொழில் வளர்ச்சியும், இனிய அனுபவமும். தாராள பணவரவு. போட்டி, பந்தயத்தில் வெற்றி. |
| ரிஷபம் | செயல்களில் எளிமையும், விவேகமும். சமூகத்தில் நன்மதிப்பு. தொழில், வளர்ச்சிப்பணி பூர்த்தி. சராசரி பணவரவு. உறவினர் வருகையால், |
| மிதுனம் | வீண்பிரமைகளால் மனவருத்தம் ஏற்படலாம். கருத்து சொல்வதை தவிர்க்கவும். பணிச்சுமை அதிகரிக்கும். செலவு கூடும். |
| கடகம் | உங்கள் பேச்சு சிலருக்கு, சிரமம் தரலாம். தொழில், கூடுதல் முதலீடு. கடன் வசூலாகும். உடல் நலத்திற்கு உணவில் கவனம். ஓய்வு நல்லது. |
| சிம்மம் | மனதில் சந்தோஷம். பொதுப் பணி ஆர்வம். அந்தஸ்து உயரும். தொழில் அபிவிருத்தி. பணவ்ரவு முன்னேற்றம். விரும்பிய பொருள் வாங்குவீர்கள். |
| கன்னி | பிரிவு ஒன்றினால் மன்தில் வருத்தம். தொழில், புதிய வாய்ப்புகள். வரவை விட, செலவு கூடும். தாய்வழி உறவில் அனுகூலம். தகவல் மாறி வரும். |
| துலாம் | செயல்கள் தாமதம். மனதில் சஞ்சலம். அனுபவசாலி ஆலோசனையால் நன்மை. கூடுதல் உழைப்பால் வளர்ச்சி. செலவுக்கேற்ற வரவு. |
| விருச்சிகம் | விமர்சனம் வரும். பெரிதுபடுத்த வேண்டாம். உழைப்பில் கவனம் செலுத்த, நல்லது நடக்கும். தொழில், இடையூறு விலகும். குடும்பத்திடம் தாராளம். |
| தனுசு | உறவினர்களால் அனுகூலம். நம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். தொழில், இலக்கு நிறைவேறும். தாராள பணவரவு. தாயின் தேவை நிறைவேற்றுவீர்கள். |
| மகரம் | உங்கள் தனித்திறமை பாராட்டப்பெறும். மனதில் உற்சாகம், மகிழ்ச்சி. தொழில், இடையூறு, சரிசெய்வீர்கள். பணவரவு. புதிய திட்ட முயற்சி. |
| கும்பம் | நண்பர், உறவினர்களிடம் நற்பெயர் பெறுவீர்கள். தொழில், முன்னேற்றம். உபரி வருமானம். தான, தர்ம நாட்டம். எதிர்கால திட்டமிடல். உடல் நலம் சீர். |
| மீனம் | கடும் முயற்சிக்கே பலன். தொழில், தொந்தரவு வரலாம். பகை விலக்க நிதானம் அவசியம். சிக்கனம் பின்பற்றுவீர்கள். குடும்பத்தினர் உதவிகரம். |

# ரொனி கிரேக் இலங்கையை நேசித்தவர்



(கொழும்பு)

இங்கிலாந்து அணியின் முன்னாள் சகலதுறை வீரரும், நேர்முக வர்ணனையாளருமான ரொனி கிரேக் இலங்கையை மிகவும் நேசித்தார் என இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்துள்ளார்.


நேற்று முன்தினம் மரணமடைந்த ரொனி கிரெகிற்கு அஞ்சலி செலுத்தும் விதமாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அர்ஜூன ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், இலங்கையை மிகவும் நேசித்த, இலங்கையர்களால் மிகவும் நேசிக்கப்பட்டவரான ரொனி கிரேக், நுரையீரல் புற்றுநோய் காரண-மாக அவுஸ்ரேலியாவில் வைத்து நேற்று முன்தினம் மரணமடைந்தார்.

இலங்கையின் கிரிக்கெட்டை ரொனி கிரேக் மிகவும் நேசித்ததோடு, அவர் இலங்கை நாட்டையும் மிகவும் நேசித்தார். ரொனி கிரெகின் இழப்பு கிரிக்கெட் உலகத்திற்கு மிகப்பெரிய இழப்பாகும்.

1995ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவில், மெல்பேர்ணில் வைத்து இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் பந்தை எறிவதாக குற்றஞ்சாட்டப்பட்டபோது ரொனி கிரேக் இலங்கைக்கு தனது ஆதரவை வழங்கியிருந்தார். அக்காலத்தில் இலங்கையை அவர் வழி நடத்தியுமிருந்தார்.1996ஆம் ஆண்டு உலக கிண்ணத்தை இலங்கை அணியே வெற்றிகொள்ளும் என முதன்முதலில் தெரிவித்தவர் ரொனி கிரேக். இந்தியன் பிறீமியர் லீக்கின் பிழையான விடயங்களை ரொனி கிரேக் வெளிப்படையாக தெரிவித்திருந்தார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மைக்கல் ஹசி ஓய்வு



(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர் மைக்கல் ஹசி இலங்கை [illegible] 3ஆவது டெஸ்ட் போட்டிக்குப் பின்னர் சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெற முடிவு செய்துள்ளார்.

இது குறித்து அவர் தனியார் ஊடகம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில், எனது குடும்பத்துடன் அதிக நேரம் செலவிட விரும்புகிறேன். எனவே, ஓய்வு பெறும் முடிவை எடுத்துள்ளேன் என்றார்.

இவர், தனது கடைசி 5 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 3 சதங்களை எடுத்துள்ளார். மேலும், 78 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 6,183 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 185 ஒரு நாள் போட்டிகளிலும், 38 ருவென்ரி-20 போட்டிகளிலும் விளையாடியுள்ளார். மைக் ஹசி, முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங்கிற்கு அடுத்து ஓய்வு அறிவிப்பை வெளியிட்ட 2ஆவது வீரர் ஆவார். இந்தியாவிற்கு எதிரான பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நடைபெறும் போட்டி மற்றும் இங்கிலாந்துடனான ஆஷஸ் தொடர் ஆகியவை வரவுள்ள நிலையில், இவரது ஓய்வை அடுத்து அணியில் பலம் சேர்க்க புதிய வீரர்களை தேர்வு செய்ய அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபைத் தயாராக வேண்டியுள்ளது. இதே வேளை, அவுஸ்ரேலியா, மேற்கிந்தியத்தீவுகள், இலங்கை ஆகிய அணிகளுக்கிடையிலான முத்தரப்பு ஒருநாள் தொடருடன் ஹசி சர்வதேச ஒரு நாள் தொடரிருந்தும் ஓய்வுபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



தாய்லாந்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கண்காட்சி ரென்னிஸ் போட்டியில் சீனாவின் லீநாவை வீழ்த்திய பெலாரசின் அசரன்கா, வெற்றிப் பரிசுடன் நிற்பதைக் காணலாம். இந்த வெற்றி உற்சாகம் அளிப்பதாகவும், அவுஸ்ரேலியா ஓப்பன் ரென்னிஸ் தொடருக்கு ஊக்கமளிக்கும் எனவும் வெற்றியின் பின் அசரன்கா குறிப்பிட்டார்.

# யுனைட்கான் சிறப்புப் பந்து வீச்சு பாகிஸ்தான் இலகு வெற்றி




(சென்னை)

யுனைட்கானின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் இந்திய அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி இலகுவான வெற்றியைபெற்றது. பாகிஸ்தான், இந்திய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது போட்டி நேற்று சென்னையில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய இந்திய அணிக்கு முதல் மூன்று ஓவர்களும் சேவாக், கம்பீர் இணை பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களைப் பதம் பார்த்தது. இதன் பின்னர் அதிர்ச்சி அளிக்கும் வண்ணம் யுனைட்கானின் பந்து வீச்சு இந்திய அணிக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது. இந்திய அணி முதல் விக்கெட்டை 17 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்ததுடன், தொடர்ந்தும் அதே எண்ணிக்கையில் இரண்டாவது விக்கெட்டையும், 19, 20, 29 என அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் விழுந்தவண்ணமிருந்த நிலையில் 50 ஓவர்கள் வரை இந்திய அணியால் தாக்குபிடிக்க முடியுமா என்ற கேள்வி எழுந்திருந்தது. இந்நிலையில் ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த ரெய்னா, டோனி பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். 73 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. தொடர்ந்து அஸ்வினுடன் இணைந்து பொறுப்புடன் ஆடிய டோனி, அணியை கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற வித்திட்டார். இறுதியில் இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டோனி 125 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 113 ஓட்டங்களைப் பெற்றார். அஸ்வின் ஆட்டமிழக்காது 31, ரெய்னா 43 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யுனைட்கான் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 228 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பம் அதிர்ச்சி அளிக்கும் வகையில் இருந்தது. தனது கன்னிப் போட்டியில் அடியெடுத்து வைத்த புவனேஸ்வரகுமார் முதல் பந்திலேயே ஹபீஸின் விக்கெட்டை சாய்த்தார். இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த யுனிஸ்கான், நசீர் ஜம்சம் ஆகியோர் பொறுப்புடன் ஆடி அணியின் வெற்றிக்குத் துணைபுரிந்தனர். இறுதியில் பாகிஸ்தான் அணி 48.1 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் நசீர் ஜம்சட் 132 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 101 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். மற்றும் மலிக் ஆட்டமிழக்காது 34, யுனிஸ்கான் 58 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் புவனேஸ்வர குமார் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்டநாயகனாக டோனி தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டி எதிர்வரும் 3ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

# ஐயோ கடவுளே! எனக்கு மட்டும் ஏன் இப்படி



(மார்ட்டிஷ்)

காயத்திலிருந்து மீண்டு வந்த நட்சத்திர ரென்னிஸ் வீரர் ரபெல் நடாலுக்கு தற்போது காய்ச்சல் ஏற்பட்டுள்ளதால், அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் வரை விளையாட முடியாத நிலை உருவாகியுள்ளது.

ரென்னிசில் 11 கிராண்ட்சிலாம் பட்டங்களை வென்ற முன்னணி வீரரான ரபெல் நடால் கடந்த 6 மாதமாக ரென்னிஸ் போட்டியில் ஆடவில்லை. அவரது கால் மூட்டில் காயம் ஏற்பட்டதால் அவர் விளையாடாமல் இருந்து வந்தார்.

இந்நிலையில் உடல் நலம் சரியாகி அவுஸ்ரேலிய ஓப்பன் போட்டியில் விளையாடுவதற்காக தயாராகி வந்தார். அதற்கு முன்னதாக கத்தாரில் இன்று தொடங்கும் ரென்னிஸ் போட்டியில் அவர் விளையாடுவதற்கு திட்டமிட்டு இருந்தார்.

மேலும் அபுதாபியில் நடக்கும் காட்சி போட்டியிலும் விளையாட திட்டமிட்டு இருந்தார். ஆனால் திடீரென அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. எனவே அவர் 2 போட்டிகளிலும் விளையாடுவதை ரத்து செய்தார். ஆனாலும் அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் அவர் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இப்போது அந்த போட்டியிலும் விளையாட மாட்டேன் என்று நடால் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக நடால் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, எனது மூட்டு காயம் சரியாகிவிட்டது. இதனால் சிறப்பாக விளையாட முடியும். ஆனால் காய்ச்சல் ஏற்பட்டத்தன் மூலம் எனது வயிற்றில் வைரஸ் தொற்று உள்ளது. எனவே என்னால் சரியாக பயிற்சி செய்ய வைத்தியர்கள் அனுமதிக்கவில்லை. கடந்த ஒரு வாரமாக பயிற்சியில் விளையாடததால் என்னால் அவுஸ்ரேலிய ரென்னிசில் விளையாட முடியாது என்று கருதுகிறேன். எனவே இந்த போட்டியில் விளையாடும் திட்டத்தை கைவிட்டுயுள்ளேன். வைத்தியர்களும் நான் போதிய ஓய்வு எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளனர். பெப்ரவரி மாதம் நடக்கு அகபால்கோ ஆடவர் போட்டி விளையாடுவதற்கு நான் தயாராகி வருகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

# ஆவரங்கால் இந்து, புத்தூர் கலைமதி இறுதியில் இன்று மோதல்


இந்து இளைஞர்


கலைமதி

(மல்லாகம்)
மல்லாகம் நியூவேறியஸ் விளையாட்டுக்கழகத்தின் முதலாம் ஆண்டு நிறைவு கரப்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு ஆவரங்கால் இந்து இளைஞர் மற்றும் புத்தூர் கலைமதி அணிகள் தகுதிபெற்றுள்ளன.

மல்லாகம் நியூவேறியஸ் விளையாட்டுக்கழகத்தின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் மாபெரும் கரப்பந்தாட்டப் போட்டித் தொடரை முன்னொளியில் நடத்தி வருகின்றது.

நியூவேறியஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடர் லீக் அடிப்படையில் இடம்பெற்று வருகின்றது.

பன்னாலை கணேசன், ஆவரங்கால் இந்து இளைஞர் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில், ஆவரங்கால் இந்து இளைஞர் 2-1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற போட்டியில் புத்தூர் கலைமதி அணியும் அச்சுவேலி ஸ்ரார் அணியும் மோதின. இதில் புத்தூர் கலைமதி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து புள்ளிகள் அடிப்படையில் அரையிறுதிக்கு அணிகள் தெரிவு செய்யப்பட்டன. இதில் முதலாவது அரையிறுதியில் பன்னாலை கணேசன் அணியும் புத்தூர் கலைமதி அணியும் மோதின. ஐந்து செட்களைக் கொண்ட இப்போட்டியில் ஆரம்பம் முதலே புத்தூர் கலைமதி அணி ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் புத்தூர் கலைமதி அணி 25-20, 25-20,25-22 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

மற்றைய அரையிறுதிப் போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் அணியும், ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் மோதின. இதில் அச்சுவேலி ஸ்ரார் அணி முதல் செட்டை 25-23 என்ற கணக்கில் வென்று ஆவரங்கால் இந்து இளைஞர் அணிக்கு அதிர்ச்சி கொடுத்தது. பின்னர் சுதாகரித்துக் கொண்ட ஆவரங்கால் இந்து தொடர்ந்து இடம்பெற்ற மூன்று செட்களையும், 25-22, 25-12, 25-22 என்ற கணக்கில் வெற்றிபெற்று .இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

புத்தூர் கலைமதி அணிக்கும், ஆவரங்கால் இந்து இளைஞர் அணிக்குமிடையிலான இறுதிப் போட்டி இன்றைய தினம் இரவு 7.00 மணிக்கு இடம்பெறவுள்ளதாகவும், கிண்ணம் வெல்லும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்படும் எனவும், போட்டி நிகழ்வை விளையாட்டு ஆர்வலர்கள் கலந்து கொண்டு கண்டுகளிக்குமாறும் போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (93)

விளையாட்டுச் செய்திகள்

# சென்றலின் தரப்படுத்தல் கே.சி.சி.சி. முதலிடம்

(யாழ்ப்பாணம்)
யாழ். சென்றல் விளையாட்டுக்கழகத்தின் யாழ். நகரில் சிறந்த அணித் தெரிவில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி முதலிடத்தைப் பிடித்து ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றிக் கொண்டது.

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் மூன்றாவது ஆண்டாக நடாத்தும் யாழ். நகரில் சிறந்த அணித் தெரிவு, சென்றல் விளையாட்டுக்கழகத்தின் 11ஆவது அகவையில் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

## தரப்படுத்தல் விபரம்

| அணிகள் | போட்டிகள் | வெற்றிகள் | புள்ளிகள் |
|---|---|---|---|
| கே.சி.சி.சி. | 30 | 22 | 152.3 |
| ஜொனியன்ஸ் | 23 | 14 | 111.4 |
| சென்றலைட்ஸ் சொக்ஸ் | 18 | 14 | 93.3 |
| யாழ். பல்கலை | 16 | 10 | 92 |
| ஜொலிஸ்ரார் | 22 | 11 | 91.4 |
| யாழ். சென்றல் | 18 | 09 | 70.9 |
| பற்றீசியன்ஸ் | 15 | 10 | 70.4 |
| பரீஸ் | 14 | 05 | 44.3 |
| ஸ்ரான்லி | 10 | 04 | 41.1 |
| யூனியன்ஸ் | 08 | 03 | 33.7 |
| திருநெல்வேலி சீ.சீ. | 09 | 03 | 29.8 |
| வை.எம்.எச்.ஏ. | 07 | 02 | 29.2 |
| கிறாஸ்ஹோப்பர் | 11 | 03 | 28.4 |
| ஓல்ட் கோல்ஸ் | 09 | 04 | 26.8 |
| கே.சி.சி.சி. 'பி' | 04 | 03 | 26.7 |
| அரியாலை சென்றல் | 10 | - | 15.1 |
| ஸ்கந்தா ஸ்ரார் | 03 | 01 | 12.5 |
| நியூஸ்ரார் | 06 | - | 11.5 |
| காமாட்சி | 05 | 01 | 10.7 |
| ஈகிள்ஸ் | 04 | 01 | 10 |
| சென்றலைட்ஸ் புளூஸ் | 01 | - | 03.5 |

இதில் கொக்குவில் கே.சி.சி.சி. அணி 30 போட்டிகளில் பங்குபற்றி 22 வெற்றிகளைப் பதிவாக்கியதுடன் ஒரு போட்டி சமநிலையையும் பெற்று, 152.2 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.


யாழ். ஜொனியன்ஸ் அணி 23 போட்டிகளில் பங்குபற்றி 14 போட்டிகளில் வெற்றிபெற்று 111.4 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி 18 போட்டிகளில் பங்குபற்றி 14 போட்டிகளில் வெற்றிபெற்று 93.3 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டது.

இத்தொடரில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்ட கொக்குவில் கே.சி.சி.சி. அணிக்கு ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணமும் பணப் பரிசிலும் நேற்று வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் தெரிவான முதல் மூன்று அணிகளும் 2013ஆம் ஆண்டு யூலை மாதத்தில் நடைபெறவிருக்கும் முக்கோண போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2010,2011ஆம் ஆண்டுகளில் யாழ். பல்கலைக்கழக அணி முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இத்தெரில் 2012ஆம் ஆண்டு 124 போட்டிகள் நடைபெற்றது. யாழ். நகரில் கிரிக்கெட் வரலாற்றில் இது ஓர் புதிய சாதனையாக உள்ளது. இவ் 124 போட்டிகளில் 48 ருவென்ரி-20 ஆட்டங்களும், 22, 30 ஓவர் போட்டிகளும், மூன்று 40 ஓவர் போட்டிகளும், 51 ஒரு நாள் போட்டிகளும் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சென்றல் விளையாட்டுக்கழகத்தின் இத்தெரிவு முயற்சிக்கு விளையாட்டு ஆர்வலர்கள், அதிகாரிகள் பலரும் பாராட்டுத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


கொக்குவில் கே.சி.சி.சி.


யாழ். ஜொனியன்ஸ்


சென்றலைட்ஸ் சொக்ஸ்

# மொழியின் தன்மைகள்

— திலீபன் —

கம்ப ராமாயணம் மொழிபெயர்ப்பா? இல்லை என்றே தோன்றுகிறது. அப்படியானால் அது மூலாதாரமான நூலா? இல்லை. அது வால்மீகி ராமாயணத்தின் தழுவல். வால்மீகியின் கற்பனை வளம், புலமை, பாடல்களின் நயம், பாத்திரங்கள் ஆகியவற்றைவிட் கம்ப ராமாயணம் சிறப்பாகவே உள்ளது. பட்டிமன்ற மொழியில் கூறுவதென்றால் வால்மீகியை விட கம்பன் விஞ்சி நிற்கிறான்.

இலக்கிய உலகில் இத்தகைய சம்பவங்கள் உண்டு. உமர்கயாமின் "ருபியாத்" அற்புதமான படைப்பு. அதனை எட்வேர்ட் ஃபிட்ஜெரால்ட் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். மூலத்துக்கு எந்த வகையிலும் குறையாத மொழிபெயர்ப்பாகும்.

தமிழ் மொழியில் கம்பனுக்கு என்று தனித்த இடமுண்டு. அவனுடைய படைப்பான இராமாயணம் அவனுக்கு பெற்றுத் தந்த இடம் அது. அந்த மாபெரும் கவிஞனின் படைப்பு மொழிபெயர்ப்பா, தழுவலா என்ற கேள்வி இரண்டாம்பட்சமாகி விட்டது.

வியாசனின் மகாபாரதம் வில்லிபுத்தூரரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. மூல நூலிலிருந்து பல சம்பவங்கள் நீக்கப்பட்டும் புதியதாக சேர்க்கப்பட்டும் உருவான நூல் இது.

பொதுவான இலக்கிய மொழியிலிருந்து வேறுபட்டு, அந்தந்தப் பகுதி மக்கள் பேசும் மொழியைப் பயன்படுத்தும் போது அது அந்த வட்டாரத்தில் அதில்




வாழும் மக்களின் ஆத்மாவைத் தொடுவதாக அமையும். அதே சமயம், மண் வாசனையோடு மொழிபெயர்ப்பது என்பது மிகவும் கடினமானதாகும்.

வட்டார மொழி என்பதை ஆங்கிலத்தில் dialect என்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் மொழி மாற்றம் ஏற்படுவதற்கு புவியியல் சமூகக் காரணங்கள் உண்டு. இங்கிலந்தில் பேசுவதற்கும், அமெரிக்கா, அவுஸ்ரேலியாவில் பேசுவதற்கும் உச்சரிப்பில் இருந்து வித்தியாசங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

அமெரிக்காவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் கடுமையான தண்டனை பெற்ற குற்றவாளிகளை அனுப்பி குடியமர்த்திய காலம் ஒன்று உண்டு. கலாசார ரீதியாகவும் பொருளியல் ரீதியாகவும் மிகவும் மாற்றுப் பழக்க வழக்கங்களைக் கொண்ட மக்களும் குற்றவாளிகளும் குடியமர்த்தப்பட்டனர்.

இங்கிலாந்து நாட்டுக்குள்ளேயே பெர்க்ஷயர், வடக்கு இங்கிலாந்து ஆகிய பகுதிகளில் ஆங்கில உச்சரிப்பு வித்தியாசப்படும். சில வார்த்தைகளுக்கான பொருள்கூட வேறுபடும்.

பொதுவாக வட்டார மொழி என்று நாம் கூறும் போதே பொதுவான நயமான, தரமான மொழி ஒன்று இருக்கிறது என்பதும், அதனை வட்டார மொழி பேசுபவர்கள் பயன்படுத்துவதில்லை என்பதும் தொக்கி நிற்கும் ஒன்றாகும்.

"பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு பேச்சாளர்களால் மொழியின் வேறுபட்ட தன்மைகள் உணர்த்தப்படும். இது பேசுபவர், கேட்பவர், சூழல், படிப்பவர், எழுதுபவர் என்று மாறும். அதற்குத் தகுந்தபடி அர்த்தம் பதிவு செய்யப்படும்." "பொதுவான மற்றும் குறிப்பிட்ட அர்த்தங்கள்" என்ற நூலில் டிக்சன் குறிப்பிடும் விஷயம் இது.

ஒருவர் மொழியின் பல்வேறு தன்மைகளைச் சூழலுக்குத் தகுந்தவாறு பயன்படுத்துகிறார்.

தமிழ்த் துறைப் பேராசிரியர், சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் மாண்பு பற்றி வகுப்பில் விளக்கும்போது அவர் பயன்படுத்தும் மொழி வேறு. வீட்டில் சமையலறையில் பயன்படுத்தும் மொழி வேறு. அவரே இரவு தன் மனைவியோடு தனித்திருக்கும்போது பேசுவது வேறு. ஒரே மொழியில் அழுத்தம், அர்த்தம், குரல் ஆகியவை வித்தியாசப்படுகின்றன. சூழலுக்குத் தகுந்தபடி நாம் வார்த்தைகளை அர்த்தப்படுத்திக் கொள்கிறோம்.

உதாரணமாக "நாளை மூன்றாவது பாடத்தை வாசித்து விட்டு வர வேண்டும்" என்று பள்ளி ஆசிரியர் கூறுகிறார். லால்குடி ஜெயராமன் அருமையாக வாசித்தார் என்கிறார்கள். விருந்துக்குச் சென்ற இடத்தில் ருசியான உணவை உண்டதை என் பேரன் குறிப்பிடும் போது "தாத்தா இன்று வாசித்து விட்டேன்" என்று கூறுவான்.

சூழல், பேசுபவர், கேட்பவர் ஆகியவற்றைப் பொறுத்து வாசிப்பு என்ற வார்த்தைக்குப் பொருள் வேறுபடுகிறது. அறிவியல், பத்திரிகைத் துறை, சட்டத் துறை, மதம் ஆகிய துறைகளில் வார்த்தைகளுக்கு வரையறுக்கப்பட்ட அர்த்தங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நாம் பயன்படுத்தும் ஊடகங்களும் இவற்றை நிர்ணயம் செய்கின்றன.

தொலைபேசியைப் பயன்படுத்தும் போது சிக்கனமான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறோம். தந்தி மூலம் தகவலைத் தெரிவிக்கும்போது குழப்பமேற்படாமல் செய்கிறோம். தொலைக்காட்சி, அறிவிப்பு, செய்தி, குறுஞ்செய்தி என்று ஒவ்வொன்றுக்கும் வார்த்தைகளையும் பொருள்களையும் தனித் தனியாகப் பதிவு செய்கிறோம்.

# தேன் கடத்தல்

என்னென்னவோ விசித்திரங்கள் நடக்கின்றன. தங்கத்தைக் கடத்தினார்கள், கடத்துகிறார்கள் உலகெங்கும். சாராயத்தை உள்நாடெங்கும் கடத்திக் கொண்டிருந்தார்கள். தடை செய்யப்பட்ட பொருட்களை நுகரவும் ஆட்கள் உண்டு, விற்கவும் ஆட்கள் உண்டு. இடைத்தரகர்களும், சட்டத்தை அமுல்படுத்தாமல் கண் மூடி கையூட்டு வாங்கிக் கொள்ளவும் ஆட்கள் உண்டு. அதே நேரம் மனிதத்தின் விலங்கு இயல்பு தொடர்ந்து வெல்வதற்கு ஒரு சான்று



இத்தனை பொருட்கள் ஏதேதோ காரணங்களுக்காகக் கடத்தப்படுவதுதான். மனிதரே கடத்தப்படுகிறார்- பொருளாக. ஆபிரிக்கர்கள் ஐரோப்பாவுக்கும், சீனர்களும், இந்தியர்களும், இலங்கைத் தமிழர்களும், ஈரானியரும், சமீபத்தில் சிரியர் - லிபியர் - பல அரபியர்கள் பல நாடுகளுக்கும் கடத்தப்படுவதும் நடக்கிறது. இவை பொருளாதார நலம், மேம்படுதல் தேடி என்பது ஒரு பக்கம் இருந்தாலும், இன்னொரு பக்கம் ஏமாற்றப்பட்டுக் கடத்தப்படுபவர்கள்தான் அதிகம். அடிமைகளாக வாழ்வதற்குத் தாமே கட்டணம் கட்டி மக்கள் பல நாடுகளுக்கும் போகிறார்கள் என்பதுதான் என்னவொரு பயங்கரம். வேறென்ன கடத்தப்படுகின்றன? உலகில் அதிகம் கடத்தப்படும் ஒரு பொருள் - ஆம், அது பொருளாகத்தான் பாவிக்கப்படுகிறது - பெண்கள். இவர்கள் முன்பெல்லாம் ஆசிய - ஆபிரிக்க நாடுகளில் இருந்து கடத்தப்பட்டுக் கொண்டிருந்தது போய், சமீபத்தில் முன்னாள் சோவியத் நாடுகளிலிருந்தும், சமீபத்தில் ஈரான், ஈராக் போன்ற நாடுகளிலிருந்தும், என்றும் போல பல லத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்தும் கடத்தப்படுவது நடக்கிறது.

இந்த வகையில் அறியவரும் இன்னொரு கடத்தலோ விசித்திரத்தின் எல்லை. சீனாவில் இருந்து தேன் அமெரிக்காவுக்குக் கடத்தப்படுகிறதாம். அதுவும் அதை இந்தியாவிலிருந்து கொணரப்படும் தேன் என்று பொருளின் மூலத்தை மாற்றி, மறு முத்திரையிட்டு, கடத்தப்படுகிறது. எதற்கு, தேனை திறந்த சந்தையில் விற்கத்தான் அனுமதி இருக்கிறதே, இதிலென்ன கடத்தல்? சீனாவிலிருந்து வரும் பொருட்களுக்கு அமெரிக்கா இப்போது வரி விதிக்கிறது. இறக்குமதி வரியைக் கொடுக்க அமெரிக்க வியாபாரிகளும் தயாரில்லை, ஏற்றுமதியின் விலையை இப்படி அதிகரிக்க சீனர்களும் தயாரில்லை. விளைவு, இந்தியாவின் தேனாக அமெரிக்கச் சந்தையில் சீனத் தேனை விற்க ஏற்பாடு. இதில் பெரும் பங்கெடுப்பவர்கள் சீனர் மட்டுமல்ல, பன்னாட்டு உணவுப் பொருள் ஏற்றுமதி இறக்குமதி செய்வதில் சந்தையை ஆக்கிரமிக்கும் அமெரிக்க - மேலை நாட்டு நிறுவனங்களும் சேர்ந்தே இதைச் செய்கிறார்கள்.

சமீபத்தில் இப்படி ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டபோது இந்த விவகாரம் வெளியில் தெரிய வந்திருக்கிறது. இதை நாம் பொதுச் செய்தித்தாள்களில், ஊடகங்களில் கண்டு விட முடியாது. அவ்வளவு இரகசியமாக மறைத்துவிடுகிறார்கள்.

# மை!


ஒருசமயம் எழுத்தாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசும்போது கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், "எழுத்தாளர்கள் தங்கள் பேனாவை எப்படிப்பட்ட மை தொட்டு எழுதுகிறார்கள் தெரியுமா? சிலர் பெருமையில் எழுதுகிறார்கள். வேறு சிலர் பொறாமையில் எழுதுகிறார்கள். சிலர் தற்பெருமையைத் தொட்டு எழுதுகிறார்கள். ஆனால் தொடக்கூடாத மை மடைமை, கயமை, பொய்மை, வேற்றுமை.

நன்மை தரக்கூடிய செம்மை, நேர்மை, புதுமை ஆகியவற்றைத் தொட்டு வாசகர்களின் மனதைத் தொடும்படியாக எழுத வேண்டும்.

எழுத்தாளர்கள் நீக்க வேண்டிய மைகள் - வறுமை, ஏழ்மை, கல்லாமை, மடைமை, அறியாமை. இந்த நோக்கத்தையே எழுத்தாளர்கள் கடமையாகவும் உரிமையாகவும் கொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டார்.



# "திருத்திக் கொள்கிறேன்"!



ஒரு பேட்டியில் பிரபல பாடகர் டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா கூறினார்:

"திருவிளையாடல் படத்தில் நான் ஒரு பாட்டு பாடினேன். கர்நாடக இசையில் அமைந்த மிக நீளமான பாட்டு "ஒருநாள் போதுமா?" என்று தொடங்கும் அந்தப் பாட்டுக்கு படத்தில் நடிகர் டி.எஸ்.பாலையா வாயசைத்து நடித்தார். அந்தக் காட்சி படமாக்குவதற்கு முதல் நாள் நடிகர் பாலையா என்னிடம், "அந்தக் காட்சி படமாக்கப்படும்போது நீங்கள் வந்து கட்டாயம் அதைப் பார்க்க வேண்டும். அந்தப் பாடலுக்கு என் உதட்டசைவு, முக பாவம், அங்க அசைவுகள் எல்லாம் சரியா இருக்கிறதா என்று பாருங்கள். ஏதாவது தவறு இருந்தால் சொல்லுங்கள். திருத்திக் கொள்கிறேன்" என்று சொன்னார்.

இப்படிச் சொல்வது மிகவும் அபூர்வம்!"

# சினிமா சினிமா



✘ புற்றுநோய் சிகிச்சையிலிருந்து மீண்ட மம்தா மோகன்தாஸ், பிரஜித் பத்மநாபன் என்பவரை மணந்து கொண்டார். திருமணத்துக்குப் பின் ஓரிரு படங்களிலும் நடித்தார். தமிழில் "தடையறத் தாக்க" படத்தில் நடித்தார். இந்நிலையில் கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறு-பாடுகளால் விவகாரத்து பெற்றுள்ளார். "எனக்கு இது சோதனையான காலம். நான் எதிர்பார்க்காத சில விஷயங்கள் என் வாழ்க்கையில் நடந்து கொண்டே வருகிறது. மரணத்தின் வாசலை தொட்டு விட்டு வந்த எனக்கு நல்ல வாழ்க்கை அமையவில்லை. ஆனால் இப்போதும் நான் சோர்ந்து விடவில்லை" என விவகாரத்து பற்றி தன் ட்விட்டரில் கூறியிருக்கிறார் மம்தா. மம்தாவுக்கு நிச்சயதார்த்தம் நடந்த நாள் 11.11.2011. விவகாரத்து பெற்ற நாள் 12.12.2012.

✘ "விட்டுக் கொடுப்போர் கெட்டுப் போவதில்லை" என்ற கருத்தை மையமாக வைத்து உருவாகி வரும் படம் "நீங்காத எண்ணம்." "நீங்கள் கேட்டவை" பானுசந்தர் மகன் ஜெயந்த் நாயகனாக நடிக்கிறார். புதுமுகம் அங்கீதா ஹீரோயினாக நடிக்கிறார். எழுதி இயக்குகிறார் புதுமுகம் எம்.எஸ்.ஷாஜஹான். "அவனை கொண்டு வா..." என்ற வார்த்தை அவனை "கொன்று வா" என உணரப்பட்டதால் ஒரு சாம்ராஜ்யமே அழிந்ததாக வரலாறு உண்டு. குடும்பத்தில், நண்பர்களிடத்தில், உறவுகளிடத்தில் என எங்கு பார்த்தாலும் புரிதல்களே இல்லை. அவ்வாறான நிலை எந்த மாதிரியான விபரீதங்களை உருவாக்குகிறது என்பதைத்தான் திரைக்கதையாக்கி இருக்கிறேன்" என்கிறார் இயக்குநர்.

✘ வேதிகாவுக்கு தமிழில் ஏழாவது படம் பரதேசி. படத்தில் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் பெண்ணாக நடித்துள்ள அவர், தன் உடம்பு முழுக்க கறுப்பு வண்ணத்தை பூசி, படமாக்கியபோது, வருத்தப்பட்டுள்ளார். ஆனால், இப்போது அந்த காட்சிகளை திரையில் பார்க்கும் போது, "என்னை கறுப்புப் பெண்ணாக இயக்குனர் பாலா மாற்றியது சரிதான்..." என்கிறார் வேதி-கா. நான் கடவுள் படத்தில், பிச்சைக்காரர்களின் வாழ்க்கையில் நடக்கும் கொடூரங்களை காண்பித்து, கலங்கடித்த பாலா, பரதேசி படத்தில், கொத்தடிமைகளாக சிக்கி தவிக்கும், ஒரு கூட்டத்துக்கு நேரும் கொடுமைகளை சொல்லியிருக்கிறார். அதில், அங்கிருந்து தப்பிக்க முயற்சி செய்பவர்களின் குதிகால் நரம்பை அறுக்கும் காட்சிகளையும், தத்ரூபமாக படமாக்கி உள்ளாராம் பாலா.



✘ மீனவர்களின் வாழ்க்கையைப் பின்னணியாக கொண்டு மீண்டும் ஒரு படம். மணிரத்னத்தின் உதவி யாளர் பிஜாய் நம்பியார் எழுதி இயக்கி அறிமுகமா-கும் இப்படத்தின் பெயர் டேவிட். நடிகர்கள் விக்ரம், ஜீவா முதன் முதலாக இணையும் இப்படத்தில் தபு, லாரா தத்தா, இஷா ஷெர்வானி என பாலிவுட்டின் உச்சபட்ச நாயகிகள் நடிக்கின்றனர். நாசர் முக்கிய பாத்திரம் ஏற்கிறார். விக்ரம் - ஜீவா சம்பந்தப்பட்ட கிளைமாக்ஸ் காட்சியை மட்டும் தொடர்ந்து 17 மணி நேரத்துக்கும் மேலாக படமாக்கியிருக்கிறார்களாம்.

✘ "இசை வெளியீட்டு விழா அழைப்பிதழ்களில் இளைய பேரரசு, கவிப் பேரரசுகள், இளம் கவி என்றெல்லாம் கவிஞர்களுக்கு அடைமொழி கொடுத்து அச்சடிக்கிறார்கள். எங்களை அப்படியெல்லாம் அழைக்காதீர்கள். நாங்களெல்லாம் பட்டுக்கோட்டையாரின் பிள்ளைகள். மன்னர்களுக்கோ, அரசியல்வாதிகளுக்கோ அடி வருடுபவர்கள் அல்ல." என்று "ராம்சரண்" இசை வெளியீட்டு விழாவில் கவிஞர் அறிவு-மதி பேசியுள்ளார். இது திரையுலகில் பரவலான சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. "என்னைத் தாக்கிப் பேசுபவர்கள் மனப்பக்குவம் இல்லாதவர்கள்" என வார இதழ் ஒன்றில் கவிஞர் வைரமுத்து கருத்து தெரிவித்திருந்ததாகவும், அதற்குப் பதிலளிக்கும் விதமாகத்தான் அறிவுமதியின் இந்தப் பேச்சு என்று கூறப்படுகிறது.

✘ "அன்னக்கொடியும் கொடிவீரனும்" படத்தின் இசை கோர்ப்புப் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. ஜனவரி மாத தொடக்கத்தில் ஒரு பிரமாண்டமான விழாவில் இசைப் பேழையை வெளியிட இருக்கிறார்கள். இந்த விழாவுக்காக இயக்குநர் பாரதிராஜா ஒரு திட்டம் தீட்டி இருக்கிறார். ரஜினி, கமல், ஸ்ரீதேவி மூவரையும், அந்த விழாவுக்கு அழைத்து அவர்களின் கையால் வெளியிடலாம் என்பதுதான் அது. மூவருக்கும் முறைப்படியான அழைப்பு விடுக்கப்பட்டு விட்டதாம். ஒரு காலத்தில் மிக நெருக்கமாக இருந்த நட்சத்திரங்கள் நெடுங்காலங் கழித்து ஒன்றாகச் சந்தித்துக் கொள்ளப் போகிறார்கள்.



# சில சமையல் குறிப்புகள்

## - ஷாநவாஸ் -

உணர்ச்சிகளில் தொடுவது, பார்ப்பது, நுகர்வது, கேட்பது மற்றும் சுவைப்பது. இவைகளில் சுவைப்பது, நுகர்வது மட்டும்தான் இரசாயனக் கலவைகளின் சேர்க்கையால் வேதிவினை புரிந்து ஒரு உணவுப் பொருளாக உருமாறுகிறது.

சிலர் எலுமிச்சை பழம் ஜூஸ் பிழியும்போது அதிக ஜூஸ் கிடைப் பதற்கு மைக்ரோ ஓவனில் வைத்தி ருந்து எடுத்துப் பிழிய வேண்டும் என்பார்கள். இந்த முறை சுத்த அபத்தம் என்றார் ஒரு சமையற்காரர். மைக்ரோ ஓவன் சூட்டில் அமிலத்தின் அளவு குறையவே வாய்ப்பிருக்கிறது என்றார். கட்டையில் வைத்துப் பிழிந்து எடுப்பதுதான் சிறந்த முறை என்றார்.

இன்னொரு சமையல்காரர் ஒலிவ் எண்ணெயில் சமைப்பதிலேயே அதிக கவனம் செலுத்துவார். ஹோமர் ஒலிவ் எண்ணெயை "தங்கத் திரவம்" என்றது, அதை கிரீஸ் விளையாட்டு வீரர்கள் உடம்பில் தேய்த்துக்கொண்டு விளையாட்டில் வெற்றிவாகை சூடியது, மன்னர் சொலமன் எங்கு சென்றாலும் ஒலிவ் மரங்களை நட்டது போன்ற சரித்திர சான்றுகளைப் படித்து அவர் "ஒலிவ் எண்ணெய் சமையல்காரர்" என்ற பட்டம் பெறவில்லை என்பதை அவரிடம் பழகிய சில நாட்களிலேயே நான் தெரிந்துகொண்டேன்.

.பொதுவாக சமையலில் நீர் கொதிக்கிறது என்று சொல்வது சரி. ஆனால் எண்ணெய் கொதிக்காது. புகையும். சாதாரணமாக விலங்கு கொழுப்புகள் கலந்த எண்ணெய் சீக்கிரமாகப் புகைந்துவிடும். உதாரணம் வெண்ணெய். ஆனால் தாவர எண்ணெய் தாமதமாகும். ஒலிவ் எண்ணெயின் புகைநிலை 410 லிருந்து 460 பாகை வரை. அதனால் கோழி யைப் பொரிக்கும்போது Deep Frying செய்வதற்கு அதிக நேரங்கள் எடுக்கும். அத்தோடு "ஒலிவ்"மணம் ஒரு அக்னி ஜுவாலை போல் எழுந்து சமையல் கட்டு முழுதும் மணம் பரப்பக் கூடியது.

சமையல்கூடத்தில் வினிகர் இல்லை யென்றால் சில சமையல்காரர்களுக்கு வேகம் இருக்காது. வினிகர் Solution of Acitic Acid மிகவும் பிரபலமான வினிகர் திராட்சையிலிருந்து தயார் செய்யப்படுகிறது. அப்பிளிலிருந்து பெறப்படுவது cidar வினிகர். ஓட்ஸ் அல்லது பார்லியிலிருந்து பெறப்படுவது மோல்ட் வினிகர். அரிசியிலிருந்து பெறப்படுவது Rice வினிகர். ஒவ்வொரு வகையும் ஒரு குறிப்பிட்ட வகை சமையலில் மட்டுமே பொருந்தும். அதன் நுண்ரகசியங்கள் அறிந்த சமையல்காரர்கள் தயார்செய்த உணவுகள் நம்மை மீண்டும் மீண்டும் ருசி பார்க்கத் தூண்டும் வகையிலிருக்கும்.

இத்தாலியின் Trebbiano வகை திராட்சைத் தோலுடன் நொதிக்கவைத்து தயார் செய்யப்படும் போல்ஸ்மிக் வினிகர்தான் உலகின் மிகச் சிறந்த வினிகர் வகை. இதைத் தயாரிக்க குறைந்தது 12 ஆண்டுகள் ஆகும். 100 வருடங்கள் நொதிக்க வைத்த வினிகர் விலை அதிகமென்றாலும் சந்தையில் அதிக மதிப்பு கொண்டது.

சில சமையல்காரர்கள் உடன் காய்கறிகள், பழங்களைவிட பதப் படுத்தப்பட்ட வகைகளைக் கூடுதலாக சமையலில் பயன்படுத்துகி றார்கள். 1920 இல் கீரையை Frozen உணவாக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தவர் Clarence Birdseye. மெதுவான குளிரூட்டலில் அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டு Frozen செய்யப்பட்ட காய்கறி வகைகளின் பனிக்கட்டி படிமங்கள் உருவாக்கி அதன் ஒரிஜினல் சுவையைக் குறைக்கும் என்பதை தவிர, உணவு பதப்படுத்துதல் 90 வருடங்கள் கழித்தும் சில மேம்பாடுகளுடன் அப்படியே அந்தத் தொழில்நுட்பம் தொடர்கிறது. குறிப்பிட்ட வகை உணவுக்கு சரியாகப் பொருந்தி விடும். வேலைநேரம் மிச்சமாகும். 19-ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டின் கடற்படையில் பணியாற்றிய ஒருவரின் Canning முறை உலகில் எங்கேயும் எப்போதும் உணவுப் பொருட்களுக்குப் பஞ்சமில்லை என்ற நிலை உருவாகக் காரணமாயிருந்தது.

டின்களில் அடைக்கப்பட்ட உணவு களால் சமையல்காரர்களுக்குப் பல அனுகூலங்கள் உள்ளன. ஏற்கனவே மிகச்சிறந்த உயர்தரச் சுவையூட்டிகளில் மிதக்கும் உணவுப்பொருட்களைத் தங்களுடைய Signature Dish உடன் இணைத்து சமையலில் ஒரு மதிப்பை (Richness) ஏற்படுத்திவிடுவார்கள். தூனா மீன்களை சந்தையில் வாங்கி சமைப்பதற்கும் அதே விலையுள்ள டின்களில் அடைக்கப்பட்டு கிடைக்கும் தூனா மீன்களை வாங்கி மயோனி' மற்றும் சாலட் கலந்து சாப்பிடுவதும் வித்தியாசமானது. அதிலுள்ள நியாசின், செலினியம், விற்றமின்-12, ஒமேகா-3 அப்படியே மெருகு குலையாமல் டின் உணவுகளில் கிடைக்கும்.



சோடியம் அலுமினியம் சல்பேற்றை உணவுப் பொருட்களின் ஒரு அங்கமாக உலகம் எடுத்துக்கொண்டு நீண்ட நாட்கள் ஆகிவிட்டது. அல்ஜைமர் போன்ற நோய்கள் உருவாவது இதனால்தான் என்று முதலில் அஞ்சி னாலும் பலதரப்பட்ட சோதனைகளுக் குப் பின்னர் அப்படியில்லை என்று முடிவானது. பளபளப்பு அதிகம், குறைந்த பகுதிகள் நாம் பொதி செய்யும் வசதிக்காக ஏற்படுத்தப்பட்டது.

சில சமையல்காரர்கள் கறியில் உப்பு கூடிவிட்டால் ஒரு நாலைந்து உருளைக்கிழங்குகளை வெட்டி கறி யில் வீசி எறிந்துவிட்டு இப்போது சாப்பிட்டு பாருங்கள் சரியாகி விட்டது என்பார்கள். இது சரியானது அல்ல. உருளைக்கிழங்கு ஸ்டார்ச் உப்பை மட்டும் உறிஞ்சுகிறது என்பதற்கு எந்த அடிப்படை முகாந்திரமும் கிடையாது.

இதற்குப் பதிலாக எலுமிச்சை அல்லது வினிகர் சேர்த்தால் உப்புச் சுவை கொஞ்சம் மட்டுப்படுத்தக்கூடும். எலுமிச்சையும், வினிகரும் சேர்க்க இயலாத கறி வகைகளில் இது இயலா மற் போகக்கூடும். அந்த சமயங்களில் கறி வகைகளில் உப்பு சேர்க்காத கல-வையை இன்னும் கூடுதலாகச் சேர்த்து நீர் பெருக்கி உப்பைக் குறைப்பதுதான் வழி. சில சமையல்காரர்கள் இந்த விசயத்தில் கொஞ்சம் இனிப்பைக் கலந்து விடுவதை பார்த்திருக்கிறேன்.

சமையலில் கெட்டிக்கார, நல்ல அனுபவமுள்ள பலர் என்னிடம் வேலை செய்திருக்கிறார்கள். பலரிடம் நானும் வேலை செய்திருக்கிறேன். அதில் நான் சமையல் மேதையாக நினைக்கும் ஒருவரிடம் "எது நமக்கு ஆரோக்கியமான உணவு" என்று கேட்டேன்.

"நீங்கள் சிறுபிராயத்திலிருந்து விரும்பிச் சாப்பிட்டு வரும் உணவுதான் ஆரோக்கியமானது" என்றார்.



# பலாத்கார விளையாட்டு

- கிருஷ்ண பிரபு

எப்பொழுதும் அந்தக் கடையில்தான் நான் முக்கியமான உலகப் படங்களை வாங்குவது வழக்கம். வாடிக்கை நுகர்வோராக இருப்பதால் கடையில் வேலை செய்யும் இரண்டு சிறுவர்களும்கூட எனக்கு நல்ல பரிச்சயம். ஒரு சிறுவன் மெல்லிய குரலில் காதைக் கடித்தான். 'பிட்டு படம் வேணுமாங்கண்ணா? என்றான். அவனுடைய கண்களையே உற்றுப் பார்த்தேன். மேலும் தொடர்ந்தவன் 'ரேப்பிங் கேம்ஸ் வேணும்னாலும் இருக்கு! வாங்கிக்கிறீங்களா?' என்றான்.

'என்ன சொன்னாய்?' என்றேன்.

'ரேப்பிங் கேம்ஸ்' என சில குறுந்தகடுகளை என்னிடம் நீட்டினான். 'பூங்கா, சுரங்கப்பாதை, கடற்கரை, தனி பங்களா, யாருமற்ற அலுவலகம்' என விதவிதமான இடங்களில் பெண்ணை பலாத்காரம் செய்யும் கேம்ஸ் என தன்னிடமிருந்த குறுந்தகடுகளைப் பற்றி விவரித்துக் கொண்டிருந்தான். பார்த்ததும் அதிர்ந்துவிட்டேன். அவனிடமே குறுந்தகடுகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டு துண்டைக் காணோம், துணியைக் காணோம் என ஓட்டம் எடுத்தேன். இது நடந்து ஏறக்குறைய இரண்டு வருடங்களுக்கு மேல் இருக்கும். பின்னர் உட்கார்ந்து நிதானமாக யோசித்த பிறகுதான் ஞானோதயம் வந்தது. 'அடடே' அந்த பலாத்கார விளையாட்டு குறுந்தகடுகளை வாங்கி, அதைப் பற்றி வலைப்பூவில் ஆதாரத்துடன் எழுதி இருக்கலாமே!' என்று. இந்த விளையாட்டை திறம்பட விளையாடுவதற்கு ஆறு மாதகாலப் பயிற்சி வேண்டும் என்பது வேறு விஷயம். 'கற்பழிப்பதற்குக் கூட குறைந்தபட்ச உழைப்பு தேவைப்படுகிறது.' என்ற எழுத்தாளர் சுந்தர ராமசாமியின் வரிகள்தான் எனக்கு ஞாபகம் வருகிறது. இந்த விளையாட்டுக்களை விளையாட எவ்வளவு நேரமும் உழைப்பும் விரயமாகிறது'

கணனியானது குழந்தைகளின் கணிசமான நேரத்தை விழுங்குகிறது. கணனியில் விளையாடுவதை குழந்தைகள் சந்தோஷமாக உணர்கிறார்கள் போல. அவர்களின் விருப்ப விளையாட்டுகளும் குரூரத்தை அடிப்படையாக வைத்து கட்டமைக்கப் பட்டதாகவே இருக்கின்றன. இந்தப் புரிதலும் தெளிவும், பெற்றவர்களுக்கு இருக்கிறதா என்பது சந்தேகம்தான். பைக் திருட்டு, கார் திருட்டு மட்டுமல்லாமல், திருடிய வாகனத்தின் மூலம் பல்பொருள் அங்காடிக்குச் சென்று பொருட்களைத் திருடிவிட்டு பொலிசிடம் மாட்டிக் கொள்ளாமல் தப்புவது என விளையாட்டின் பட்டியல் நீள்கிறது. மேலும் திருடிவிட்டு தப்பிச் செல்லும்போது, கையிலுள்ள துப்பாக்கி மூலம் எதிரில் வரும் எல்லோரையும் கண்மண் தெரியாமல் - கணனியில் விளையாடும் குழந்தைகள் சுட்டுத் தள்ளுகிறார்கள். எவ்வளவு கோரமான விஷயம் இது! இவர்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆகும்போதுதான் பலாத்கார விளையாட்டை நாடிச் செல்கிறார்கள். இதுபோன்ற விளையாட்டுகளை இணையத்திலிருந்து இலவசமாக தரவிறக்கம் செய்துகொள்ளவும் முடியும் என்பது விழிப்புடன் கவனிக்க வேண்டிய ஒன்று.

விளையாட்டானது கணனியுடன் முடிவதில்லை. நவீன தொழில்நுட்பத்தின் தாக்கம் செல்பேசி வரை நீள்கிறது என்பது கவனத்தில் கொள்ளவேண்டிய ஒன்று. சில மாதங்களுக்கு முன்பு எனது சொந்தக்காரப் பையன் ஒருவனை சந்தித்து உரையாட நேர்ந்தது. முன்னேறிய கிராமமான எங்களது ஊரில் பிரபல தனியார் பாடசாலை ஒன்றுள்ளது. சுற்றிலுமுள்ள கிராமத்திலிருந்து ஏராளமான பிள்ளைகள் அதில் படிக்கிறார்கள். இந்தப் பையன அந்தப் பாடசாலையில் பதினோராம் வகுப்பு படிக்கிறான். அதே பாடசாலையில் பத்தாம் வகுப்பு படிக்கும் மற்றொரு பையனுடன் அவன் பேசிக் கொண்டிருந்தான்.

'டே' அந்த கேம்ஸ் எனக்கும் குடுக்குறியாடா?' என்கிறான் பத்தாம் வகுப்பு மாணவன்.

'அப்புறம் நான் மாட்டிக்கிறதுக்கா? கௌம்புடா' என்கிறான் பதினோராம் வகுப்பு பையன்.

'டேய்' கேம்ஸ்தான குடுடா. அவனும் விளையாடட்டும்" என்கிறேன் நான்.

'மேட்டர் தெரியாம பேசாதீங்க. அதெல்லாம் அவன் விளையாடக் கூடாது" என்கிறான், பெரிய மனுஷத்தனமாக பதினோராம் வகுப்பு பையன்.

'பெரிய விளையாட்டு' இவரு மட்டும்தான் விளையாடுவாரு'. சும்மா குடுடா, அவனும் நாலு பேர சுட்டுத் தள்ளட்டும்' என்கிறேன் சிறுபிள்ளைத்தனமாக நான்.

'அய்யே! என்ன கேம்ஸ் தெரியுமா அது?' என்கிறான் சொந்தக்காரப் பையன்.

'சொன்னாத்தானே தெரியும்?' என்கிறேன் நான்.

'அந்த கேம்ஸ் Touch Screen-y தான் விளையாட முடியும். ஒரு பொண்ணு Dress போட்டுட்டு இருக்கும். ஒவ்வொரு parts-M Touch பண்ணி தேச்சா' ட்ரெஸ் எல்லாம் Disappear ஆகும். அதான் கேம்ஸ்" என்றான் ஆங்கிலமும் தமிழும் கலந்து.

'டேய்' என்னடா இது? என்று கேட்டதற்கு, 'நீங்கல்லாம் வெத்து' இது தெரியாம அவனுக்கு கொடுக்கச் சொல்றீங்க' அவன் மாட்டிக்கிட்டா என்னைப் போட்டு மொத்தவா? என கேலிசெய்து சிரிக்கிறான் சொந்தக்காரப் பையன். பக்கத்திலிருந்த அவனுடைய நண்பனும் சிரிக்கிறான். 'நாம வெத்துதான்' என்பதை நினைத்து நானும் விரக்தியுடன் சிரித்துக்கொண்டேன்.

மேற்கூறிய இரண்டு சம்பவங்களையும் நினைவுபடுத்தும் விதமாக, சமீபத்திய பேருந்து பயண அனுபவம் எனக்கு ஏற்பட்டது. இரண்டு மாணவர்கள் முன்னிருக்கையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். பின்னிருக்கையில் அமர்ந்தவாறு புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் பேசிய விஷயம் கவனத்தை திசை திருப்பியது. ஆகவே அவர்கள் மீது கவனம் சென்றது. இரண்டு மாணவர்களின் கழுத்திலும் பிரபல கல்லூரியின் அடையாள அட்டை தொங்கிக் கொண்டிருக்கிறது. அடையாள அட்டையை தாங்கிப் பிடிக்கும் கழுத்துப் பட்டையில் கல்லூரியின் பெயர் அச்சிடப்பட்டிருந்தது. இரண்டு மாணவர்களும் பேசிக் கொள்கிறார்கள்.

மாணவன் 1: 'பக்கத்து வீட்டு ஆண்டிய கரெக்ட் பண்ணா வீட்டுல மாட்டிக்க வேண்டி இருக்கு' லாட்ஜ் போட்டு தங்கினா - ரெயிட்ல புடிச்சி அசிங்கப் படுத்துறாங்க! பஸ்ல போட்டு தாக்குனா நாடே சேர்ந்து காறித் துப்புது! அப்போ எப்பிடி தாண்டா ஒருத்தன் என்ஜாய் பண்றது' (கவுண்டமணி தனது மனைவியை அடித்துக் கொண்டிருக்க. மாமியார் கரெக்டர் இடையில் வந்து தடுக்கும்பொழுது பேசும் பிரபல நகைச்சுவை துணுக்கு இது. நீண்ட நாட்களுக்கு முன்பு டிவியில் பார்த்த ஞாபகம். அந்த காமெடியின் ரீமேக்)

மாணவன் 2: 'டேய்' கிளாஸ்மேட்-கிட்டையே ஒரு வார்த்தை, ரெண்டு வார்த்தை பேச முடியல' இதுல கரெக்ட் பண்றதும், ரேப் பண்றதும்தான் ஒரு கேடா உனக்கு"

மாணவன் 1: 'எனக்குன்னு ஒரு சான்ஸ் கிடைக்காமையா போகும்' அப்ப என்னை ப்ரூவ் பன்றேண்டா மச்சி"

மாணவன் 2: 'என்னையும் கூப்பிட மறந்துடாதடா'!'

இருவரின் பேச்சும் எங்கோ ஆரம்பித்து, எங்கெங்கோ பயணப்பட்டுக் கொண்டிருந்தது. 'திடீரென ஆசிரியரைப் பற்றிய எள்ளல். கௌதம் மேனனின் மொக்கை சினிமா பற்றிய விமர்சனம். உடன் படிக்கும் மாணவியைப் பற்றிய கேலி. ரோட்டில் செல்லும் ஆட்கள் - என சம்பாஷணை சுழன்று சுழன்று தொடர்பில்லாமல் சொற்கள் உதிர்ந்து கொண்டிருந்தன.

சம்பாஷணையின் மற்ற எல்லா இடங்களும்கூட ஒரு வக்கிர ஹாஸ்யம்தான். நேரத்தை ருசிகரமாகக் கடத்த மேற்கொள்ளும் வெகுளித்தனத்தின் வெளிப்பாடு என்ற அளவில்கூட எடுத்துக் கொள்ளலாம். ஆனால் 'கிளாஸ்மேட்-கிட்டையே ஒரு வார்த்தை, ரெண்டு வார்த்தை பேச முடியல' என்ற இடம்தான் எனக்கு மிகவும் அபாயகரமான விஷயமாகத் தெரிந்தது. இங்குதான் சிக்கலும் ஆரம்பிக்கிறது. சக மனிதர்களிடம் பேசுவதையே ஜேப்படித் திருட்டு போல துரிதமாகவும், அதே சமயத்தில் யாரும் அறியாமலும் செய்ய வேண்டி இருக்கிறது பெரும்பாலான கல்லூரி வளாகங்களில் இதுதான் நிலைமை. எவ்வளவு பெரிய துர்ப்பாக்கியம் இது.



கணனியானது குழந்தைகளின் கணிசமான நேரத்தை விழுங்குகிறது. அவர்களின் விருப்ப விளையாட்டுகளும் குரூரத்தை அடிப்படையாக வைத்து கட்டமைக்கப் பட்டதாகவே இருக்கின்றன. இந்தப் புரிதலும் தெளிவும், பெற்றவர்களுக்கு இருக்கிறதா என்பது சந்தேகம்தான். பைக் திருட்டு, கார் திருட்டு மட்டுமல் லாமல், திருடிய வாகனத்தின் மூலம் பல்பொருள் அங்காடிக்குச் சென்று பொருட களைத் திருடிவிட்டு பொலிசிடம் மாட் டிக் கொள்ளாமல் தப்புவது என விளை யாட்டின் பட்டியல் நீள்கிறது. மேலும் திருடிவிட்டு தப்பிச் செல்லும்போது, கையி லுள்ள துப்பாக்கி மூலம் எதிரில் வரும் எல் லோரையும் கண்மண் தெரியாமல் – கணனி யில் விளையாடும் குழந்தைகள் சுட்டுத் தள்ளுகிறார்கள். எவ்வளவு கோரமான விஷயம் இது!

ஒருபுறம் குழந்தைகள் விளையாடும் குரூர விளையாட்டுக்கள், மற்றொரு புறம் அவர்களே வளர்ந்து பெரியவர்கள் ஆனதும் விளையாடக் கூடிய ஆபாச விளையாட்டுக்கள். இதன் இணைகோடு போல, சக மாணவியிடம் தோழமையுடன் பேசுவதையே கள்ளத்தனமாக யாரும் பார்க்காதபோது செய்ய வேண்டிய நிர்ப்பந்தம், என சிறுவர்களையும் இளைஞர்களையும் சிக்கலுக்கு உள்ளாக்குகிறோம்.

இதோ சென்ற வாரம் டெல்லியில் நடந்த பலாத்காரத்தை இந்தியாவே கூர்ந்து கவனிக்கிறது. ஜனாதிபதி மாளிகை முன்பு பாதிக்கப்பட்ட பெண்ணிற்காக நீதிகேட்டு போராட்டம் நடத்துகிறார்கள். அந்த சகோதரியைப் பற்றிய தற்போதைய நிலவரங்களை நாளேடுகளும் தொடர்ந்து பிரசுரம் செய்து வருகின்றன. தொலைதூர கிராமங்களிலுள்ள பெண்கள் பலாத்காரம் செய்யப்படுவதையும் நாளேடுகள் சமீப நாட்களில் பிரசுரித்து வருவதைப் பார்க்க முடிகிறது. இவையெல்லாம் கவனத்தில் கொண்டு பரிசீலிக்க வேண்டிய முக்கியமான சமூகப் பிரச்சினைதான் என்பதை மறுப்பதற்கில்லை.

அதே அளவுக்கு, பின்விளைவுகளை யோசித்துப் பார்த்தால் அதைவிட முக்கியமான விஷயம், இளம் தலைமுறையினர் டிஜிட்டல் விளையாட்டு விளையாடுகிறார்கள் என்பதுதான். அதில் பலாத்கார விளையாட்டும் அடக்கம். 'விளையாட்டுதான் வினையாகிறது' என்பது நம்மவர்களுக்கு சொல்லித் தெரியவேண்டியதில்லை.

# உடைப்பெடுத்தது பரப்புக்கடந்தான் குளம்

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட பரப்புக்கடந்தான் குளம் உடைப்பெடுத் துள்ளதனால் அவ் வீதியூடான போக்குவரத்துக் கள் பாதிப்படைந்துள்ளன.

இந்நிலையில் 541 ஆவது படைப்பிரிவு இரா ணுவத்தின் முயற்சியில் குறித்த வீதியூடான போக்கு வரத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் தம் பனைக்குளம் பகுதியில் வீதி வெள்ள நீரில் மூழ்கியுள்ள நிலையில் மடு பரப்புக்கடந்தான் வீதி யூடாக மன்னாருக்கும் தென்பகுதிக்குமான போக்கு வரத்துச் சேவைகள் இடம்பெற்று வந்தது.

இந்த நிலையில் பரப்புக்கடந்தான் குளம் உடைப்பெடுத்துள்ளதனால் குறித்த வீதியூடான போக்குவரத்து பாதிப்படைந்துள்ளது.

இந்நிலையில் இராணுவத்தின் 541 ஆவது படைப்பிரிவு அதிகாரி பிரிகேட் கொமாண்டர் லந்திராவின் பணிப்புரைக்கு அமைவாக பரப்புக் கடந்தான் குளம் உடைப்பெடுத்துள்ள பகுதியில் இராணுவத்தினர் விசேட கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பகுதியில் மண் மூடைகள் அடுக்கப் பட்டு வெள்ள நீர் வருகை சற்று குறைக்கப்பட்ட நிலையில் மக்களின் போக்குவரத்துக்கள் இடம் பெற்று வருகின்றது.

தற்போது குறித்த வீதியூடாக மட்டுப்படுத் தப்பட்ட அளவு போக்குவரத்துச் சேவைகள் மாத்திரமே இடம்பெற்று வருகின்றன.

குறித்த கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக் கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

# மதிலுடன் மோதியது வாகனம் ஐந்து சந்தியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் வாகனம் ஒன்று மதி லுடன் மோதி பலத்த சேதத் திற்குள்ளாகியுள்ளது. நேற்று முன்தினம் மாலை 2.30 மணி யளவில் யாழ்ப்பாணத்திலி ருந்து மானிப்பாய் நோக்கி செல் லும் போது திடீரென ஐந்து சந்தியில் உள்ள வண்ணார் பண்ணை கிராம அலுவலர் இல்லத்தில் இவ் விபத்து ஏற்பட் டுள்ளது.

வாகனத்தில் பிரயாணம் செய்த மூவரும் சாரதி உட்பட எவருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை.

இந்நிலையில் போக்குவரத் துப் பொலிஸார் ஸ்தலத்திற்கு உடனடியாக வருகை தந்து விசாரணைகளை மேற்கொண் டார்கள்.

சப்ரகமுவ மாகாணத்தி லுள்ள தொழிற்சாலை உற் பத்தி பொருட்களை விற்பனை செய்யும் பொருட்டு யாழ்ப் பாணத்திற்கு வருகைதந்த வாகனமே மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானதாக தெரி விக்கப்படுகிறது. (105)

# டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத் தின் விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமா பாட நெறிக்கு (2013-2014) தகைமையுடைய விண்ணப் பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

இப்பாடநெறிக்கு 18-35 வயதிற்கு உட்பட்டவர் களாக இருப்பதுடன் அரச சேவையில் பணியாற் றுவோரின் வயது 45 வருடங்களை விட மேற் படாதிருத்தல் வேண்டும்.

இப்பாடநெறிக்கான தெரிவில் இப்பாடநெறிக் காக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுள் தகைமை பெற்றுள்ள அனைவரும் எழுத்துமூலம் பரீட்சை ஒன்றிற்கு அழைக்கப்படுவதுடன் ஆட் சேர்ப்புக் குழுவினால் தீர்மானிக்கப்படும் புள்ளி களைப் பெறுபவர்கள் நேர்முகப்பரீட்சை ஒன் றிற்கு உடற்றகைமைகாண் செயல்முறை பரீட்சை ஒன்றிற்கும் உட்படுத்தப்பட்டதன் பின்னர் பாட நெறிக்காகத் தெரிவு செய்யப்படுவர்.

மேலும் இப்பாடநெறி சிங்களமொழி மூலம் நடத்தப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் விண் ணப்பங்களை, ஜனவரி மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பணிப்பாளர் தேசியவிளையாட்டு விஞ்ஞான நிறுவனம் இல.100/7 சுதந்திர மாவத்தை கொழும்பு 7 என்ற முக வரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

□ □ □

கால் நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் கால் நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் இலங்கை தொழில் நுட்ப சேவையின் II ஆம் வகுப்பு ஆ.தரத்திற்கு ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக திறந்தப் போட்டி பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சை தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடத்தப்படுவதுடன் வயதெல்லை 18முதல் 45 வயதிற்கு உட்பட்ட தாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கவிரும்புவோர் விண்ணப்பங்கள் ஜனவரிமாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் கிடைக் கக்கூடியவாறு பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், த.பெ.இலக்கம் 13 கெட்டம்பே பேராதனை என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இது தொடர்பான கல்வித்தகைமை உள்ளிட்ட ஏனையவிபரங்களை 28.12.2012 வர்த்தமானி யிலோ அல்லது தினமுரசு காரியாலயத்திலோ பார்வையிடமுடியும்.



ஏசியன் பெயின்ட் ஸ்தாபனம் கடந்த வாரம் யாழ். கே.கே.எஸ். வீதியில் அதன் 4ஆவது கிளையை ஆரம்பித்தது. இந்நிகழ்வில் ஸ்தாபன பொது முகாமையாளர் ஜோசப்பிளக்கர் மங்கள விளக்கேற்றுவதையும் பிரதிநிதி ஒருவர் உரையாற்றுவதையும் காணலாம். (105)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

முல்லைத்தீவு பகுதியில் தோட்டம் ஒன்றில் காவல் வேலைக்கும் தோட்ட வேலைக்கும் ஆள் தேவை. இருபா லாரும் விரும்பத்தக்கது. தொடர்புக்கு: 077 113 3667, 077 168 1697.

---

சிலாபத்தில் தமிழ்க் குடும்பமொன்றுக்கு வீட்டில் தங்கி யிருந்து வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் தேவை.சம்பளம் 10,000ரூபா. தொடர்புகளுக்கு:077 697 2788.

---

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலைகள் செய்வதற்கு பணிப்பெண் தேவை. தங்குமிட வசதிகளுடன் சம்பளம் ரூபா 10,000 வழங்கப் படும். தொடர்புகளுக்கு: 021 320 5013.

---

தோட்டம் மற்றம் சமையல் வேலை தெரிந்த ஆண் வேலையாட்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும் தொடர்பு: 077 336 1750, 077 692 5193.

---

சுத்திகரிப்பாளர் மற்றும் உதவியாளர்கள், பணிப் பெண் கள், காவலாளிகள், தொழிலாளிகள் ஆகியோருக்கு உட னடி வேலைவாய்ப்பு உண்டு. மாத வேதனம் சுத்திகரிப் பாளர் மற்றும்உதவியாளர்களுக்கு 32,000 ரூபா வும், பணிப்பெண்களுக்கு 35,000 ரூபாவும், காவலாளி களுக்கு 42,000 ரூபாவும், தொழிலாளிகளுக்கு 30,000ரூபாவும் வழங் கப்படும். தொடர்புகளுக்கு: 077 419 3321, 071 211 0764.

---

கல்வியங்காட்டில் இயங்கும் Caxton Printers இற்கு ஓவ்செற் இயந்திர இயக்குநர்தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு: 077 494 9576.

---

இல 62/17, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கும் மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்பிற்கு படப்பிடிப்பாளர் (வீடியோ அன்போட்டோ), கணனி வடிவமைப்பாளர் (போட்டோ சொப்) மற்றும் வரவேற்பாளர், உதவியாளர் தேவை. தொ.பே.இல: 021 222 1358.

---

வவுனியாவில் ஆசிரியர் ஒருவருடைய வீட்டில் இரு சிறுபிள்ளைகளை பராமரித்து வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய அனுபவம் வாய்ந்த 35 வயதிற்கு மேற்பட்ட பெண்ஒருவர் தேவை. சம்பளம் 10,000 ரூபாவில் இருந்து 12,000 ரூபாவ்ரை. சாப்பாடு மற்றும் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: 077 772 2754.

---

வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி சுற்றுப்புறத்தில் கல்வியை பூர்த்தி செய்த சிங்களம் கதைக்கக்கூடிய தமிழ் எழுதுவினைஞர் தேவை. வேதனம் 12,000 வரை தொடர்புக்கு: 077 556 1883, 077 456 7082.

---

எமது குளிர்பானம் ஜேம், பிஸ்கட், டொபி, சொக்லட், பிரிண்டிங், டயர் பெயின்ட் சொசே ஜஸ், தொழிற்சாலை களில் உற்பத்தி, லேபல், பொதியிடல் பிரிவுகளிற்கு 18-50 அகவையுடைய பயிற்சியுள்ள ஆண், பெண் தேவை. 18,000 - 35,000 ரூபா சம்பளம். உணவு, தங்குமிடம் வழங் கப்படும். வருகை தரும் நாளில் தொழிலில் இணைத் துக்கொள்ளப்படும். தொடர்புகளுக்கு: 077 883 3977.

---

யாழ்ப்பாணத்தில் வேலை செய்வதற்கு tile பாஸ், பாஸ்மார்கள் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள். (கொடுப்பனவு 300இற்கு ரூ.2000) 1day Salary தொடர்பு களுக்கு 077 700 8472, 077 716 5211.

---

பிரதான தொழிற்சாலைகளில் உற்பத்தி லேபல், பொதியிடல், கையுதவி போன்ற ஜேம், கோடியல், கிள வுஸ், Painting பிளாஸ்டிக், பிஸ்கட், சவர்க்காரம், விளை யாட்டுப் பொருட்கள். சப்பாத்து போன்ற 1000வெற்றிடங் களுக்கு உடனடியாக ஆட்கள் தேவை.நாடு பூராகவுள்ள தமிழ், முஸ்லிம் ஆண், பெண் இணைத்து கொள்ளப்படு வார்கள் சம்பளம் 18,000 - 30,000 வரை. வயது 16 - 55 (கல்வியறிவு அவசியமில்லை) உணவு, தங்குமிடம் வசதி செய்து தரப்படும். தனி நபர், குழுக்கள் தம்பதியினர் களுக்கு வரும் நாளிலேயே வேலைவாய்ப்பு. மேலதிக தொடர்புக்கு: 077 843 0179, 077 431 0818 கொழும்பு.

# அரசுக்கு இப்போதும் தொடரும் சவால்கள்

## எதையும் சமாளிக்க அரசு தயார்

(கொழும்பு)

யுத்தகாலத்தைப் போன்றே யுத்தத்துக்குப் பிந்திய நாட்களிலும் அரசுக்கு சவால்கள் தொடர்கின்றது என்று பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பல்வேறு பட்ட உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் நீதிமன்றக் கட்டமைப்பின் ஊடாக நாட்டை சீர்குலைக்க முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதீ தமது கடமையை மேற்கொள்வதற்கு பல்வேறு வழிகளில் தடைகள் ஏற்படுத்தப் பட்டதாகத் தெரிவித்துள்ளார். பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், தொழிற சங்கங்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் ஊடாக குழப்பங்களை விளைவிக்க முயற்சிக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும், ஜனாதிபதி மீது மக்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கை பிரச்சினைகாரர்களின் முயற்சிகளை தோல்வியடைச் செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். தற்போது நீதிமன்றின் ஊடாக நாட்டை சீர்குலைக்க முயற்சிக்கப்படுகின்றது. நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு சமதானமும் ஸ்திரத்தன்மையும் மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் விடுதலைப் புலி உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் மீள ஒருங்கிணைந்து குழப்பங்களை விளைவிக்க முயற்சித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். ராஜபக்ஷ அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு வெளிநாட்டு சக்திகள் முயற்சித்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். யுத்தம் இடம் பெற்ற காலத்தில் எதிர்நோக்கிய சவால்களைப் போன்றே தற்போதும் சவால்கள் ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.



# புகைபொருட்கள் தொடர்பாக கொள்கை மாற்றம் எதுவும் இல்லை

## சுகாதார அமைச்சர் திட்டவட்டம்

(கொழும்பு)

புகைபொருட்கள் தொடர்பான அரசின் கொள்கையில் மாற்றம் எதுவும் இருக்காது என்றும் புகைத்தல் காட்சிகளின் போது வெளியிடுமாறு வலியுறுத்தப்படும் அறிவித்தல்கள் தொடர்பான வர்த்தமானி குறிப்பில் எந்தவித மாற்றங்களும் மேற்கொள்ளப் பட மாட்டாது என்றும் சுகாதாரத் துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

போம்ரிய மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

எந்தவொரு நிறுவனத்திற்கும தாம் தலைவணங்கப் போவதில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இதனால் அவர்களின் உரிமைகள் இழக்கப்பட்டுள்ளன. வருடாந்தம் அரசாங்கத்திற்கு கிடைக்கவேண்டிய வரி வீதம் திறைசேரியினால் இழக்கப்படுகின்றது.

புகைத்தல் கட்டுப்பாடு தொடர்பாக வெளியிடப்பட்டுளள வர்த்தமானி அறிவித்தலில் உள்ள எழுத்துக்களில் ஒரு இம்மியளவும் மாற்றம் செய்யப்போவதில்லை. எதிர்காலத்தில் இது தொடர்பான சட்டங்களை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

# அரச சார்பற்ற நிறுவன தலைவர்கள் வாரிக்குவிக்கும் சொத்துக்கள்

## விசாரணைக்கு புதிய பொறிமுறை

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களது சொத்து விபரங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட உள்ளது. கடந்த 12 ஆண்டுகளாக தனியார் அல்லது அரச நிறுவனங்களில் கடயைமாற்றாது, அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்கள் பாரியளவில் சொத்துக்களை குவித்துள்ளனர்.

அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்களின் உள்நாட்டு வெளிநாட்டு சொத்துக்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்பட உள்ளன. சில அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்களிடம் பாரிய வீடுகள், சொகுசு வாகனங்கள் மற்றும் வெளிநாட்டு வங்கிக் கணக்குகள் காணப்படுகின்றன.

சில அரச சார்பற்ற நிறுவனத் தலைவர்கள் பல தடவைகள் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டுள்ளனர்.

2002ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஆறு நாடுகள், குறித்த நிறுவனங்களுக்கு 600 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளன.

சொத்து விபரங்களை வெளியிடாத அரசியல் கட்சிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஆண்டறிக்கை மற்றும் கட்சி உத்தியோகத்தர்களின் சொத்து விபரங்களை வெளியிடாத கட்சிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

சொத்து விபரங்களை வெளியிடாமை உள்ளிடட பல்வேறு காரணிகள் குறித்து ஆராய்வதற்காக சகல அரசியல் கட்சிகளுடன் விசேட சந்திப பொன்று நடத்தப்பட உள்ளது.

ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் தலைமைச் செயலகத்தில் இந்தக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட உள்ளதாக மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

# "சுப்பிரீம் சட்" செய்மதி யூன் மாதம் அறுவடை தரும்

(கொழும்பு)

கடந்த நவம்பர் 27ஆம் திகதியன்று விண்ணுக்கு ஏவப்பட்ட சுப்ரீம்சட்1 செய்மதி, தமது நடவடிக்கைகளை 2013 ஜுன் மாதத்தில் ஆரம்பிக்கவுள்ளது என சுப்ரீம் சட்டின் பிரதம அதிகாரி விஜித் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

குறித்த செய்மதி சரியான இடத்தில் நிலைகொள்ள செய்யப்பட்டு பின்னர் அதன் நடவடிக்கைகளை மேற்கொள்ள இன்னும் 6 மாதங்கள் செல்லும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நட வடிக்கைகளுக்காக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் அனுமதிக்காக காத்திருப்பதாகவும் பீரிஸ் குறிப்பிட்டார். இதற்கிடையில் செய்மதி தொலைக் காட்சியை ஆரம்பிக்கும் பணிகளும் இடம்பெற்று வருவதாக விஜித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# பரமர் சங்கமம்



"சோழியன் குடும்பி சும்மா ஆடாது". எண்டால் ஏதோவொரு மொடுவான காரியத்துக்குத்தான் ஆடுமெண்டதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லையல்லவா?

இப்பொழுதெல்லாம் இலட்சங்கள், கோடிகளைக் கண்டவர்களுக்கு அது ஒரு கலையாகவே தொற்றிக் கொள்ளும். ஒண்டில் சுருட்டிக் கொண்ட தொகைக்குத் திட்டமொன்றை நிறைவேற்றினால் மற்ற வொரு திட்டத்தைத் திட்டமிட தொடங்கி விடுவதும் இயல்பு.

சும்மா தேடுவாரற்றுக் கிடந்த இடங்களெல்லாம் நான்கு, ஐந்து தட்டுகளில் கட்டடங்கள் எழும்பிக் கொண்டிருப்பதை முன்னெப்போதும் இல்லாத மாதிரி யாழ்ப்பாணத்தில் 2009ஆம் ஆண்டுக்குப் பிறகே கண்குளிரக்காணக் கூடியதாக இருக்கு.

யாழ்ப்பாண நகரத்தின் நட்டுக்கு நடுவே கிடந்த குளமொண்டை நிரவி ஐந்து மாடிக்கட்டடம் எழும்பி நிக்குது. அப்புடித்தான் தட்டாதெருச் சந்தியிலும் ஒருகடைத் தொகுதியைக் கட்டுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டதாக காதில ஒரு வதந்தி விழுந்துது.

1950களில் கம்யூனிஸ்ட் காத்திகேயன் மாஸ்டரின் ஏற்பாட்டோட இன்னும் சிலர் சேர்ந்து புறம் போக்காகக் கிடந்த வடமேற்கு மூலையில் சிறு காணித் துண்டில் கலாஜோதி சனசமூக நிலையம் ஒன்றைத் தொடக்கி வைத்தனர்.

சிறிது சிறிதாக வளர்ச்சி அடைந்த சனசமூக நிலைய இளைஞர் விளையாட்டுத் துறையிலும் மிளிரத் தொடங்கி உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் குழுக்களையும் நிறுவி மின்னொளியில் விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தி வந்தனர்.

அதனிடையே சனசமூக நிலையத்தை விருத்தி செய்ய முனைந்த சனசமூகம் கட்டடத்தைக் கட்டுவதற்கு முன்பாக அந்தக் காணியை சனசமூகத்துக்கே சொந்தமாக்கிக் கொண்டாலே நன்றெனத் திட்டமிடப்பட்டது.

அதன்படி அக்காலங்களில் யாழ்.மாநகர முதல்வராக இருந்த ஜி.பொன்னம்பலத்தை அணுகிக் காணியை எழுதுவித்தும் கொண்டனர். பின்பாக வரக்கூடிய முதல்வர்களால் பிரச்சினை வரக்கூடுமெனக் கேட்டபோது.

"இந்த நாட்டில் மக்களின் அரசு இருக்கும் வரை இந்த நிலத்தை எவராலும் அசைக்கமுடியாத உறுதி" செய்திருப்பதாக ஜி.பொன்னம்பலம் கூறி அதற்கான பத்திரத்தையும் நிர்வாகத்திடம் வழங்கி இருந்தார்.

அந்தக் காணியில் பின்துண்டில் அமரர் சிவதர்ம வள்ளல் மில்க்வைற் அதிபர் கனகராசாவால் சிறிய கலை அரங்கொன்றும் அமைத்து வழங்க 1983ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலங்களில் மின்னொளி விளையாட்டுகளாலும், கலை அரங்க நிகழ்வுகளாலும் இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலங்கள் கலாஜோதி சனசமூக சூழல் ஜோதி மயமாகவே திகழ்ந்தது.

பின்பாக 1995ஆம் ஆண்டுவரை சனசமூக நிலையத்தில் பத்திரிகைகள் வாசிப்பு நடந்தது. பாரிய இடம் பெயர்வுக்குப் பின்னர் 2012 ஒக்டோபர் மாதம் வரை படையினரின் பிடியில் இருந்து இப்பொழுது தான் விடுபட்டிருக்கு.

அதுக்கிடேல்ல கட்டடம் கட்டுறவை கண்போட்டு வாசிகசாலையை பின்னுள்ள அரங்குக்கு மாத்திவிட எடுத்த முயற்சி சனசமூக நிலைய நிர்வாகிகளின் விழிப்பால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாகப் பேசப்படுகிறது.

இதைத்தான் சோழியன் குடும்பி சும்மா ஆடாதெண்டு சொல்ல வந்தன். எல்லாம் இப்ப இலட்சங்கள், கோடியளில் நிண்டாடுது இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்...

# தாங்கமுடியாத கடன் சுமை எப்போது கிடைக்கும் மீட்சி

(கொழும்பு)

நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ள கடன்சுமை, ஒரே ஆண்டில் 25 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த ஆண்டு இறுதியில் ஒவ்வொரு இலங்கை குடிமகனுக்கும் சராசரியாக 245,980 ரூபா கடன் சுமை இருந்தது.

இந்த ஆண்டின் இறுதியில், இந்தக் கடன் சுமை 308,171 ரூபாவாக அதிகரித்துள்ளது.கடந்த ஆண்டின், டிசம்பர் மாதம் அரசுக்கு இருந்த மொத்த கடன் தொகையான, 5,133 பில்லியன் ரூபாவை, சென்ற ஆண்டின் நடுப்பகுதி சனத் தொகையால் வகுத்து, கடந்த ஆண்டின் சராசரி கடன்சுமை கணிக்கப்பட்டது.

அதுபோன்று, இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் அரசுக்கு உள்ள மொத்த கடனான 6,248 பில்லியன் ரூபாவை, சராசரி சனத்தொகையான 20.277 மில்லியனால் வகுத்து தற்போதைய சராசரி கடன்சுமை கணிக்கப்பட் டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் உள்நாட்டுக் கடன் 16 வீதத்தினாலும், வெளிநாட்டுக்கடன் 28.6 வீதத்தினாலும் அதிகரித்துள்ளது.

# கருத்தடை ஊசியால் ஒவ்வாமை துரித விசாரணைகள் ஆரம்பம்

அம்பாறை-தமன சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் பெண்ணொருவருக்கு வழங்கப்பட்ட கருத்தடை ஊசியினால் ஏற்பட்ட ஒவ்வாமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இந்த பெண் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி ஆர்.ஏ.ரணதுங்க தெரிவித்துள்ளார். அவரது உடல் நிலை தேறி வருவதாக சுகாதார வைத்திய அதிகாரி கூறியுள்ளார். இந்த பெண்ணின் இரத்த மாதிரி மேலதிக ஆய்வுகளுக்கு பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தமன சுகாதார வைத்திய அதிகாரி ஆர்.ஏ.ரணதுங்க குறிப்பிட்டார்.

# —உதவிகள்—

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கான இலவச மூக்குக்கண்ணாடி மூன்று சில்லு சைக்கிள், சக்கரநாற்காலி ஆகியவை வழங்குவதற்கான நடவடிக்கைகள் பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவினால் முன்னெடுக்கப் படவுள்ளது. இதில் வைத்திய நிபுணர்களின் மருத்துவச் சான்றிதழுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

அடைப்புக்குள் இருக்கும் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

| | | | | |
|---|---|---|---|---|
| பள்ளிவாசல் | நாம்புவ | தைனமோ | மடி | காக்கும்பலகை |
| பத்திரிப்பு | பாதட்டிய | மின்சுருள் | மின்உயர்த்தி | மஸ்ஜித் |

37. உயரமான கட்டடத்தின் மேல்மாடிக்கு இலகுவாகச் செல்லப் பயன்படுத்தப்படும் சாதனம் எது?

.................................................................

38. சைக்கிள் விளக்குக்கு மின்சக்தியை வழங்கும் உபகரணம் எது?

.................................................................

39. வலையில் அகப்படும் மீன்கள் சேரும் மூலையின் பெயர் எது?

.................................................................

40. இஸ்லாம் மார்க்கத்தினரின் சமய வழிபாட்டிடத்தின் பெயர் யாது?

.................................................................

41. அகழ்வுக் கைத்தொழில் மாணிக்கக்கல் தாதுக்கள் கொண்ட கூடையின் பெயர் யாது?

.................................................................

| | | | |
|---|---|---|---|
| கத்தரிக்கோல் | கைவில்லை | பாக்குவெட்டி | சுவர்ச்சுத்தியல் |
| அரம் | தீதாள் | கைத்தாளம் | உடுக்கு |

42. சிறு பொருள்களைப் பெருப்பித்துப் பார்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்?

.................................................................

43. கத்தியைத் தீட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்?

.................................................................

44. இரும்பாணியைக் கழற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்?

.................................................................


45. தாளம் போடுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்?

.................................................................

46. தைக்கும்போது பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணம்?

.................................................................

47. A,B ஆகிய இரண்டு தட்டிலும் உள்ள மெழுகுதிரிகள் ஒரே அளவானவை. இரண்டையும் ஒரே நேரத்தில் எரியச் செய்து இரண்டும் வெவ்வேறு அளவுடைய போத்தல்களினால் ஒரே நேரத்தில் மூடப்பட்டது. இதன்போது முதலில் அணைந்த மெழுகுதிரி எது?




1. A தட்டில் உள்ள மெழுகு திரி
2. B தட்டில் உள்ள மெழுகு திரி
3. A, B ஆகிய இரண்டு தட்டிலும் உள்ள மெழுகுதிரி ஒரே நேரத்தில் அணைந்தது


48. ஒரு பெரிய காணியில் பூந்தோட்டத்திற்கு மேற்கே தென்னந்தோப்பும் தென்னந்தோப்பிற்கு தெற்கே மாந்தோட்டமும் உள்ளன. ஆகவே பூந்தோட்டத்திற்கு எத்திசையில் மாந்தோட்டம் உள்ளது.

1. தெற்கு 2. தென்மேற்கு 3. கிழக்கு

49. ராஜா, நிமல் ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 45 கிலோக்கிராம் ஆகும். நிமல், சுரேஸ், ராஜா ஆகிய மூவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 68 கிலோகிராம் ஆகும் எனின் சுரேஸின் நிறை யாது?

1. 15 கிலோகிராம் 2. 68 கிலோகிராம் 3. 23 கிலோகிராம்

50. முகவையொன்றினுள் நீர், மண்ணெண்ணெய், தேங்காயெண்ணை மூன்றையும் கலக்கி விடப்பட்டபோது மூன்றும் வெவ்வேறாகப் பிரிந்து தனித்தனி படையாகக் காணப்பட்டது. இதில் B படை யாதாக இருக்கலாம்?




1. நீர் 2. தேங்காயெண்ணெய் 3. மண்ணெண்ணெய்



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011
பகுதி - I, II
விடைகள்
கல்வி முரசு
வெளியீடு 24



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்

**அடைப்புக்குள் உள்ள ஒருசொல் வித்தியாசமானது. அதன் கீழ்க் கீறிடுக.**

01. ஒழுக்கம் - (நடை, நன்னடத்தை, ஒழுகுகை, சீலம்)
02. ஆர்வம் - (அன்பு, விருப்பு, பற்றுள்ளம், ஆரவாரம்)
03. ஒழுகல் - (ஆசாரம், ஒழுகுதல், நடத்தல், இளகுதல்)
04. தருமம் - (அறம், தருமம், நற்செயல், நீதி)
05. காலம் - (அகாலம், பொழுது, பருவம், தக்கசமயம்)

**ஒத்த கருத்துச் சொற்களைத் தெரிந்து எழுதுங்கள்**

(நெகிழ்தல், நன்மை, செய்தல், மனம், வையகம்)

06. உலகம் :.................................................
07. உள்ளம் :.................................................
08. கசிதல் :.................................................
09. நன்றி :.................................................
10. இயற்றல் :.................................................

**பின்வரும் நிகழ்வுகள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான பழமொழிகளைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.**

11. சந்தர்ப்பம் கிடைக்கும்போது அதனைத் தக்கபடி பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
    1. சுவரை வைத்துக்கொண்டே சித்திரம் வரைய வேண்டும்.
    2. சிறுதுரும்பும் பல்லுக்குத்த உதவும்
    3. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
    4. மனமுண்டானால் இடமுண்டு

12. மழைபெய்ததை மண்ணால் மூடி மறைக்க முடியாது
    1. கழுதை அறியுமா கற்பூர வாசனை
    2. உலை வாயை மூடலாம் ஊர்வாயை மூட முடியுமா
    3. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா
    4. கோழி மிதித்துக் குஞ்சு சாகுமா

13. ஒருவர் இளமைக் காலத்திற் கற்கும் கல்வியானது அழியாது இறுதிவரை நிலைத்து நிற்கும்.
    1. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா
    2. இளமையில் கல்வி சிலையில் எழுத்து
    3. கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்
    4. பாடை ஏறினாலும் ஏடது கைவிடேல்

14. தோற்றத்தின் பெருமை, சிறுமையைப் பார்த்து ஒரு பொருளை மதிப்பிடக்கூடாது.
1. சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்
2. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது
3. விளையும் பயிரை முளையிலே தெரியும்
4. எட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது

15. கிரிக்கெட் விளையாட்டில் எமது வீரர் பெயர் பொறித்துள்ளனர்.
1. பதிவு செய்துள்ளனர்
2. புகழை நிலைநாட்டியுள்ளனர்
3. வெற்றி பெற்றுள்ளனர்
4. சவாலை ஏற்றுள்ளனர்

16. ஒருவர் சிறு நன்மை கருதி இழக்கும் மதிப்பினை எவ்வளவு முயன்றாலும் மீண்டும் பெறமுடியாது
1. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது
2. வெள்ளம் வருமுன்னே அணைகட்ட வேண்டும்
3. அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது
4. கண்கெட்ட பிறகு சூரிய வணக்கமா


17. எனது நண்பன் குமார், கடந்த நான்கு மாதங்களாக எங்கள் வீட்டுக்கு வரவில்லை. நேற்று எதிர்பாராமல் வந்தான.
1. காகம் இருக்கப் பனம்பழம் விழுந்தது போல்
2. கார்த்திகைப் பிறை கண்டாற் போல
3. காற்றிலே அகப்பட்ட துரும்பு போல
4. நட்டாற்றில் கைவிட்டாற்போல

18. தாயார் கூறிய புத்திமதிகளைத் தமயந்தி ஒரு நொடியில் மறந்தாள்
1. ஆனை வாயில் கரும்புபோல
2. நீர் மேல் எழுத்துப்போல
3. கல்மேல் எழுத்துப்போல
4. குரங்கின் கைப்பூமாலை போல


19. போஷாக்கின்மையால் மாலா மிகவும் மெலிந்து காணப்பட்டாள்
1. வாட்ட சாட்டமாய் இருந்தாள்
2. ஊன் உறக்கமில்லாமல் இருந்தாள்
3. எலும்பும் தோலுமாக இருந்தாள்
4. கொழுத்துப் பருத்திருந்தாள்

20. தேயிலை 250 கிராமின் விலை ரூபா 48 ஆகும். 2 kg 500g கிராம் தேயிலையின் விலை யாது?

.............................................................................

21. 
அருகில் தரப்பட்ட கூட்டற் பிரசினத்தில் △ இனால் ஓர் இலக்கமும் △ இனால் ஓர் இலக்கமும் காட்டப்பட்டுள்ளது எனின் △ இனாலும் □ இனாலும் குறிப்பிடப்படும் இலக்கத்தை எழுதுக.

□ .................................... △ ....................................

22. 
அருகே தரப்பட்ட முகவையானது 7 லீற்றர் நீரைக் கொள்ளக்கூடியது. இதனை முழுமையாக நிரப்ப இன்னும் தேவையான நீரின் அளவு யாது?
1. 7 L 800 ml
2. 6 L 200 ml
3. 5 L 200 ml



**பின்வரும் விவரணத்தை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடைதருக.**

நாம் நினைப்பது ஒன்று. நடப்பது ஒன்று. எவ்வளவு ஆசைகளை மனதில் ஏற்றிவைத்த மக்களுக்கு ஏற்பட்ட கதியினை கணிப்பிட முடியாது. உலகத்தையே துன்பத்தில் ஆழ்த்திவிட்டது இந்தச் சுனாமிப் பேரலை. கணக்கிட முடியாத உயிர்களை, உடமைகளை எல்லாம் இழந்த மக்கள் யாரை நினைக்கப் போகிறார்கள். யார்தான் உதவி செய்யப் போகிறார்கள். குடும்பமே முற்றாக அழிந்தவர்கள் போனாலும் குடும்பத்தில் தனியாகத் தவிக்கும் சிறுவர்களை நினைத்தால் வேதனை வருகிறது. ஆண்டவர் இப்படிக் கணக்கை முடித்தாரோ என்பது கேள்விக் குறிதான். எனவே நாங்கள் துன்பப்பட்டவர்களுக்கு ஏலுமான உதவியைச் செய்தல் வேண்டும்.

23. மேலே கூறப்பட்ட விவரணம் எதைப் பற்றியது?

.............................................................................

24. உடமைகள் என்பது எவற்றைக் குறிக்கும்?

.............................................................................

25. உயிர் என்பதன் ஒத்தசொல் ஒன்று தருக

.............................................................................

26. ஆசை என்பதன் எதிர்ச் சொல் ஒன்று தருக

.............................................................................

26. உமது மனதில் சோகத்தை ஏற்படுத்திய ஒரு பகுதியை எழுதுக.

.............................................................................

27. குடும்பம் என்பது யாரைக் குறிக்கும்?

.............................................................................

29. உயர்திணை, பலர்பால், பன்மை, படர்க்கை உள்ள பெயர்ச்சொல் தருக

.............................................................................

30. 'இன்பம்' என்பதன் எதிர்பதம் இரண்டு உண்டு. அவற்றைக் கூறுக.

1. .................................... 2. ....................................

31. வாழ்க்கை யாரினால் நிர்ணயிக்கப்படுகிறது எனக் கூறப்படுகின்றது?

.............................................................................

32. கூடுதலாகப் பாதிக்கப்பட்ட மக்கள் எப்பகுதியை அண்டி வாழ்ந்தவர்கள் எனக் கருதப்படுகின்றனர்?

.............................................................................

**பின்வரும் ஒழுங்கின்றி இருக்கும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.**

33. சென்று / வீடு திரும்பினார் / கடவுளை / கோவிலுக்கு / வணங்கி

.............................................................................

34. கேட்டு / சொல் / பெரியோர் / நன்று / நடத்தல்

.............................................................................

**பின்வரும் கூற்றின் கருத்தை வெளிப்படுத்தும் பழமொழியை எழுதுக.**

35. ஒருவருடன் பழகும்போது அளவுடன் பழகுதல் வேண்டும்.

.............................................................................

36. எந்தச் செயற்பாடாயினும் ஏனையோர் உதவியை எதிர்பாராது நாமே செய்தல் நன்று.

.............................................................................

# உபகாரம் என்று உபத்திரவம் செய்ய வேண்டாம்

## கருணாநிதிக்கு ஜெயலலிதா கண்டனம்



(புதுடில்லி)

காவிரி விவகாரத்தில் தி.மு.க.தலைவர் கருணாநிதிக்கு முதல்வர் ஜெயலலிதா கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து முதல்வர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில், காவிரி விவகாரம் தொடர்பாக கருணாநிதி எழுத்துப்பூர்வ கோரிக்கை ஏதும் அளிக்கவில்லை. அவர் உண்மையை திரித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். கருணாநிதி அறிக்கை உபகாரம் எனக்கூறி உபத்திரவம் செய்ய வேண்டாம். காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பு கடந்த 2007ஆம் ஆண்டு வெளிவந்தது.

இறுதி தீர்ப்பு குறித்து சுப்ரீம் கோர்ட்டில் முறையிட அதிமுக வலியுறுத்தியது. தீர்ப்பை அரசிதழில் வெளியிட்டால் சுப்ரீம் கோர்ட் செல்ல முடியாது என கருணாநிதி . வாதிட்டார் என கூறியுள்ளார். மேலும் அவர், காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட வேண்டும். காவிரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

**இந்தியச் செய்திகள்**

# மாணவி வன்புணர்வுக் கொலை

## குற்றவாளிகள் மீது வழக்கு

(புதுடில்லி)

மாணவியை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கிய ஓட்டுநர் ராம்சிங், அவரது சகோதரர் முகேஷ் அக்ஷய் தாக்குர், பவன் மற்றும் வினய் ஆகிய 6 பேர் மீது டில்லி பொலிஸார் கொலை வழக்கைப் பதிவு செய்தனர்.

இது குறித்து டில்லி பொலிஸ (சட்டம், ஒழுங்கு) ஆணையர் தர்மேந்திரகுமார், செய்தியாளர்களிடம் கூறியதாவது இவ் வழக்கில் வரும் ஜனவரி 3ஆம் திகதிக்குள் குற்றப் பத்திரிகையைச் சமர்ப்பிப்போம்.

இவ்வழக்கில், கொலைக் குற்றத்துக்கான இந்திய தண்டனைச் சட்டத்தின் 302ஆவது பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது.




இந்த வழக்கு விசாரணையை விரைவு நீதிமன்றத்தில் தினசரி அடிப்படையில் நடத்துவதற்காக சிறப்பு அரசு சட்டத்தரணி நியமிக்கப்பட்டுள்ளார்.

6ஆவது நபரான அக்ஷய் தாக்குர் டில்லி கூடுதல் தலைமை பெருநகர மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நீதிபதி லோகேஷ் குமார் சர்மா முன்பு ஆஜர்படுத்தப்பட்டார்.

அவரை ஜனவரி 9ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். இதையடுத்து, அக்ஷய் தாக்குர் சிறையில் அடைக்கப்பட்டார்.

# இந்திய கடற்படையின் பலம் அதிகரிக்கிறது

## 2013இல் சூப்பர்சொனிக் ஏவுகணை திட்டம்



(புதுடில்லி)

உலகின் அதிவேக சூப்பர்சொனிக் ஏவுகணையை கடலுக்கடியில் இந்தியா 2013ஆம் ஆண்டு ஜனவரியில் பரிசோதிக்கவுள்ளது. எதிரியின் போர்க்கப்பல்களை மறைந்திருந்து தாக்கும் விதமாக இந்த ஏவுகணை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏவுகணை இந்திய கடற்படையின் பலத்தை பலமடங்கு கூட்டும் எனவும் கருதப்படுகிறது. இது 290 கி.மீ.க்கு அப்பால் இருக்கும் இலக்கை 6 நிமிடத்துக்கும் குறைவான நேரத்தில் தாக்கும் இந்திய - ரஷ்யாவின் கூட்டுத்தயாரிப்புமாகும். சீனாவின் "சன்பர்ன் சூப்பர்சோனிக்" ஏவுகணையை விட வேகமானது.

அமெரிக்கா, பிரித்தானியாவின் "டொமாஹக்" ஏவுகணையை விட மூன்று மடங்கு வேகமானதுமாகும். குறைவான உயரத்தில் பறக்கும். "சூப்பர்சொனிக்" உளவு விமானங்கள் கூட இதை கண்டறிவது கஷ்டம். இலக்கை தாக்கும் போது கடலுக்கடியில் 10 மீற்றர் ஆழத்துக்கும் குறைவாக சென்று தாக்கவல்லது.

# மாணவியின் உடல் தகனம்

## மன்மோகன்சிங், சோனியா அஞ்சலி



(புதுடில்லி)

பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி சிங்கப்பூர் மருத்துவமனையில் உயிரிழந்த மாணவியின் உடல் டில்லியில் தகனம் செய்யப்பட்டது.

மாணவியின் உடலுடன் சிங்கப்பூரில் இருந்து நேற்றுநள்ளிரவு 12.30 மணிக்கு புறப்பட்ட விமானம், அதிகாலை 3.30 மணிக்கு டில்லி இந்திராகாந்தி விமான நிலையத்தை வந்ததடைந்தது.

பின்னர் தனியார் மருத்துவ மனையின் அம்புலன்ஸ் மூலம் அவரது உடல் விமான நிலையத்திஒலிருந்து எடுத்துச் செல்லப்பட்டது.

சிங்கப்பூரிலிருந்து, கொண்டு வரப்பட்ட மாணவியின் உடல், டில்லி வந்த சில மணி நேரங்களில் தகனம் செய்யப்பட்டது.

மாணவியின் உடலுக்கு பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நேரில் அஞ்சலி செலுத்தினர்.

மேலும் மாணவியின் பெற்றோரை இருவரும் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர்.

மாணவி வசித்த டில்லி மஹாவீர் கிளை பகுதியில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

கடும் பனி மூட்டத்திற்கு இடையே நடைபெற்ற உடல் தகனத்தில் ஆர்.பி.சிங் பங்கேற்றார்.

பிஸியோதெரபி மாணவியான குறித்த பெண், கடந்த 16ஆம் திகதி இரவு, பேருந்து ஒன்றில் 6 பேர் கொண்ட கும்பலால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளானார்.

அவருக்கு டில்லி சப்தர் ஜங் மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது. பின்னர், மேல் சிகிச்சைக்காக சிங்கப்பூரில் உள்ள மவுண்ட் எலிசபெத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அந்த மாணவியின் மூளை, நுரையீரல், குடல் பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

இதைத்தொடர்ந்து மாணவியைக் காப்பாற்ற மருத்துவர்கள் மேற்கொண்ட முயற்சி பலனைத் தரவில்லை. மரணத்துடன் போராடிய அவரது உயிர் பிரிந்தது.

# நான் அரசியலுக்கு வந்தால்

## என் வழி தனிவழியாக இருக்கும்

**ரஜினி காந்த்**



(சென்னை)

சென்னையில் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் ஒரு பார்வை என்ற நூல் வெளியீட்டு விழா நடந்தது. இவ்விழாவிற்கு திமுக தலைவர் கருணாநிதி தலைமை தாங்கினார். இவர்களுடன் திரையுலக நட்சத்திரங்களான ரஜினிகாந்த், கமல் ஹாசன் இருவரும் கலந்து கொண்டனர்.

அப்போது ரஜினிகாந்த் தாம் அரசியலுக்கு வருவது பற்றி பேசிய போது, நமது இளைய சமுதாயமும், மாணவ சமுதாயமும், அரசியல்வாதிகளுக்கு எதிராக, சட்டங்களுக்கு எதிராக குரல் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

அவர்கள் விழித்துக் கொண்டு விட்டார்கள் என்பது சிதம்பரத்துக்கு தெரியும்.

அதற்கும் முன்பு அரசியல்வாதிகள் விழித்துக் கொள்ளாவிட்டால் நாட்டில் மிகப் பெரிய புரட்சி வெடிக்கும். அதுவும் அவருக்கு தெரியும். என்னுடைய இரசிகர்களைப் போல நீங்கள் ஏன் அரசியலுக்கு வரக்கூடாது என்று சிதம்பரம் என்னிடம் கேட்பார். நான் அரசியலுக்கு வந்தால் அது தனி வழியாக இருக்கும் என்பது அவருக்கும் தெரியும் என்றார் ரஜினிகாந்த்.

# டாட்டா குழுமத்தின் தலைவர்

## ரத்தன் டாட்டா ஓய்வுபெற்றார்

(புதுடில்லி)

இந்தியாவின் தொழில்துறைத் தலைவர்களில் மிகவும் அறியப்பட்டவரான ரத்தன் டாட்டா நேற்றுடன் ஓய்வு பெற்றுள்ளார். அவருக்கு எழுபத்தைந்து வயது ஆகிறது.

டாட்டா என தனது குடும்பப் பெயரில் அமைந்த ஏராளமான தொழில் நிறுவனங்களின் குழுமத்துக்கு இரண்டு தசாப்தங்களுக்கு முன் இவர் தலைமை ஏற்றிருந்தார்.

இவர் டாட்டா நிறுவனங்களை இந்த அளவுக்கு வளர்ப்பார் என்று அப்போது பலர் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஆனால் இந்தியாவில் தாராளச் சந்தை சீர்திருத்தங்கள் வந்த நிலையில், அவருடைய தலைமையின் கீழ் டாட்டா நிறுவனங்கள் பெரும் வளர்ச்சியும் இலாபமும் கண்டன.

உலகத்தி லேயே மிகவும் விலை மலிவான காரை உற்பத்தி செய்தது, பல் வேறு நாடுகளுக்கும் சென்று தொழில் நிறுவனங்களை வாங்கியது போன்றவற்றை ரத்தன் டாட்டா தனது தலைமையில் நிறைவேற்றினார்.

ரத்தன் டாட்டாவுக்கு அடுத்தபடியாக அவருடைய உறவுக்காரர் ஒருவர்தான் தலைமைப் பொறுப்புக்கு வருகிறார். சைரஸ் மிஸ்திரி இனி டாட்டா குழுமத்துக்கு தலைவராகச் செயல்படுவார்.

அந்த நிறுவனத்தின் நூற்றைம்பது வருட சரித்திரத்தில் டாட்டா என்ற குடும்பப் பெயர் இல்லாத ஒருவர் குழுமத்துக்கு தலைமை ஏற்பதென்பது இதுவே முதல் முறை.





## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# பெனாசீர் பூட்டோ கொலை விசாரணை

## அறிக்கை வெளியீட்டை தடுத்த ஜர்தாரி



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவின் படுகொலை குறித்த விசாரணை அறிக்கையை வெளியிட அதிபர் ஆசிப் அலி ஜர்தாரி தடை விதித்தார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.கடந்த 2007ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் திகதி ராவல் பிண்டியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ படுகொலை செய்யப்பட்டார். இது குறித்த விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நிலையில் பெனாசீரின் ஐந்தாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவர் சார்ந்திருந்த பாகிஸ்தான் மக்கள் கட்சி சார்பில் கரிகுடா பக்ஸ் பகுதியில் டிசம்பர் 27ஆம் திகதி மாபெரும் பேரணி நடைபெற்றது.

இந்த பேரணி நடப்பதற்கு முன்னதாக பெனாசீர் படுகொலை குறித்த விசாரணை அறிக்கையை பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மத்திய நிர்வாகக் குழுவில் வெளியிடத் திட்டமிட்டிருந்தார் உள்துறை அமைச்சர் மாலிக். ஆனால் இதற்கு பெனாசீர் பூட்டோவின் கணவரும் பாகிஸ்தான் அதிபருமான ஜர்தாரி தடை விதித்துள்ளார். இத்தகவலை மாலிக் வட்டாரம் உறுதிப்படுத்தியுள்ளது.

பெனாசீர் பூட்டோவின் நினைவு தின நாளில் விசாரணை அறிக்கையை வெளியிட்டால் அதன் மூலம் பிலாவல் பூட்டோ தன்னுடைய அரசியல் செல்வாக்கை வளர்த்துக்கொள்ளக் கூடும் எனக் கருதியே விசாரணை அறிக்கைக்குத் தடை விதித்துள்ளார் ஜர்தாரி என பாகிஸ்தான் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

# சிரிய ஆயுதப் போருக்கு முடிவு; பேச்சு நடத்துமாறு ரஷ்யா அறிவுறுத்து



சிரியாவில் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கிளர்ச்சிக்காரர்களுடன் பேச்சு நடத்துமாறு அந்நாட்டு அரசை ரஷ்யா அறிவுறுத்தியுள்ளது.

தலைநகர் மாஸ்கோவில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையின்போது, சிரியாவின் வெளியுறவு அமைச்சர் பைசல் மாக்தாத்திடம் வலியுறுத்தியாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரெவ் தெரிவித்தார்.

கடந்த ஜூன் 30ஆம் திகதி ஜெனிவாவில் நடந்த பேச்சுகளின் போது, சிரியாவில் இடைக்கால அரசை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டது.

ஆனால், ஜனாதிபதி பஷார் அல்-அசாத்தும், கிளர்ச்சிக்காரர்களும் இந்தத் திட்டத்தை ஏற்கவில்லை.

இந்த நிலையில், அடுத்த மாதம் மாஸ்கோவில் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் நடத்தும் பேச்சுகளின் போது, புதிய திட்டங்கள் வகுக்கப்படும் என்று தெரிகிறது.

உலகச் செய்திகள்

# கடத்தப்பட்ட இராணுவ வீரர்கள் தலிபான்களால் சுட்டுக்கொலை



தலிபான்களால் கடத்தப்பட்ட பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் 20 பேர் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள பெஷாவர் பகுதியின் சோதனைச் சாவடிகளில் இருந்த 20இற்கும் மேற்பட்ட துணை நிலை இராணுவத்தினரை தலிபான்கள் கடத்திச்சென்றனர்.

இவர்களை மீட்பதற்கான முயற்சிகளை இராணுவத்தினர் எடுத்தும் தோல்வியில் முடிந்தது.

இந்நிலையில் 20 பேரின் உடல்களை பொலிஸார் மீட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதற்கிடையே பாகிஸ்தான் அமெரிக்காவுடனான உறவை முறிக்காத பட்சத்தில் நாங்கள் ஆயுதங்களை கீழே போடப் போவதில்லை என தலிபான்கள் எச்சரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# அட்லாண்டிக்கில் படகு கவிழ்ந்தது 22பேர் பலி, 69 பேரை காணவில்லை




மேற்கு ஆபிரிக்க நாடான கினியா பிஸாவில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் பலியாயினர், 69 பேரை காணவில்லை.

கினியா பிஸா நாட்டின் பலோமா தீவில் இருந்து பிஸாவ் நகருக்கு அட்லாண்டிக் கடல் வழியே 97 பேரை ஏற்றிக் கொண்டு சென்றது.

அளவுக்கு மீறி ஆட்கள் ஏற்றப்பட்டதாலும், அலைகளின் சீற்றம் காரணமாகவும் இந்தப் படகு நடுக்கடலில் கவிழ்ந்தது. இதில் 22 பேர் பலியாயினர்.

அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக மீட்புக்குழு ஊழியர் ஒருவர் தெரிவித்தார். 69 பேரைக் காணவில்லை. அவர்களைத் தேடும் பணியில் மீட்புக் குழுவினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.ஒரு காலத்தில் போர்த்துக்கசர்களின் காலனியாக இருந்த கினியா பிஸாவ் தற்போது சுதந்திர நாடாக உள்ளது.

அதற்கு சொந்தமாக அட்லாண்டிக் கடலில் பலோமா உட்பட சுமார் 100 சிறிய தீவுகள் உள்ளன. அவற்றில் பெரும்பாலான தீவுகளில் மனிதர்கள் யாரும் வசிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வேலையில்லா திண்டாட்டம் பிரான்ஸில் அதிகரிப்பு



பிரான்ஸில் வேலை தேடுபவர்களின் எண்ணிக்கை 3.13 மில்லியனாக அதிகரித்துள்ளது தற்போது தெரியவந்துள்ளது.

தேசியப் புள்ளியியல் துறை, வேலையில்லாதோர் பற்றி கணக்கெடுப்பு நடத்தியது.

இதில், வேலையற்றோர் எண்ணிக்கை அக்டோபரை விட நவம்பர் மாதம் 0.9 சதவிகிதம் உயர்ந்துள்ளது, அதாவது ஒரு மாதத்தில் 29300 பேர் வேலை தேடி தமது பெயரை பதிவு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கையுடன், பகுதி நேர வேலை பார்ப்பவர்களையும் சேர்த்தால் 4.62 மில்லியனைக் கடந்துவிடும், வெளிநாடுகளில் வேலையில்லாமல் இருக்கும் பிரான்ஸ் மக்களையும் சேர்த்தால் ஐந்து கோடியை நெருங்கிவிடும்.

முன்பை விட இப்போது 50 வயதுக்கு மேற்பட்டோரும், 25 வயதுக்கு குறைந்தோரும் 1.2 சதவீதம் கூடுதலாக வேலையில்லாமல் இருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1998ஆம் ஆண்டுக்குப் பிறகு, அதிகமானோர் வேலையில்லாமல் தவிப்பது இந்த ஆண்டில் தான் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

# வீதிக்கு வந்த ரஷ்ய விமானம் விமானியின் தவறால் 4பேர் பலி




(மாஸ்கோ)

ரஷ்யாவில் பயணிகள் விமானம் ஓடுபாதையிலிருந்து விலகி வீதிக்கு வந்து உடைந்து தீப்பிடித்து விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்தனர். மேலும் 4 பேர் காயம் அடைந்தனர். தலைநகர் மாஸ்கோவின் தெற்குப் பகுதியில் உள்ள வினுகோவோ விமான நிலையத்தில் இவ்விபத்து கடந்த சனிக்கிழமை நிகழ்நதது. விபத்தின்போது விமானத்தில் 8 பேர் இருந்ததாக கூறப்படுகிறது.

ரஷ்யாவின் ரெட் விங்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான இந்த விமானம் செக் குடியரசுக்குச் சென்றுவிட்டு பயணிகளை இறக்கிவிட்டு வினுகோவா விமான நிலையத்துக்கு திரும்பியது. இறங்கும்போது ஓடு பாதையை விட்டு விலகி வீதியில் உடைந்து தீப்பிடித்தது. வேறு எந்த வாகனம் மீது விமானம் மோதவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. விமான பைலட்டின் தவறே விபத்துக்கு காரணம் என சந்தேகிக்கப்படுகிறது.

210 பேர் பயணம் செய்யக் கூடிய வசதியை உடைய இவ்விமானம் உடைந்ததற்கான காரணம் குறித்து உடனடியாகத் தெரியவில்லை

# "ஒப்ரேஷன் பாலைவன புயல்" இராணுவ தளபதி மரணம்



குவைத் நாட்டை ஆக்கிரமித்த ஈராக்கை விரட்டியடித்த அமெரிக்க இராணுவ தளபதி காலமானார்.

கடந்த 1991ஆம் ஆண்டு, சதாம் குசேன் தலைமையிலான ஈராக் படை குவைத் நாட்டை ஆக்கிரமித்து இருந்தது. இதனை தொடர்ந்து அமெரிக்க படைகள் 'ஒப்ரேஷன் பாலைவனப் புயல்' என்ற பெயரில் தலையிட்டு சதாம் குசேனின் படைகளை விரட்டியடித்தது.

இந்த போரை தலைமை ஏற்று நடத்தியவர் நார்மன் ஸ்வார்ஜ் கோப். இவர் உடல்நலக் குறைவால் தனது 78ஆவது வயதில் மரணமடைந்தார்.

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மாற்றிடத்தில் வாழ காணிகள் வழங்கல்



வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட நிலையில் வேறு இடங்களில் வாழ விரும்பும் வவுனியா பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த புதுக்குளம் கிராம மக்கள் சிலருக்கு அவர்களுக்கான காணிகளை ஒழுங்கமைக்குமாறு வவுனியாப் பிரதேச செயலரிடம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர பணித்துள்ளார்.

இது தொடர்பில் தான் அரசாங்க அதிபரிடம் கூறுவதாக அமைச்சர், பிரதேச செயலாளரிடம் தெரிவித்ததுடன் வீடுகள் அமைப்பதற்கு முதற்கட்டமாக ஒரு இலட்சம் ரூபா வழங்குவற்கு எற்பாடு செய்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிப்படைந்த மக்களை பார்வையிடுவதற்காக நேற்று வவுனியாவிற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மக்களிடம் உரையாடினார். இதன்போது, "தொடர்ச்சியாக வெள்ளப்பாதிப்பு ஏற்படுமாயின் வேறு இடத்தில் காணி, வீடுகளைப் பெற்றுச்செல்ல விருப்பமா? என அமைசசர் பாதிக்கப்பட்ட மக்களிடம் வினவிய போது ஒருசிலர் தமது விருப்பத்தை தெரிவித்துள்ளனர்.

இதன்போது அமைச்சர் பிரதேச செயலாளருக்கு இவ்வாறு பணித்துள்ளார். வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த களுகுண்ணாமடு விஜயபாகம கிராம மக்கள் சிலரும் தாம் வேறு காணிகளில் இருப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை புதுக்குளம் கிராமத்திற்கு செல்லும் பாதை தொடர்பில் மக்கள் அமைச்சரிடம் எடுத்துக் கூறியதற்கிணங்க அதற்கான மதிப்பீட்டினை வழங்குமாறு தெரிவித்ததுடன் செஞ்சிலுவை சங்கத்தினூடாக பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்படும் எனவும் உத்திரவாதமளித்திருந்தார்.

இதேவேளை பாதிப்படைந்தவர்களுக்கு 1500 ரூபா வீதம் அத்தியாவசிய தேவைகள் மற்றும் பாடசாலை மாணவர்களின் தேவை கருதி வழங்குமாறும் வவுனியாப் பிரதேச செயலாளர அ.சிவபாலசுந்தரனிடம் அவர் கூறினார்.

## குற்றத்தடுப்பு...

அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் விசாரணையின் பின்னர் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (15)

## முரண்பாடுகளைத்...

சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகளுக்கும் நேர அட்டவணை தயாரித்து நடைமுறைப்படுத்தி வந்தோம். பின்னர் பருத்தித்துறைச் சங் கம் இணையத்திலிருந்து பிரிந்து தனியாக இயங்க ஆரம்பித்த பின்னர் இவ்விடங்களுக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபரால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நேரக் கணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் சில மாதங்களாகப் பருத்தித்துறைச் சங்கத்திறகும் அச்சுவேலி சங்க்தின் சிற்றூர்திகள் சேவையில் ஈடுபட்ட வேளை முரண்பாடு ஏற்பட்டு கைகலப்பு ஏற்பட்டுள்ளது. பின் சென்ற வாரம் அச்சுவேலி சங்கத் தலைவருக்குப் பருத்தித்துறைச் சங்க பேருந்து ஓட்டுநர் சேவையின் போது இடையில் வைத்து அடித்துள்ளார். நேற்று பருத்தித்துறை சங்க பேருந்து ஓட்டுநர் சேவையின் போது இடையில் வைத்து அடித்துள்ளனர். சேவையின் போது முரண்பாடு ஏற்பட்டு பருத்தித்துறைச் சங்கத்தின் நடத்துநர் ஒருவர் அச்சுவேலி சங்கத்தின் சிற்றூர்தி நடத்துநருக்கு போத்தல் உடைத்து வயிற்றில் குத்தி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக முன்னரும் அரசாங்க அதிபருக்கும் உரியவர்களுக்கும் தெரியப்படுத்தி எதுவித நடவடிக்கையும் எடுத்து சங்கங்கள் ஒன்றாகச் சேர்ந்து இயங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. தொடர்ந்தும் இப்பிரச்சினை நடைபெறு வதனால் எதிர்காலங்களில் பொதுமக்களுக்குச் சிறந்த சேவையினை மேற்கொள்ள முடியாதநிலை காண்படும். எனவே இப்பிரச்சினையை உரியவர்கள் தீர்த்து வைக்கும் வரை இன்றிலிருந்து யாழ். மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்கள் அனைத்தும் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

## இரணைமடு...

மட்டம் எந்தளவு இருக்கிறது, இதைக்கொண்டு எத்தனை ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடியும் என திட்டக்குழுவின் வழிகாட்டலின்படியே பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும், இதற்குத் தேவையான நீர் இரணைமடுக் குளத்திலிருந்து விவசாயிகளுக்குக் கிடைப்பதுடன் கூடவே, கோடை மழையும் பெய்யும்போது நெற்செய்கைக்கு எவ்வித பாதிப்புமின்றி சிறப்பாக மேற்கொள்ளப்படுவது வழமை. ஆனால் கடந்த வருடம் கோடைகால மழை வீழ்ச்சி இல்லாததால் நாட்டில் நிலவிய கடும் வரட்சியின் காரணமாக இரணைமடு மட்டுமின்றி பல குளங்கள் வற்றியது அனைவருக்கும் தெரியும் என குறிப்பிட்டார்.

இவ்வாறான வறட்சியின் நிலையிலும் இரணைமடுக்குளத்திற்கு கீழ் செய்கை பண்ணப்பட்ட நெற் பயிர்ச் செய்கைக்கு சுழற்சி முறையில் நீர் வழங்கப்பட்டது. ஆனால் இதனை சரியாக விளங்கிக் கொள்ளாத நாட்டிலேயே இல்லாத சில மூத்த ஊடகவியலாளர்கள் இங்கிருந்து சொல்லும் ஒருசில தகவலை மட்டும் வைத்துக்கொண்டு தமக்கு வந்தபடி செய்திகளை பிரசுரிக்க! செய்திக்காக காத்திருக்கும் ஊடகங்கள் அதனை அப்படியே தமது பத்திரிகைகளில் பிரசுரித்து மக்களின் மனதை புண்படுத்தியதாலேயே கோடை காலத்தில் இரணைமடு தொடர்பில் வந்த வதந்திகளுக்கு காரணம் என தெரிவித்தார்.

ஆனால், கடந்த சிறுபோக பயிர்ச்செய்கை திட்டக்குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை கடைப்பிடிக்காத சில விவசாயிகள் நிர்ணயிக்கப்பட்ட 8,000 ஏக்கர்களைவிட மேலதிகமாக 4,000 ஏக்கர்களில் முன்னனுமதியின்றி நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டதால் 12,000 ஏக்கர்களுக்கு வழங்குவதற்கான நீர் இரணைமடுக்குளத்தில் இல்லாதால் வயல்கள் தொடங்கின. இரணைமடுக்குளத்தில் கிடைப்பனவாக இருக்கக்கூடிய நீருக்கு மேலதிகமாக, அனுமதியின்றி விவசாயத்தில் ஈடுபட்டவர்களால் நெற்செய்கை இவ்வாறு பாதிக்கப்பட்டிருக்க, நம்முடைய பத்திரிகைகள் சில, முந்திக்கொண்டு இரணைமடுக்குள நீர் வற்றியமைக்கு இராணுவத்தினரே காரணம் என்று செய்தி வெளியிட்டிருந்தன.

இரணைமடுக் குளம் அமைந்துள்ள பகுதியில் முகாம்கள் அமைக்கப்பட்டு அது இராணுவமயப் பட்டிருப்பது என அடிக்கடி தமிழர் தரப்புக்களால் சுட்டிக்காட்டி தமது கண்டனத்தை தெரிவிக்கின்றனர் ஆனால் முன்னர் புலிகளுடைய காலத்திலும் இரணைமடுக் குளத்தின் ஒரு பகுதி முற்றிலுமாக உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டு மக்கள் அங்கு செல்ல முடியாதவாறு தடுக்கப்பட்டிருந்ததும் தெரிந்ததே.

ஆனால் இணைய ஊடகங்களும், அதனை முந்திக்கொண்டு பிரசுரிக்கும் பத்திரிகைகளும் சற்று சிந்தியுங்கள் இரணைமடு விமானப்படைத்தளம் என்பது இரணைமடு குளத்தின் நீரேந்து பகுதியில் காணப்படவில்லை என்பதும் இது இரணைமடுக்குளத்தில் இருந்து 23 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கல்மடுக்குளத்தின் மேற்பகுதியிலேயே காணப்படுவதனை அனைவரும் அறிய வேண்டும் என குறிப்பிட்டுடன் தேவைப்பட்டால் அதனை நீங்கள் உங்களது கணனியில் பார்க்க முடியும் எனக் குறிப்பிட்டார்.

எனவே ஊடகங்கள் தமது வாசகர்களுக்கு செய்தியை வளங்கும் போது சரியான செய்தியை வளங்க வேண்டுமே தவிர மக்களை குழப்பம் அடைய செய்து அதில் தமது வியாபாரத்தையும், அரசியலை செய்யக்கூடாது எனக் குறிப்பிட்டதுடன் புலம்பெயர் ஊடகவியலாளர்கள் தமக்கு கிடைக்கும் யூறோவுக்காகவும், தமது அகதி அந்தஸ்தை நிலைநாட்ட தமிழ் மக்களை குழப்பவேண்டும் எனக் குறிப்பிட்டார். (கிரு)

# மீளவும் வீடுதிரும்பும் கிளிநொச்சி மாவட்ட மக்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் மழையாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட நிலையில் தங்களது வீடுகளை விட்டு வெளியேறி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களில் ஒரு சிலர தங்களது வீடுகளுக்குத் திரும்புகின்றார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்த கடும் மழையாலும் குளங்கள் பெருக்கெடுத்ததாலும் 4,015 குடும்பங்களைச் சேர்ந்த 15,374 பேர் பாதிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டனர்.

இவர்களில் 1,584 குடும்பங்களைச் சேர்ந்த 5,730 பேர் தங்களது வீடுகளை விட்டு வெளியேறிய நிலையில் 26 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டனர். இம்மக்களில் ஒரு சிலரே தற்போது தங்களது வீடுகளுக்குத் திரும்புவதாகவும் கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப பணிப்பாளர் கு.சுகுணதாஸ் நேற்று தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமையும் நேற்று ஞாயிற்றுக்கிழமையும் மழை குறைவடைந்துள்ளதுடன், வெள்ளமும் வடிந்தோடி வருவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணை மடுக்குளத்தின் நீர் வற்றிவருகின்றது. இம்மாவட்டத்திலுள்ள ஏனைய குளங்களான அக்கராயன்குளம், கல்மடுக்குளம், பிரமந்தன்குளம், புதுமுறிப்புக் குளம், கனகாம்பிகைக்குளம், வன்னேரிக்குளம், கரியாலை நாகபடுவான்குளம், குடமுறுட்டி குளம் ஆகிய குளங்களிலிருந்து வான் பாய்வதும் குறைவடைந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.விகிர்தன் தெரிவித்தார்.

இரணைமடுப் பகுதியில் 2.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் நாகபடுவான்குளம் 0.2 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ள அதேவேளை, அக்கராயன் பகுதியில் மழை வீழ்ச்சி பதிவாகவில்லையெனவும் அவர கூறினார்.

## மருத்துவர்...

மேற்கொண்டவர்களைக் கைதுசெய்யுமாறு கோரி யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் கடந்தவாரம் போராட்டங்களை மேற்கொண்டிருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் அரச வைத்திய சங்கத்தின் தாய் சங்க தலைவர் மஹிபால கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டு வைத்தியர்கள் மற்றும் பொலிஸாருடன் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இக்கலந்துரையாடலின்போதே மேற்படி தீர்மனம் எட்டப்பட்டுள்ளதாக வைத்திய சங்கத்தலைவர் எஸ்.நிமலன் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் போது, வைத்தியரின் குடும்பத்தினர் கொழும்பில் வசிப்பதனால் 3 மாதத்திற்கு தற்காலிக இடமாற்றம் வழங்குமாறு வைத்தியர் திருமாறன் கேட்டதற்கு இணங்க கொழும்பிற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அரச வைத்திய சங்கத்தலைவர் மேலும் கூறினார். (இ,25)

## புலிகள்...

ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறான போலிப் பிரசாரங்கள் மேற கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். புலிகள் மீள ஒருங்கிணைவதென்ற அரசாங்கத்தின் குற்றச்சாட்டுக்கள் முற்று முழுதாகப் பொய்யானவையாகும் யாழ்ப்பாணப பல்கலைக் கழகத்தின் எந்த மாணவருக்கும் புலிகளுடன் தொடர்புகிடையாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகளுடன் தொடர்புகளைப் பேணுவதாகவும், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் சிங்கள மக்கள் நம்ப வேண்டுமென அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

அரசாங்கமே இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

## அச்சுவேலி...

(வயது-20), கே.இதயநாதன் (வயது-36) செல்வராசா செல்வரத்தினம், கார்த்தீபன் (வயது-26) ஆகியோர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். மேலும் சிலர் காயமடைந்து சிகிச்சையின் பின் வீடு திரும்பியுள்ளதாக அச்சுவேலி தனியார் பேருந்து சேவை செயலர் தெரிவித்தார்.

கடந்த பல வருடங்களாக அச்சுவேலி தனியார் பேருந்துகளுக்கான நேர அட்டவணையில் மாற்றம் தொடர்பாக யாழ். செயலகத்திற்குப் பலமுறை எடுத்துக் கூறியும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அச்சுவேலி தனியார் பேருந்துச் சேவை செயலாளர் தெரிவித்தார்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து அச்சுவேலி மற்றும் பருத்தித்துறை தனியார் பேருந்து சேவைகள் எதுவும் நடைபெறவில்லை. இதனால் நேற்று பொதுமக்கள் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியதோடு போக்குவரத்துச் சபைப் பேருந்துகளிலேயே பயணத்தை மேற்கொண்டதோடு இம்மார்க்கங்களுக்குப் பேருந்து சபை விசேட பஸ்சேவைகளையும் நடத்தவேண்டிய நிலை காணப்பட்டது. இக் கைகலப்புச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர். (இ,15,25,137)

## கடலில்...

பகுதியைச் சேர்ந்த அலோசியஸ் கஜிம்ஸ் என்ற 16 வயதுடைய மாணவனே இவ்வாறு பரிதாபகரமாக இறந்துள்ளார். குறித்த மாணவனின் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இவர் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலைவன் பாடசாலையில் கல்வி கற்று தற்போது க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை எழுதியுள்ளார் எனத் தெரிவிக்கபட்டுள்ளது.(116)

# நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்படவில்லை

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவிப்பு

ஜனவரி 3 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு இதுவரையில் தமக்கு அழைப்பாணை விடுக்கப் படவில்லை என பிரதம நீதியர சருக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ள னர்.

தமக்கான அழைப்பாணை கிடைக்கப்பெற்றால், அது குறி த்து தெரிவுக் குழுவில் இருந்த நான்கு எதிர்க்கட்சி உறுப்பினர்க ளும் பொதுத் தீர்மானம் ஒன்றுக்கு வரவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரி யெல்ல தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான தெரிவுக் குழுவின் உறுப்பினர் களை எதிர்வரும் மூன்றாம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த தெரிவுக் குழுவை இரத்துச் செய்யுமாறு பிரத்ம நீதியரசர் தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணையைத் தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பிரதம நீதி யரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப் பிரேரணை தொர்டர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை மீது எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் விவாதம் நடைபெற வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகி றது.

நாடாளுமன்றத்தில் ஜனவரி 8 ஆம் திகதி நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதற் கான அங்கீகாரம் பெறப்பட வுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2013 ஆம் ஆண்டு நாடாளு மன்றம் ஜனவரி 8 ஆம் திகதி கூடவுள்ளது. 9 ஆம் திகதி எதி ர்க்கட்சியினர் முன்வைத்துள்ள சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணைகள் மீதான விவாதம் நடைபெறும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது

# சஞ்சீவ பண்டார ... களனியில் தாக்கு...

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் சஞ்ஜீவ பண்டார நேற்றுக் காலை தாக்குதலுக்குள்ளான நிலையில் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள் இருவரது நினைவு தினத்தை அனுஷ்டித்து பல் கலைக்கழக விடுதிக்கு திரும்பும் வேளை நேற்று அதிகாலை 2.00 மணியளவில் சஞ்ஜீவ பண்டார தாக்குதலுக்குள்ளானதாக அனை த்து பல்கலைக்கழக ஒன்றியம் தெரிவித்து...

களனி பல்கலைக்... ருந்து 2 கிலோ மீற்ற... வில் இந்தத் தாக்கு... கொள்ளப்பட்டுள்ளது...

தாக்குதல் நடத்திய... இருவர் பாதுகாப்பு அ... என சந்தேகிப்பதாக... பண்டார தெரிவித்து...

இச்சம்பவம் தொடர்... ரணைகளை மேற்கொ... பொலிஸ் ஊடகப் பி... வித்துள்ளது.

# விலக்குப் பிடிக்கச் சென்ற தந்தை, மகன் மீது தாக்குதல்

(கோப்பாய்)

இரண்டு இளைஞர் குழுக்க ளிடையே ஏற்பட்ட வாய்த்தர்க் கத்தை தீர்க்கச் சென்ற தந்தை யும் மகனும் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

கோப்பாய் முருகன் வீதிப் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந் தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த பகுதியில் இரண்டு இளைஞர் குழுக்களிடையே ஏற் பட்ட வாய்த்தர்க்கம் கைகலப் பாக மாறும் நிலை ஏற்பட்டது. இதனை அவதானித்த அப்பகுதி யிலுள்ள குடும்பஸ்தர், இரண்டு பகுதியினரையும் சமரசம் செய்து அனுப்பிவைத்தார்.

இந்த நிலையில் சம்பவத்தில் தொடர்புடைய இளைஞர் குழு வொன்று மேலதிகமாக ஆட்க ளைச் சேர்த்து வந்து குறித்த குடும்பஸ்தரின் வீட்டின் மீது கடுமையாக கற்களை வீசித் தாக்குதலை நடத்தியது.

இதன்போது கதிரவேலு ரவீந் திரராசா (வயது - 44) அவரது மகனான ராஜ்மோகன் (வயது - 25) ஆகிய இருவருமே காயம டைந்தவர்களாவர். (25)

# நடுவானில் தடுமாறிய ஹெலி... "பிரித் ஓதி" இறக்கினார் ஆளு...

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, அமைச்சர் நிமால் சிறிபால் டி சில்வா, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார ஆகியோர் பயணம் செய்த உலங்குவானூர்தி, விப த்து ஒன்றில் இருந்து தப்பி யுள்ளது.

ஆழிப்பேரலைக்கு இரையா னோரை நினைவு கூரும் அரசின் பிரதான நிகழ்வு பதுளையில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற் றது.

இதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கத் திட்டமிட்டி ருந்தார்.

ஆனால் அவர் அதில் பங் கேற்க முடியாது போனதால், அவருக்குப் பதிலாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, சப்ர கமுவ மாகாண ஆளுநர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார ஆகி யோர் கொழும்பில் இருந்து விமானப்படை உலங்குவானூர்தி ஒன்றில் பதுளைக்குப் புறப்பட்ட னர்.

பதுளையில் ஒரு மைதானத் தில் உலங்குவானூர்தியை தரை யிறக்குவதற்கு விமானி முயற் சித்தார்.

ஆனால், அடர்ந்து காணப் பட்ட மேகக் கூட்டத்தினால் அவ ரால் தரையிறக்க வேண்டிய இடத்தை சரியாக கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் அவர் கடுமையாகப் போராடிக் கொண் டிருந்தார்.

இந்தநிலையில், ... வூானூர்தியில் இருந்த ... ஆளுநர் லொக்குபண்ட... ஓதத் தொடங்கினார்.

நீண்டநேர கடும் பிர... களுக்குப் பின்னர், ஒரு... தரையிறக்க வேண்டிய ... விமானி கண்டுபிடித்ததா... த்தம் தவிர்க்கப்பட்டதாக... கள் தெரிவிக்கின்றன.

உலங்குவானூர்தி ... பாக தரையிறங்கியதும்... ஓதி அதைப் பாதுகாப்பா... யிறக்கியதற்காக லொ... டாரவுக்கு எல்லோரும்... கூறியதாவும், விமானிக்... ரும் நன்றி கூறவில்லை... கொழும்பு ஊடகம் ஒன்று... வெளியிட்டுள்ளது.

# அரசதுறையில் நிலவும் வெற்றிட... தகுதியானவரை தேடுவதில் சிக்க...

பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச துறையில் பல்வேறு வெற்றிடங்கள் நிலவுகின்றன. அந்த வெற்றிடங்களை நிரப்பு வதற்காக தகுதியான நபர்களை தேடிக்கொள்வதில் அரசாங்கம் சிக்கல்களை எதிர்கொள்வதாக பாதுகாப்பு அமைச்சின் செயலா ளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

குருநாகல் டி.எஸ்.சேனா நாயக்க வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரச துறையில் இளம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு கூடுதலான வேலை வாய்ப்புகள் இருக்கின்றன. இவ்வாறான வேலை வாய்ப்புகள் இருந்தும் முக்கியமான துறைகளில் இணைந்து கொள்வதற்கு தயக் கம் காட்டுகின்றனர்.

அரசாங்கத்தில் பல்வேறு துறைகளில் வெற்றிடங்கள் நில வுகின்றன. அந்த வெற்றிடங்க ளுக்கு தகுதியான நப... தேடிக்கொள்வதில் அர... பல்வேறு சிக்கல்களை... கொண்டு வருகின்றது. ... டில் பொறியியலாளர்... றாக்குறை நிலவுகின்ற... துவ தொழிலில் இ... கொள்வதற்கு இளைஞர் ... கள் தயக்கம் காட்டுகி... என அவர் மேலும் தெரிவி...

# சிறுவர் போராளிகள் இலங்கையில் இல்...

(கொழும்பு)

இலங்கையில் சிறுவர் போரா ளிகள் கிடையாது என ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள் ளது. 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்ததனைத் தொடர்ந்து சிறுவர் போராளிகள் முற்று முழுதாக கிடையாது என தெரி வித்துள்ளது.

இலங்கையில் சிறுவர் போரா ளிகள் தொடர்பான நிலை... குறித்த அறிக்கையை மு... குக் கொண்டு வரும் ஐ... நாடுகள் அமைப்பின் வ... திட்ட யோசனை அண்மை... நிறைவேற்றப்பட்டுள்ளது.

சிறுவர் போராளிகளு... புனர்வாழ்வு அளித்து சமூ... டன் மீள இணைக்கப்பட்டு... தாகக் குறிப்பிட்டுள்ளது.

# வட்டாரங்களாக பிரிபடும் உள்ளூராட்சி மன்றங்கள்

(கொழும்பு)

புதிய தேர்தல் சட்டமூலம் சீர் திருத்தப்படுகின்றமைக்கமைய உள்ளூராட்சி மன்றங்கள் வட்டா ரங்களாக பிரிக்கப்படும் நடவடிக் கைகள் தற்போது இடம்பெற்று வருவதாக மாகாண சபை மற் றும் உள்ளூராட்சி மன்ற அமை ச்சு தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைகளை எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவுசெய்ய வுள்ளதாகப் பிரதி அமைச்சர் இந்திக்க பண்டாரநாயக்க தெரி வித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்கள் வட் டாரங்களாக பிரிக்கப்படுவதற் கான பிரேரணை நாடாளுமன் றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதற் கான அனுமதி கிடைத்துள்ளதாக வும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதற்கான தேசிய குழு வொன்றை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருவதாக பிரதி அமைச் சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தேசிய குழுவின் தலைவராக ஜயலத் திஸாநாயக் கவும், குழுவின் செயலாளராக மாகாண சபை மற்றும் உள்ளூ ராட்சி மன்ற அமைச்சின் செய லாளர் கடமையாற்றவுள்ளதாக வும் அவர் தெரிவித்துள்ளார்.

# 750 குடும்பங்கள் யாழில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

மழை, வெள்ளம் காரணமாக யாழ். மாவட்டத்தில் 750 குடும் பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரி வித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசா தாரண காலநிலை காரணமாக 5 பிரதேச செயலகப் பிரிவுகளி லும் நேற்று முன்தினம் வரை 750 குடும்பங்களைச் சேர்ந்த 3265 அங்கத்தவர்கள் பாதிக்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் அந்தந்த பிரதேச செயலகங்க ளூடாக நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றதாகவும் யாழ். மாவட்ட அரச அதிபர் மேலும் கூறினார். (25)

# வவுனிக்குளத்தின் வான்பாய்வு ஒரு அடியாகக் குறைந்தது

(வவுனிக்குளம்)

வன்னியில் நேற்றைய தினம் மழை ஓய்ந்த நிலையில் வவு னிக்குளத்தின் நீர்ப்பாசனத் திணைக்களப் பிரிவிலுள்ள 13 குளங்களிலும் வான்பாயும் அள வுகளும் குறைந்துள்ள்தாக வவு னிக்குள நீர்பாசன பொறியிய லாளர் விகர்ணன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

வவுனிக்குளம் நீர் கொள்ள ளவு 24 அடியாகும். ஆனால் வவுனியா மற்றும் வன்னிப் பகுதியில் பெய்த பலத்த மழை காரணமாக குளங்களுக்கான நீர் வரத்து அதிகரித்த நிலையில் வவுனிக்குளத்தின் நீர்மட்டம் 28 அடியாக உயர்ந்திருந்த நிலை யில் வான்பாய்ந்தது.

எனினும் நேற்றைய தினம் வவுனிக்குளம் ஒரு அடியே வான்பாய்கிறது. அதேபோன்று பழைய முறிகண்டி, தேறாங் கண்டல், அம்பலப்பெருமாள், தென்னியங்குளம் ஆகியனவும் வான்பாயும் அளவு குறைந்துள் ளது.

வரலாற்றில் முதன்முறையாக இவ்வருடமே வவுனிக்குளம் 4 அடியாக வான்பாய்ந்துள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

# இந்திய ஊசி மருந்துக் குப்பிக... சுகாதார அமைச்சு தடை விதிப்...

(கொழும்பு)

நாட்டில் சகல வைத்திய சாலைகளிலும் இந்தியாவிலி ருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தொகுதி ஊசி மருந்துக் குப் பிகளை பாவனை செய்வதற்கு சுகாதார அமைச்சு தடை விதித் துள்ளதாக அறிவித்துள்ளது.

களுபோவில போதனா வைத் தியசாலையில் ஊசி மருந்துக் குப்பியொன்றிலிருந்து கண்ணா டித் துண்டொன்று கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர் ந்தே இந்நடவடிக்கையை சுகா தார அமைச்சு மேற்கொண்... ளது.

குறித்த தொகுதி சார்ந்த ... மருந்துக் குப்பிகள் பயன்... தப்படுவதை உடனடியா... தடை செய்வதற்குரிய நட... க்கை எடுக்கப்பட்டுள்ளதாக ... தார அமைச்சு தெரிவித்துள்...

கண்டு பிடிக்கப்பட்ட மரு... னைத் தொடர்ந்து மேல... வி... ரணைக்காக குறித்த ... தாத... மருந்துகளை அனுப்பிவைத்து... ளோம் என அதிகாரியொரு... கூறினார்.